பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் | 1 |
| 2. | இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை மற்றும் அன்னாரது உண்மைத்துவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்கள் | 4 |
| 3. | இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகள் | 5 |
| 4. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து... | 6 |
| 5. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தொடரப்பட்ட ஏழு வழக்குகளும் அன்னாரின் உண்மைக்கான ஏழு அடையாளங்களும் | 10 |
| 6. | ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எதிரிகளின் எச்சரிக்கையான முடிவு | 19 |
| 7. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை - இறைவன் மீதும், திருக்குர்ஆன் மீதும் இறைதூதர் மீதும் கொண்டிருந்த அன்பு என்ற ஒளியில் | 25 |
| 8. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) வாழ்க்கை வரலாறு | 35 |


لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இந்த சிறப்பிதழிற்கு “ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம்” என்ற தலைப்பிற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் தமது பல பணிகளுக்கு மத்தியிலும் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய தூதுச் செய்தியை அனுப்பியுள்ளார்கள். இந்த தூதுச் செய்தி நிச்சயமாக வாசகர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் அறிவை அதிகரிக்கச் செய்யக் கூடியதாகவும் அமையும். நாம் ஹுஸூர் அவர்களது பரிவு மற்றும் அன்பிற்காக ஆழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் உளப்பூர்வமாக இவ்வாறு துஆவும் செய்கின்றோம்:

اَللّٰھُمَّ اَیِّدْ اِمَامَنَا بِرُوْحِ الْقُدُس وَبَارِكْ لَنَا فِیْ عُمُرِہٖ وَاَمْرِہٖ۔

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை அவர்களின் எழுத்துக்கள், அவர்களின் சொற்பொழிவுகள், அன்னாரது தோற்றம், அவர்களது நல்லொழுக்கங்கள், அன்னாரது சஹாபாக்கள், அன்னாரது குழந்தைகள் மேலும் அன்னாரிடம் காணப்பட்ட இறை அன்பின் வெளிப்பாடு, ரஸூலின் மீது கொண்டிருந்த அன்பு, திருக்குர்ஆன் மீது அன்னார் கொண்டிருந்த அன்பு, அன்னாரது முன்னறிவிப்புகள், அற்புதங்கள், துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகள், அன்னாரது ஞானம், மார்க்கத்திற்கான தொண்டு செய்தது, மனித குலத்துடன் பரிவுடன் நடந்து கொண்டது போன்ற பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இருக்கின்றது. அன்னாரது உண்மைத்துவம் பரந்து விரிந்துள்ளது. எனினும் வாசகர்களுக்கு அதிலிருந்து ஒரு சில துளிகளை முன்வைக்க நாம் முயற்சி செய்துள்ளோம். அன்னாரது உண்மைத்துவத்தை எடுத்துக் கூறுவதற்குப் பல அம்சங்கள் மற்றும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. நிச்சயமாக முழுவதுமாக அதனை இங்கு எடுத்துக் கூறப்படாமல் இருப்பதை நாம் உணர்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கான ஆதாரங்கள் மிக அதிகமாக நமக்கு காணக் கிடைக்கின்றன. எவர் ஒருவர் மன வேதனையுடன் சிந்திக்கும் ஒருவருக்கு அன்னாரது உண்மைத்துவம் அவர் மீது வெளிப்படும். எவர்கள் உண்மையான உள்ளத்துடன் சிந்தித்தார்களோ அவர்கள் உண்மையைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அன்னாரது ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் முன்னறிவிப்பிற்கிணங்க குறித்த நேரத்தில் தோன்றினார்கள். முஸ்லிம் சமுதாயத்திற்கு அன்னாரது தேவை இருந்தது. மேலும் முழு சமுதாயமும் அன்னாரது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. சமுதாயத்தின் சான்றோர்களின் முன்னறிவிப்பின்படி மஸீஹ், மஹ்தி பதினான்காம் நூற்றாண்டில் தோன்றுவார் என்று அந்த நேரத்தில் அனைவராலும் பேசப்பட்டு வந்தது. இதன் அடிப்படையில் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப அன்னார் குறித்த நேரத்தில் அதாவது 13–ஆம் நூற்றாண்டின் இறுதியில் 14–வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“நினைவில் கொள்ளுங்கள். எந்த நபர் இறங்க வேண்டியதிருந்ததோ அவர் குறித்த நேரத்தில் இறங்கி விட்டார். வேதங்களில் எழுதப்பட்டுள்ள அனைத்து விஷயங்களும் இன்று முழுமையடைந்து விட்டன. அனைத்து நபிமார்களின் புத்தகங்களும் இந்த காலம் பற்றிய ஆதாரத்தையே தருகின்றன. இந்த காலத்தில்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை அவசியமாகும் என்பது கிறிஸ்தவர்களின் கொள்கையாகும். அவர்களது நூல்களில் தெளிவாக, ஆதமிற்குப் பிறகு ஆறாயிரம் வருடத்தின் இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவார் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. எனவே ஆறாயிரம் வருடத்தின் இறுதியும் வந்து விட்டது.”

மேலும் எழுதப்பட்டுள்ளது: “அதாவது அதற்கு முன்பாக வால் நட்சத்திரம் வெளிப்படும். எனவே அது வெளிப்பட்டும் பல காலங்கள் கழிந்து விட்டன. மேலும், அந்த நாட்களில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ரமலான் மாதத்தில் கிரகணம் ஏற்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. இந்த முன்னறிவிப்பும் முழுமையாகி விட்டது. மேலும் அவரது காலத்தில் பிளேக் நோய் ஏற்படும். இது பற்றிய குறிப்பு இஞ்சீலிலும் இருக்கின்றது. எனவே பிளேக் நோய் தற்போது வரை நம்மைப் பின்தொடர்வதை விடவில்லை என்பதைப் பார்க்கின்றேன். மேலும் திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் முந்தைய நூல்களில், அவரது காலத்தில் ஒரு புதிய வாகனம் உருவாக்கப்பட்டு அது நெருப்பினால் இயங்கும். மேலும் அந்த நாட்களில் ஒட்டகம் கைவிடப்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியிலுள்ள இந்த நபிமொழிகள் சஹீஹ் புகாரியிலும், முஸ்லிமிலும் இருக்கின்றன. ஆகவே அந்த வாகனம் ரயில் ஆகும். அது வெளிப்பட்டு விட்டது.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றுவார் என்றும் எழுதப்பட்டுள்ளது. எனவே நூற்றாண்டின் 21 வருடங்களும் கடந்து விட்டன. எனவே இந்த அனைத்து அடையாளங்களுக்குப் பிறகும் எவர் என்னை நிராகரிப்பாரோ அவர் என்னை அல்ல; மாறாக, அனைத்து நபிமார்களையும் நிராகரிக்கின்றார். மேலும் அவர் இறைவனோடு சண்டையிடுகின்றார். அவர் பிறக்கமால் இருந்திருந்தால் அது அவருக்கு சிறந்ததாக இருந்திருக்கும்.” (தஸ்கரத்துஷ் ஷஹாததைன், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 24)

அல்லாஹ் தனது நடைமுறை மற்றும் வாக்குறுதிக்கேற்ப அன்னாருக்கு உதவி ஒத்தாசைகளை செய்தான். அன்னாருக்கு எதிராக செயல்பட்ட முஸ்லிம்களாக இருந்தாலும், இந்துவாக இருந்தாலும், ஆரியராக இருந்தாலும், கிறித்தவராக இருந்தாலும் அல்லது அனைவரும் ஒன்றாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ அன்னாரை ஒன்றுமில்லாமல் ஆக்குவதற்குரிய எந்த முயற்சியையும் விட்டு வைக்கவில்லை. ஆனால் அல்லாஹ்வின் உதவிகள் அன்னாரோடு எல்லா நேரமும் இருந்தது. அன்னார் பல முறை தமது எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாக தமது எதிரிகளுக்குப் புரிய வைத்தார்கள். அதாவது நான் பொய்யன் என்றால் ஏதாவதொரு பொய் நபிக்கு அல்லாஹ் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்திருப்பதாக ஆதாரத்தைத் தாருங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நான் மெய்யாகவே கூறுகின்றேன். எனக்கு எப்போது வஹீ இறங்க ஆரம்பித்ததோ அந்த காலத்தில் நான் இளைஞனாக இருந்தேன். இப்போது நான் முதுமையை அடைந்து விட்டேன். மேலும் ஏறக்குறைய எனது வயது எழுபதை அடைந்து விட்டது. மேலும் அந்த காலத்திலிருந்து ஏறக்குறைய 35 வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் என்னுடைய இறைவன் ஒரு நாள் கூட என்னை விட்டு தனியாக இருந்ததில்லை. அவன் தனது முன்னறிவிப்பிற்கேற்ப ஒரு உலகத்தை என் பக்கம் குனிய வைத்தான். நான் ஏழையாக இருந்தேன். அவன் எனக்கு இலட்சக்கணக்கான ரூபாயை வழங்கினான். மேலும் ஒவ்வொரு முபாஹிலாவிலும் எனக்கு வெற்றியை வழங்கினான். மேலும் எனது எண்ணற்ற துஆக்களை ஏற்றுக் கொண்டான். எனக்கு அவன் தந்த அருட்களை என்னால் எண்ணிப் பார்க்க முடியாது.

எனவே இறைவன் மீது இட்டுக்கட்டி கூறக்கூடிய ஒருவரைப் பற்றி அவன் அறிந்திருந்தும் அவன் அந்த நபரின் மீது இந்த அளவிற்கு பேரருள் செய்வானா? ஆனால் நானோ எனது எதிரிகளின் பார்வையில் ஏறக்குறைய 30,32 வருடங்களாக இறைவன் மீது இட்டுக்கட்டி கூறுபவனாக இருக்கின்றேன். மேலும் ஒவ்வொரு இரவும் என் தரப்பிலிருந்து ஒரு புதிய வார்த்தைகளை ஆயத்தம் செய்து, காலையில் இது இறைவனது வார்த்தையாகும் என்று கூறுகின்றேன்.

இவ்வாறிருந்தும், இறைவன் என்னோடு எவ்வாறு நடந்து கொள்கின்றான் என்றால், தமது எண்ணத்தில் நம்பிக்கையாளர்கள் என்று கருதுகின்றவர்களுக்கு எதிராக எனக்கு வெற்றியை வழங்குகின்றான். மேலும் முபாஹிலாவின் சந்தர்ப்பத்தில் எனக்கு எதிராக இருக்கின்றவர்களை அழித்து விடுகின்றான். மேலும் இழிவடையச் செய்கின்றான். மேலும் தனது வாக்குறுதிக்கேற்ப ஒரு உலகையே என் பக்கம் கொண்டு வருகின்றான். மேலும் ஆயிரக்கணக்கான அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான்.

மேலும் ஒவ்வொரு களத்திலும், ஒவ்வொரு அம்சத்திலும், மேலும் ஒவ்வொரு துன்பத்தின் சந்தர்ப்பத்திலும் எனக்கு அவன் உதவி செய்கின்றான். எப்போது வரை அவனது பார்வையில் எவர் ஒருவர் உண்மையாளராக இருப்பதில்லையோ அதுவரை இப்படிப்பட்ட உதவிகளை அவன் ஒருபோதும் செய்வதில்லை. மேலும் இப்படிப்பட்ட அடையாளங்களை அவன் ஒருபோதும் வெளிப்படுத்த மாட்டான்.''

(ஹகீகத்துல் வஹீ, தொகுதி 22 பக்கம் 461)

அன்னாருக்கு எத்தகைய எதிர்ப்பு இருந்தது என்றால் சில பக்கங்களில் அதனை எடுத்துக் கூறுவது சாத்தியமற்றதாகும். இந்தியாவில் 200 ஆலிம்களிடமிருந்து அன்னாரின் மீது குஃப்ர் ஃபத்வா வழங்கப்பட்டது. மக்காவிலிருந்து கூட குஃப்ர் ஃபத்வா வரவழைக்கப்பட்டது. கொல்லப்படுவதற்குத் தகுதியானவர் என்று நிர்ணயிக்கப்பட்டது. சந்திப்பது, ஸலாம் கூறுவதிலிருந்து தடை செய்யப்பட்டது. அபாயகரமான வழக்குகள் தொடரப்பட்டன. கடிதங்களிலும், எழுத்துக்களிலும், சொற்பொழிவுகளிலும் ஏச்சுப் பேச்சுக்கள் வசைமாறிப் பொழியப்பட்டன. ஆனால் முடிவு என்னாவயிற்று? அன்னார் தனித்தவராக இருந்தார்கள். அல்லாஹ் ஒரு ஜமாஅத்தை அன்னாருக்கு வழங்கினான். பிறகு இந்த ஜமாஅத் முழு பஞ்சாபிலும் பரவியது. பிறகு முழு இந்தியாவிலும் பரவியது. பிறகு இந்தியாவிற்கு வெளியே ஐரோப்பா, அமெரிக்கா போன்ற தொலைதூர நாடுகளிலுள்ள நல்லுள்ளம் கொண்ட மக்கள் அன்னாரை ஏற்றுக் கொண்டார்கள். அன்னாரது வாழ்க்கையிலேயே அல்லாஹ் அன்னாரது ஜமாஅத்தின் எண்ணிக்கையை இலட்சமாக ஆக்கினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''அப்துல் ஹக் கஸனவி எழுந்தான். எனக்கு எதிராக முபாஹிலா செய்து துஆ செய்தான். எவர் பொய்யராக இருப்பாரோ அவர் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டுமாக. அருட்களிலிருந்து பாக்கியம் இழந்தவராக இருப்பாராக. உலகத்தில் அவரது ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்த அடையாளமும் எஞ்சியிருக்கக்கூடாது என்று துஆ செய்தான்.

ஆனால் அந்த துஆக்களின் விளைவு என்னவாயிற்று? மேலும் அவர் எந்த நிலையில் இருக்கின்றார்? நாம் எந்த நிலையில் இருக்கின்றோம்? என்று நீங்களே பாருங்கள்.

பாருங்கள்! இந்த முபாஹிலாவிற்குப் பிறகு ஒவ்வொரு விஷயத்திலும் இறைவன் நமக்கு முன்னேற்றத்தை வழங்கினான். மேலும் வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் பெரிய பெரிய அடையாளங்களை வெளிப்படுத்தினான். மேலும் ஒரு உலகத்தை என் பக்கம் குனிய வைத்தான். முபாஹிலா நடைபெற்ற போது நாற்பது நண்பர்கள்தான் என்னுடன் இருந்திருப்பார்கள். இன்று அந்த எண்ணிக்கை ஏறக்குறைய எழுபது ஆயிரம் ஆகும்.''

(பைகாமே சுலஹ் என்ற நூலில் ஹுஸூர் அவர்கள் தமது ஜமாஅத்தின் எண்ணிக்கை நான்கு இலட்சம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்)

''மேலும் இப்போது வரை இரண்டு இலட்சத்திற்கும் அதிகம் எனக்கு பொருளாதார வெற்றி கிடைத்துள்ளது. மேலும் ஒரு உலகத்தை ஓர் அடிமையைப் போன்று என்னை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆக்கி விட்டான். மேலும் பூமியின் எல்லைகள் வரை என்னை பிரபல்யமாக்கினான்.

இதன் ரசனை எப்போது ஏற்படும் என்றால், நீங்கள் காதியானிற்கு வாருங்கள். மேலும் என்னை ஏற்றுக் கொண்டவர்களின் படை எவ்வாறு ஒரு கூடாரத்தில் இந்த இடத்தில் இருக்கின்றது. மேலும் அமிர்தசரஸில் அப்துல் ஹக் கஸனவியை ஏதாவதொரு கடையிலோ அல்லது பஜாரிலோ சென்று கொண்டிருப்பதையும் அவர் எந்த நிலையில் செல்கின்றார் என்பதையும் பாருங்கள். வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இறைவனது ஆற்றல் வெளிப்படையாகவே எனக்கு உதவி செய்யும் பொருட்டு வானத்திலிருந்து இறங்குகின்றது. ஆனால் இந்த மக்கள் அடையாளம் கண்டு கொள்வதில்லை.''

(நுஸூலுல் மஸீஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 410)

எதிரிகள் தமது எதிர்ப்பில் தோல்வியை மட்டும் அடையவில்லை. மாறாக, அல்லாஹ் அன்னாருக்கு வெற்றியை வழங்கிக் கொண்டே இருந்தான். இன்னும் சொல்வதென்றால், இதுவும் சிந்தித்துப் பார்ப்பதற்குரிய விஷயமாகும். அதாவது எதிரிகளில் அன்னாருக்கு எதிராக தீய துஆக்களை செய்தவர்கள், அன்னாரது மரணத்தை விரும்பியவர்கள், அன்னார் மீது சாபமிட்டவர்கள், அன்னரோடு முபாஹிலா செய்தவர்கள், அன்னாரது எதிர்ப்பில் உச்சத்தை எட்டியவர்கள் எல்லாம் அன்னாரது வாழ்க்கையிலேயே அழிந்து போயினர். மேலும் எவர்கள் உயிரோடு இருந்தார்களோ அவர்கள் எந்த அளவுக்கு இழிவடைந்தார்கள் என்றால் அவர்களது வாழ்வும் கூட மரணத்தை விட மோசமானதாக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''சிலர் நான் மரணிக்க வேண்டும் என்பதற்காக பள்ளிவாயிலில் மூக்கைத் தேய்த்துக் கொண்டிருந்தார்கள். மவ்லவி குலாம் தஸ்தகீர் கஸூரி போன்றோர் தமது நூல்களில் மேலும் மவ்லவி இஸ்மாயீல் அலி அலிகட் என் தொடர்பாக, அவர் பொய்யர் என்றால் நமக்கு முன்பே அவர் மரணித்து விடுவார். நிச்சயமாக நமக்கு முன்பே அவர் மரணித்து விடுவார். ஏனென்றால் அவர் பொய்யர் ஆவார் என்று எழுதியிருந்தனர்.

இந்த பதிப்புகள் உலகத்தில் அச்சிடப்பட்ட பிறகு விரைவிலேயே அவர்கள் மரணித்து விட்டார்கள். இவ்வாறு அவர்களது மரணம் யார் பொய்யர்? என்பதற்கான தீர்ப்பை வழங்கி விட்டது. பிறகும் கூட இந்த மக்கள் படிப்பினை பெறுவதில்லை.

என்ன இது மகத்தான அற்புதம் இல்லையா? அதாவது முஹையுத்தீன் என் தொடர்பாக மரணமடைந்து விடுவேன் என்று இல்ஹாமை வெளியிட்டார். ஆனால் அவர் மரணித்து விட்டார். மவ்லவி இஸ்மாயீலும் வெளியிட்டார். அவரும் மரணித்து விட்டார். மவ்லவி குலாம் தஸ்தகீர் ஒரு நூலை எழுதி அதில் தாம் மரணிப்பதற்கு முன்பாக என்னுடைய மரணம் தொடர்பாக எழுதினார். ஆனால் அவர் மரணித்து விட்டார். பெஷாவரைச் சார்ந்த பாதிரி ஹமீதுல்லாஹ் என்பவர் எனது மரணம் தொடர்பாக அவர் பத்து மாதத்திற்கு மரணித்து விடுவார் என்று காலக்கெடு வழங்கி அந்த முன்னறிவிப்பை வெளியிட்டார். அவரும் மரணித்து விட்டார். இவ்வாறே லேக்ராமும் எனது மரணம் தொடர்பாக மூன்று வருடத்தில் மரணிப்பார் என்று காலக்கெடுவை நிர்ணயித்து வெளியிட்டார் அவரும் மரணித்து விட்டார்.''

(தொஹ்பா கோல்டவியா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 45)

திருக்குர்ஆனிற்கேற்ப பொய் நபியை அல்லாஹ் அழித்து விடுகின்றான். அவருக்கு வெற்றியின் முகத்தை அவன் காட்டுவதில்லை. அன்னார் பொய்யராக இருந்திருந்தால் அல்லாஹ் அன்னாரை அழித்திருக்க வேண்டும். ஆனால் அல்லாஹ் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒவ்வொரு களத்திலும், அன்னாருக்கு வெற்றியை வழங்கினான். மேலும் எதிரிகளை ஏளனமும், இழிவும் அடையச் செய்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நான் இதை கூறுகின்றேன். அதாவது எவர் ஒருவர் தமக்கு இல்ஹாம் வருவதாக இறைவன் மீது இட்டுக்கட்டி கூறி ஆனால் உண்மையில் அந்த இல்ஹாம் அவருக்கு வரவில்லை என்றால் அவர் விரைவாக பிடிக்கப்படுவார். அவரது வயதின் நாட்கள் மிகக் குறைவாகவே இருக்கும். திருக்குர்ஆன், இஞ்ஜீல் மற்றும் தவ்ராத் போன்றவை இந்த சாட்சியத்தையே வழங்குகின்றன. மேலும் அறிவும் இந்த சாட்சியையே வழங்குகின்றது.

இதற்கு நேர்மாற்றமாக எவரும் வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் எந்தவொரு சான்றையும் தர முடியாது. மேலும் இல்ஹாம் வருவதாகப் பொய்யாக வாதம் செய்யக்கூடியவர் 25 வருடங்கள் அல்லது 18 வருடங்கள் வரை பொய்யான இல்ஹாமை பூமியில் பரப்பிக் கொண்டிருக்கிறார்.

மேலும் பொய்யாக தம்மை இறைவனால் நியமிக்கப்பட்டவர் என்றும், இறைவனால் அனுப்பப்பட்டவர் என்றும் தமது பெயரை வைத்துக் கொண்டு அவர் பல வருடங்களாக தமக்கு இறைவன் புறமிருந்து வஹீ வருகின்றது என்று கூறிவருகின்றார் என்றால் பிறகு அத்தகைய நபர் தனது குற்றத்திற்குரிய செயலினால் பிடிக்கப்படாமல் இருந்தார் என்று காட்ட முடியுமா? நமது எதிரிகளில் எவராவது இந்த கேள்விக்கான பதிலைத் தருவாரா? தருவார் என்று நம்புகிறோம்.

இதற்கான பதிலைத் தர இயலாது என்பதை அவர்களது உள்ளம் அறியும். பிறகும் கூட நிராகரிப்பதிலிருந்து அவர்கள் விலகுவதில்லை. மாறாக, பல ஆதாரங்கள் மூலம் அவர்கள் மீது அத்தாட்சிகள் முழுமையாகி விட்டன. ஆனால் அவர்களோ கவனமற்ற நிலையில் கனவு கண்டவர்களாக தூங்கி கொண்டிருக்கின்றார்கள்.

(அய்யாமுஸ் ஸுலஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 267)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''இறுதியாக நான் உண்மையைத் தேடக்கூடிய ஒவ்வொருவருக்கும் நினைவூட்டுகின்றேன். மார்க்கத்தின் அந்த உண்மைக்கான அடையாளங்களும், இஸ்லாத்தின் உண்மைக்கான வானத்து சாட்சிகளும் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இதைப் பற்றிய ஞானத்தைப் பார்வையற்ற நமது ஆலிம்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். நான் அனுப்பப்பட்டுள்ளேன். இஸ்லாம்தான் உண்மையான மார்க்கம் என்பதை நான் நிரூபிப்பேன். எனக்கு எத்தகைய அற்புதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றால் அதற்கெதிரில் பிற மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கும், நமது உட்புற குருட்டு எதிரிகளுக்கும் வழங்கப்படவில்லை....

நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு உண்மையான அன்பை வைப்பதும், அவர்களை உண்மையான முறையில் பின்பற்றுவதும் மனிதனை அற்புதங்களைப் பெறக் கூடியவனாக ஆக்கி விடுகின்றது. மேலும் அந்த நபரின் மீது மறைவான விஷயங்களின் கதவுகள் திறக்கப்படுகின்றன. மேலும் உலகத்திலுள்ள எந்தவொரு மார்க்கத்தைச் சார்ந்தவரும் ஆன்மீக அருட்களில் இதற்கெதிராக போட்டிபோட முடியாது. நான் இதில் அனுபவம் பெற்றவனாக இருக்கின்றேன்.

இஸ்லாத்தை தவிர மற்ற அனைத்து மார்க்கங்களும் மரணித்திருப்பதையும், அவர்களது கடவுள் மரணித்திருப்பதையும், அதனைப் பின்பற்றுபவர்களும் மரணித்திப்பதையும் நான் பார்க்கின்றேன். மேலும் இறைவனோடு உண்மையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஒருபோதும் சாத்தியமற்றது. ஒருபோதும் சாத்தியமற்றனது.

அறிவற்றவர்களே! மரணித்தவற்றை வணங்குவதில் உங்களுககு என்ன ரசனை இருக்கிறது? மேலும் மரணித்தவற்றை உண்பதில் என்ன ருசி இருக்கிறது? வாருங்கள்! நான் உங்களுக்கு உயிருள்ள இறைவன் எங்கு இருக்கின்றான், அவன் எந்த சமுதாயத்தோடு இருக்கின்றான், அவன் இஸ்லாம் மார்க்கத்தோடு இருக்கின்றான் என்பதை கூறுகின்றேன்.... இன்று அவன் ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் பேசுகின்றான். உங்களில் எவருக்கும் அந்த விஷயத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இல்லையா? நீங்கள் உண்மையைப் பெற்றால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

(ஸமீமா ரிஸாலா அன்ஜாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 345)

அல்லாஹ் நமது எதிரிகளின் உள்ளங்களைத் திறப்பானாக. மேலும் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கும், இறைவனது இயக்கத்தில் இணைவதற்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. **(மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)**

**124–வது காதியான் ஆண்டு மாநாடு வாழ்த்துக்கள்**

**பீ.ஜே. சுலைமான்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்,கோயம்புத்தூர்

# இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை மற்றும் அன்னாரது உண்மைத்துவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்கள்

۞ يُسَبِّحُ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ الْمَلِكِ الْقُدُّوْسِ الْعَزِيْزِ
الْحَكِيْمِ ○ هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ
وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۗ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ
مُّبِيْنٍ ○ وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ○ ذٰلِكَ
فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ○

பொருள்: வானங்களிலும், பூமியிலுமுள்ளவை எல்லாம் அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைக்கின்றன. அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு – அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் அவனது கட்டளைகளைப் படித்துக்காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.

மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்.) அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். இது அல்லாஹ்வின் அருளாகும். தான் விரும்புபவருக்கு அவன் அதனை வழங்குகின்றான். அல்லாஹ் பேரருள் உடையவனாவான். (62:2–

۞ وَاِذْ قَالَ عِيْسَى ابْنُ مَرْيَمَ يٰبَنِىْۤ اِسْرَآءِيْلَ اِنِّىْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ
مُّصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَىَّ مِنَ التَّوْرٰىةِ وَمُبَشِّرًۢا بِرَسُوْلٍ يَّاْتِىْ مِنْۢ بَعْدِى
اسْمُهٗۤ اَحْمَدُ ؕ فَلَمَّا جَآءَهُمْ بِالْبَيِّنٰتِ قَالُوْا هٰذَا سِحْرٌ مُّبِيْنٌ ○ وَمَنْ
اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ الْكَذِبَ وَهُوَ يُدْعٰۤى اِلَى الْاِسْلَامِ وَاللّٰهُ لَا
يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ ○ يُرِيْدُوْنَ لِيُطْفِـُٔوْا نُوْرَ اللّٰهِ بِاَفْوَاهِهِمْ وَاللّٰهُ 5
مُتِمُّ نُوْرِهٖ وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ ○ هُوَ الَّذِىْۤ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ
الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ ۙ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ ○

மர்யமின் மகன் ஈஸா தன் சமுதாயத்தினரிடம், இஸ்ராயீலின் மக்களே! நிச்சயமாக ந ான் எனக்கு முன்னர் தவ்ராத்தில் கூறப்பட்டதை நிறைவேற்றக் கூடியவனாகவும், எனக்குப் பின்னர் வரப்போகின்ற அஹ்மத் என்னும் பெயரைக் கொண்ட ஒரு தூதரைப் பற்றி நற்செய்தி வழங்குபவனாகவும் உங்களிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதராவேன் என்று கூறிய நேரத்தை (நினைத்துப் பாருங்கள்). பின்னர் அ(த்தூது)வர் தெளிவான சான்றுகளுடன் அவர்களிடம் வந்தபோது, இது மிகத் தெளிவான மந்திர வித்தையாகும் என்று அவர்கள் கூறினர்.

அவர் இஸ்லாத்தின்பால் அழைக்கப்படுகையில் அல்லாஹ்வுக்கு எதிராகப் பொய்யைப் புனைந்துரைப்பவனைவிட மிகவும் அநீதி இழைப்பவன் எவன்? அநீதி இழைத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை.

அவர்கள் தங்கள் வாய்களால் அல்லாஹ்வின் ஒளியை அணைத்து விட விரும்புகின்றனர். ஆனால் நிராகரிப்பவர்கள் (எவ்வளவு) வெறுத்த போதிலும் அல்லாஹ் தனது ஒளியை முழுமையாக ஆக்கியே தீருவான்.

அவனே தனது தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும் இதனை அவன் எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். (இறைவனுக்கு) இணை வைப்பவர்கள் (இதனை) எந்த அளவு வெறுத்தாலும் சரியே. (61:7–10)

۞ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى
الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۖ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ
الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِىْ لَا
يُشْرِكُوْنَ بِىْ شَيْـًٔا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ○

அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள். (24:56)

۞ وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْاَقَاوِيْلِ ○ لَاَخَذْنَا مِنْهُ بِالْيَمِيْنِ ○ ثُمَّ
لَقَطَعْنَا مِنْهُ الْوَتِيْنَ ○ فَمَا مِنْكُمْ مِّنْ اَحَدٍ عَنْهُ حٰجِزِيْنَ ○

அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது. (69:45–48)

۞ وَقَالَ رَجُلٌ مُّؤْمِنٌ ۖ مِّنْ اٰلِ فِرْعَوْنَ يَكْتُمُ اِيْمَانَهٗۤ اَتَقْتُلُوْنَ رَجُلًا
اَنْ يَّقُوْلَ رَبِّىَ اللّٰهُ وَقَدْ جَآءَكُمْ بِالْبَيِّنٰتِ مِنْ رَّبِّكُمْ ؕ وَاِنْ يَّكُ كَاذِبًا
فَعَلَيْهِ كَذِبُهٗ ۚ وَاِنْ يَّكُ صَادِقًا يُّصِبْكُمْ بَعْضُ الَّذِىْ يَعِدُكُمْ ؕ اِنَّ اللّٰهَ
لَا يَهْدِىْ مَنْ هُوَ مُسْرِفٌ كَذَّابٌ ○

ஃபிர்அவ்னின் சமுதாயத்தினருள் நம்பிக்கை கொண்டு அந்நம்பிக்கையை மறைத்து வைத்திருந்த ஒரு மனிதர் கூறினார்: என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலைச் செய்யப் போகின்றீர்களா? மேலும் அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளையும் கொண்டு வந்துள்ளார்.

அவர் பொய்யராக இருந்தால் அவரது பொய்யினால் விளையும் தீங்கு அவரையே சேரும். ஆனால் அவர் உண்மையாளராயின் அவர் உங்களுக்கு முன்னறிவித்தவைகளுள் சில தண்டனைகள் உங்களுக்கும் சேரும். நிச்சயமாக வரம்புகளை மீறுபவனுக்கும் பெரும் பொய்யனுக்கும் அல்லாஹ் நேர்வழி காட்டமாட்டான். (40:29)

# இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகள்

## இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் வருகை தொடர்பான முன்னறிவிப்பு

● يُوْشِكُ مَنْ عَاشَ مِنْكُمْ اَنْ يَّلْقٰى عِيْسَى بْنَ مَرْيَمَ اِمَامًا مَهْدِيًّا حَكَمًا عَدْلًا يَكْسِرُ الصَّلِيْبَ وَيَقْتُلُ الْخِنْزِيْرَ۔

உங்களில் உயிரோடு இருப்பவர் ஈஸப்னு மர்யமின் காலத்தை அடைவார். அவரே இமாம் மஹ்தியாகவும், நெறி நீதி தீர்ப்பவராகவும் இருப்பார். மேலும் அவர் சிலுவையை முறிப்பார். பன்றியைக் கொல்வார்.

(முஸ்னது அஹ்மது தொகுதி 2 பக்கம் 156 ஆதாரம்: ஹதீகத்துல் ஸாலிஹீன், முல்க் சைஃபுர் ரஹ்மான் சாஹிப் எழுதியது ஹதீஸ் எண் 948)

## இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தோற்றம் மற்றும் பணி

❁ عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اَلْاَنْبِيَآءُ اِخْوَةُ الْعَلَّاتِ اَبُوْهُمْ وَاحِدٌ وَاُمَّهَاتُهُمْ شَتّٰى وَاَنَا اَوْلَى النَّاسِ بِعِيْسَى ابْنِ مَرْيَمَ لِاَنَّهٗ لَمْ يَكُنْ بَيْنِيْ وَبَيْنَهٗ نَبِيٌّ وَاِنَّهٗ نَازِلٌ فَاِذَا رَاَيْتُمُوْهُ فَاعْرِفُوْهُ فَاِنَّهٗ رَجُلٌ مَرْبُوْعٌ اِلَى الْحُمْرَةِ وَالْبَيَاضِ سَبْطٌ كَاَنَّ رَاْسَهٗ يَقْطُرُ وَاِنْ لَمْ يُصِبْهُ بَلَلٌ بَيْنَ مُمَصَّرَتَيْنِ فَيَكْسِرُ الصَّلِيْبَ وَيَقْتُلُ الْخِنْزِيْرَ وَيَضَعُ الْجِزْيَةَ وَيُعَطِّلُ الْمِلَلَ حَتّٰى يُهْلِكَ اللّٰهُ فِيْ زَمَانِهِ الْمِلَلَ كُلَّهَا غَيْرَ الْاِسْلَامِ وَيُهْلِكُ اللّٰهُ فِيْ زَمَانِهِ الْمَسِيْحَ الدَّجَّالَ الْكَذَّابَ وَتَقَعُ الْاَمَنَةُ فِي الْاَرْضِ حَتّٰى تَرْتَعَ الْاِبِلُ مَعَ الْاُسْدِ جَمِيْعًا وَالنُّمُوْرُ مَعَ الْبَقَرِ وَالذِّئَابُ مَعَ الْغَنَمِ وَيَلْعَبَ الصِّبْيَانُ وَالْغِلْمَانُ بِالْحَيَّاتِ لَا يَضُرُّ بَعْضُهُمْ بَعْضًا فَيَمْكُثُ مَا شَآءَ اللّٰهُ اَنْ يَّمْكُثَ ثُمَّ يُتَوَفّٰى فَيُصَلِّيْ عَلَيْهِ الْمُسْلِمُوْنَ وَيَدْفِنُوْنَهٗ۔

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நபிமார்களுக்கு இடையே உள்ள தொடர்பு பால்குடி சகோதரர்களைப் போன்றதாகும். அவர்களின் தந்தை ஒருவரே. தாய்மார்கள் பலர் ஆவர். மக்களில் ஹஸ்ரத் ஈஸப்னு மர்யம் அவர்களுடன் எனக்கு எல்லாரையும் விட மிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஏனென்றால் எனக்கும் அவருக்கும் மத்தியில் எந்த நபியும் இல்லை. (இந்த ஆன்மீக நெருக்கத்தின் காரணமாக எனக்கு ஒப்பாக இருக்கும் அவர் கண்டிப்பாக இறங்குவார்.)

அவரை நீங்கள் காணும் போது அவரது அங்க அடையாளங்கள் மூலமாக அவரை இனங்கண்டு கொள்ளுங்கள். அவர் நடுத்தர உயரத்தை உடையவராக இருப்பார். சிவப்பும் வெள்ளையும் கலந்த நிறத்தை உடையவராவார். நேரான முடியை உடையவராவார். அவர் தண்ணீரைப் பயன்படுத்தாத நிலையில் அவருடைய தலையிலிருந்து தண்ணீர்த் துணிகள் விழுந்து கொண்டிருக்கும். அதாவது அவரது தலை முடியின் ஒளியின் காரணமாக அது ஈரமுள்ளதைப் போன்று தோன்றும்.

அவர் தோன்றி சிலுவையை முறிப்பார். அதாவது சிலுவை கொள்கையைப் பொய் என்று நிரூபிப்பார். பன்றியைக் கொல்வார்கள். அதாவது தீய ஆன்மாவைக் கொண்ட மக்களின் அழிவிற்குக் காரணமாக இருப்பார். அவர்கள் மூலமாக சிலுவைக் கொள்கை மிகைத்திருப்பது தடுத்து நிறுத்தப்படும். பன்றியின் இயல்புடைய மக்கள் அழிக்கப்படுவர். ஜிஸ்யா வரி நிறுத்தப்படும். அதாவது அந்த காலம் மார்க்கப் போர்கள் முடிவுக்கு வந்த விட்ட காலமாக இருக்கும். அந்த காலத்தில் இஸ்லாத்தைத் தவிர ஏனைய மதங்களை அவற்றின் ஆன்மீகத்தின் அடிப்படையிலும் அவற்றின் எழுச்சியின் அடிப்படையிலும் முற்றிலுமாக அல்லாஹ் அழித்து விடுவான். அவர் தஜ்ஜாலை அழித்து விடுவார்.

அவரது காலகட்டம் எந்த அளவு அமைதியான காலகட்டமாக இருக்குமென்றால் ஒட்டகம் சிங்கத்துடனும், சிறுத்தை பசுக்களுடனும், ஓநாய் ஆடுகளுடனும் ஒன்றாக சேர்ந்து மேயும். சிறுவர்களும் பெரிய வயதுடைய இளைஞர்களும் பாம்புகளுடன் விளையாடுவர். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப எவ்வளவு காலம் மஸீஹ் உலகில் இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புவானோ அவ்வளவு காலம் மஸீஹ் உலகில் இருப்பார். பிறகு அவர் வஃபாத் ஆகி விடுவார். முஸ்லிம்கள் அவரது ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்வர். பிறகு அவரை அடக்கம் செய்வர்.

(ஆதாரம் : அபுதாவூது கிதாபுல் மலாஹிம் பாப் ஹுரூஜுத் தஜ்ஜால் பக்கம் 594, முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 437, ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன் ஹதீஸ் எண் 945)

## வரக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக இருப்பார்

● اَلَا اِنَّ عِيْسَى بْنَ مَرْيَمَ لَيْسَ بَيْنِيْ وَبَيْنَهٗ نَبِيٌّ وَلَا رَسُوْلٌ، اَلَا اِنَّهٗ خَلِيْفَتِيْ فِيْ اُمَّتِيْ مِنْ بَعْدِيْ، اَلَا اِنَّهٗ يَقْتُلُ الدَّجَّالَ وَيَكْسِرُ الصَّلِيْبَ وَيَضَعُ الْجِزْيَةَ، وَتَضَعُ الْحَرْبُ اَوْزَارَهَا اَلَا مَنْ اَدْرَكَهٗ فَلْيَقْرَأْ عَلَيْهِ السَّلَامَ۔

ஈஸப்னு மர்யத்திற்கும் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) எனக்கும் இடையில் எந்த நபியோ ரஸூலோ கிடையாது. நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அவர் எனக்குப் பிறகு எனது உம்மத்தில் கலீஃபாவாக இருப்பார். நிச்சயமாக அவர் தஜ்ஜாலை கொலை செய்வார். சிலுவையை (அதாவது சிலுவைக் கொள்கைளை) முறிப்பார். ஜிஸ்யாவை முடிவுக்கு கொண்டு வருவார்.

(அதாவது அந்த நடைமுறை இருக்காது. ஏனென்றால்) அந்த நேரத்தில் (மார்க்கப்) போர்கள் முடிவுக்கு வரும். நினைவில் கொள்ளுங்கள். எவருக்கு அவரை சந்திப்பதற்கான பாக்கியம் கிடைக்குமோ அவர் எனது ஸலாத்தை அவருக்குக் கண்டிப்பாக எட்ட வைக்கவும்.

(திப்ரானி அல் அவ்ஸத்துஸ் ஸகீர்)

## இமாம் மஹ்தியிடம் பைஅத் செய்வதற்கான கட்டளை

● فَاِذَا رَاَيْتُمُوْهُ فَبَايِعُوْهُ وَلَوْ حَبْوًا عَلَى الثَّلْجِ فَاِنَّهٗ خَلِيْفَةُ اللّٰهِ الْمَهْدِيُّ۔

முஸ்லிம்களே! அவரது வருகையைப் பற்றிய அறிவு உங்களுக்கு கிடைத்து விட்டால் பனி மலைகளில் தவழ்ந்து செல்ல நேரிட்டாலும் சென்று உடனடியாக அவரிடம் பைஅத் செய்யுங்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் கலீஃபாவாகவும் மஹ்தியாகவும் இருப்பார்.

(அபூதாவூது, பாப் ஹுரூஜுல் மஹ்தி)

**நான் இறைவனின் நிழலான, பிரதிபிம்பமான நபியாவேன். மார்க்க விஷயத்தில் என்னைப் பின்பற்றுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வாஜிபாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்வது வாஜிபாகும். மேலும் எவருக்கு எனது தூதுச் செய்தி எட்டியுள்ளதோ அவர் முஸ்லிமாக இருந்தாலும் என்னைத் தனது நெறி நீதித் தீர்ப்பு வழங்குபவராக ஏற்கவில்லையென்றால், என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஏற்கவில்லையென்றால், எனது வஹியை இறைவன் புறமிருந்து வந்ததாகக் கருதவில்லையென்றால் அவர் விண்ணில் பிடிக்கப்படுவார்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### அல்லாஹ் மற்றும் ரஸூலின் கூற்றுக்கு எதிராக எனது எந்தக் கொள்கையும் இல்லை

நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான் காஃபிர் அல்லன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஆவான் என்பது எனது கொள்கையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி 'வலாகிர் ரஸூலல்லாஹி வ காத்தமன் நபிய்யீன்' (அவர்கள் நபிமார்களுக்கு முத்திரை ஆவார்) என்பது எனது ஈமான் ஆகும்.

நான் எனது இந்த வாக்குமூலத்தின் உண்மைக்கு சான்றாக இறைவனுக்கு எத்தனை தூய பெயர்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு திருக்குர்ஆனில் எழுத்துக்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு இறைவனின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மேன்மைகள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன்.

அல்லாஹ் மற்றும் ரஸூலின் கூற்றுக்கு எதிராக எனது எந்தக் கொள்கையும் இல்லை. எவர் அவ்வாறு கருதுகிறாரோ அது அவருடைய சொந்த தவறான எண்ணமாகும். எவர் இப்போதும் என்னை காஃபிர் எனக் கருதுகிறாரோ, காஃபிர் எனக் கூறுவதிலிருந்து விலக மாட்டாரோ அவர் மரணத்திற்குப் பிறகு கேள்வி கேட்கப்படுவார் என உறுதியாக நினைவில் கொள்ளட்டும். இறைவன் மீதும், இறைதூதர் மீதும் எல்லா மக்களுக்கும் இருக்கும் ஈமானை தராசின் ஒரு தட்டிலும், எனது ஈமானை இன்னொரு தட்டிலும் வைத்தால் அல்லாஹ்வின் அருளால் எனது இந்தத் தட்டுதான் அதிக எடையுள்ளதாக இருக்கும் என நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்.

(கராமாத்துஸ் ஸாதிகீன் பக்கம் 25 ரூஹானி கஸாயின் தொகுதி 7 பக்கம் 67)

### இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப இந்த எளியவனை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பதில் அனுப்பியுள்ளான். மேலும் சிலுவை மார்க்கத்தை உடைப்பதற்கு அந்த விண்ணின் ஆயுதத்தை எனக்கு வழங்கியுள்ளான்

இறைவன் வழிகேடு மற்றும் குழப்பம் நிலைபெற்றிருக்கும் குறிப்பிட்ட இந்த நேரத்தில் இந்த எளியவனை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் படைப்பின சீர்திருத்தத்திற்காக முஜத்திதாக அனுப்பியுள்ளான். இந்த நூற்றாண்டில் இஸ்லாத்திற்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய மிகப்பெரிய குழப்பம் கிறிஸ்தவ பாதிரிகளின் குழப்பமாகும்.

ஆகையால் இறைவன் இந்த எளியவனின் பெயரை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என வைத்துள்ளான். மேலும் இந்த பெயர் அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அதே பெயராகும்.

இறைவனிடமிருந்து அதாவது திரித்துவ கொள்கையை வெற்றி கொள்ளும் காலத்தில் இந்த பெயரில் ஒரு முஜத்தித் வருவார் என்ற வாக்குறுதியும் உள்ளது. அவர்தான் சிலுவையை உடைப்பார் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகையால் சஹீஹ் புகாரி ஹதீஸில் இந்த முஜத்திதிற்கு இதே விளக்கம்தான் தரப்பட்டுள்ளது. அதாவது அவர் முஹம்மதிய்ய உம்மத்தில் இருந்து அவர்களுக்கு ஓர் இமாமாக இருப்பார். சிலுவையை முறிப்பார். இது அவர் சிலுவை மதத்தினை வெற்றி கொள்ளும் காலத்தில் வருவார் என்பதனை சுட்டிக் காட்டக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப அவ்வாறே செய்துள்ளான். இந்த எளியவனை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பியுள்ளான். மேலும் நான் சிலுவை மார்க்கத்தை உடைப்பதற்கு அந்த விண்ணின் ஆயுதத்தை எனக்கு வழங்கியுள்ளான்.

(கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 358)

### இந்த காலத்தின் இமாம் நான் ஆவேன். என்னிடம் இறைவன் அனைத்து அடையாளங்களையும், அனைத்து நிபந்தனைகளையும் ஒன்று சேர்த்துள்ளான். மேலும் இந்த நூற்றாண்டின் துவக்கதில் என்னை அனுப்பியுள்ளான். அதில் பதினைந்து வருட காலம் கழிந்தும் விட்டது. நான் ஆன்மீக ரீதியில் சிலுவையை உடைப்பதற்காகவும், கருத்து வேறுபாடுகளைக் களைவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன்

இக்காலகட்டத்திற்கான இமாம் யார்? என்ற கேள்வி எஞ்சியுள்ளது. மேலும் எவரைப் பின்பற்றுவது எல்லா சாமானிய முஸ்லிம்கள், சான்றோர்கள், நல்ல கனவு காண்பவர்கள், இறையறிவிப்புப் பெறக் கூடியவர்கள் ஆகியோருக்கு இறைவன் புறமிருந்து கடமையாக்கப்பட்டுள்ளதோ அவர் யார்? ஆகவே நான் இப்போது சற்றும் தாமதிக்காமல் கூறுகிறேன். இறைவன் அருளால் இந்த காலத்தின் இமாம் நான் ஆவேன். என்னிடம் இறைவன் எல்லா அடையாளங்களையும் அனைத்து நிபந்தனைகளையும் ஒன்று சேர்த்துள்ளான். மேலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்ததில் என்னை அனுப்பியுள்ளான். அதில் பதினைந்து வருட காலம் கழிந்தும் விட்டன. இஸ்லாத்தின் கொள்கைகள் எல்லாம் கருத்து வேறுபாடுகளால் நிறைந்து விட்டது. கருத்து வேற்றுமை காணப்படாத எந்தக் கொள்கையுமில்லை. இப்படிப்பட்ட காலத்தில்தான் நான் தோன்றியுள்ளேன்.

அவ்வாறே மஸீஹின் வருகை குறித்தும் மிகவும் தவறான சிந்தனை பரவி விட்டது. இந்த கொள்கையிலும் கருத்து வேறுபாட்டின் நிலை எப்படி இருக்கிறதென்றால் சிலர் ஹஸ்ரத் ஈஸா உயிருடன் இருப்பதாக நம்புகின்றனர். இன்னும் சிலர் இறந்து விட்டதாக நம்புகின்றனர். வேறு சிலர் அவர் உயிருடனும் உடலுடனும் மீண்டும் இறங்கி வருவார் என்கின்றனர். இன்னும் சிலர் அவர் தத்துவ வடிவில் தோன்றுவார் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர். சிலர் மக்காவிலும், சிலர் பைத்துல் முகத்திஸிலும், சிலர் இஸ்லாமிய படையிலும் இறங்குவார் என்றும் சிலர் இந்தியாவில் இறங்குவார் என்றும் கூறுகின்றனர்.

ஆகவே இந்த அனைத்து முரண்பட்ட கருத்துக்களும் கருத்து வேற்றுமைகளும் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவர் ஒருவரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. ஆகவே அந்த நீதிபதி நானாவேன். நான் ஆன்மீக அடிப்படையில் சிலுவையை உடைப்பதற்காகவும், கருத்து வேறுபாடுகளைக் களைவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். நான் அனுப்பப்பட்டது இவ்விரண்டு அம்சங்களின் எதிர்பார்ப்பாகும். எனது

உண்மைத்தவத்திற்கு ஆதாரமாக இன்னும் வேறு சான்றுகளை வழங்குவதற்கு எனக்கு எந்த தேவையுமில்லை. ஏனெனில் காலத்தின் அவசியமே ஓர் அத்தாட்சியாகும். இருந்தாலும் எனக்கு ஆதரவாக இறைவன் இன்னும் பல அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். நான் பிற கருத்து வேறுபாடுகளில் நீதியுடன் தீர்ப்பு வழங்குவதற்கு நீதிபதியாக விளங்குவதனைப் போன்று (மஸீஹின்) மரணம் மற்றும் உயிருடன் இருத்தல் ஆகிய பிரச்சனையிலும் நீதிபதியாக இருக்கின்றேன். நான் இமாம் மாலிக், இப்னு ஹாஷிம் மற்றும் முஃதஸிலா போன்றோர் மஸீஹின் மரணம் தொடர்பாக கூறிய கூற்றை சரியானது என்று தீர்ப்பு வழங்குகின்றேன். மேலும் அஹ்லே சுன்னத் போன்ற பிரிவுகள் தவறான கருத்தில் இருக்கின்றனர் என்று நம்புகின்றேன்.

ஆகவே நான் நீதியுடன் தீர்ப்பு வழங்குவேன் என்ற அடிப்படையில் சண்டையிடுகின்ற இந்த மக்களுக்கு தீர்ப்பு வழங்குகின்றேன். நுஸூல் – இறங்குதல் என்பதன் அடிப்படையில் பொருள் ரீதியாக இந்த அஹ்லே சுன்னத் பிரிவினர்கள் உண்மையாளர்கள் ஆவர். ஏனெனில் மஸீஹ் உவமை வடிவில் இறங்குவது அவசியமாக இருந்தது. ஆனால் இறங்குவதன் நிலையை எடுத்து வைப்பதில் இம்மக்கள் தவறிழைத்துள்ளனர். உவமை அடிப்படையில் தான் இறங்குதல் அமையுமே தவிர உண்மையில் இறங்குதல் அல்ல. மஸீஹின் மரணம் சம்பந்தமாக முஃதஸிலா, இமாம் மாலிக் மற்றும் இப்னு ஹிஷாம் போன்றோர் ஒருமித்த கருத்தைதான் கூறுகின்றனர். இவர்கள் உண்மையாளர்களாவர்.

ஏனெனில் திருக்குர்ஆன் திட்டவட்டமான ஆதாரத்தின்படி அதாவது 'ஃபலம்மா தவஃப்பைதனீ' என்ற வசனத்தின்படி கிறித்தவர்கள் வழிகெட்டுப் போவதற்கு முன் மஸீஹ் மரணித்திருப்பது அவசியமாகும். இது என் சார்பாக ஹகம் – நீதிபதி என்ற அடிப்படையில் நான் வழங்கும் தீர்ப்பாகும். இப்போது எவர் எனது தீர்ப்பை ஏற்க மறுக்கின்றாரோ அவர் உண்மையில் என்னை நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராக அனுப்பிய அந்த இறைவனை ஏற்க மறுக்கின்றார்.

நீர் தான் ஹகம் – நெறி நீதி தீர்ப்பவர் என்பதற்கு என்ன ஆதாரம்? என்று கேள்வி எழுப்பினால் அதற்குரிய பதிலாவது நீதியுடன் தீர்ப்பு வழங்குபவர் வரவேண்டிய காலகட்டம் இதுவாகும். மேலும் சிலுவையினால் தவறிழைத்த சீர்திருத்தப்பட வேண்டிய சமுதாயம் இப்போது இருக்கின்றது. மேலும் இவர்தான் ஹகம்– நெறி நீதி தீர்ப்பவர் என்று சாட்சியம் வழங்கப்பட்டிருந்த அந்த அடையாளமும் நிறைவேறி விட்டது. இன்னும் அடையாளங்களின் தொடர்ச்சி தொடர்ந்து வருகின்றது. வானம் அடையாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. எவருடைய கண்கள் இப்போது மூடாமல் இருக்குமோ அவரே அருளுக்குரியவர் ஆவார்.

முந்தைய அடையாளங்களை மட்டும் நம்புங்கள் என்று நான் கூறவில்லை. மாறாக, நான் ஹகமாக (நெறி நீதி தீர்ப்பவராக) இல்லை என்று நீங்கள் நம்புவதாக இருந்தால் பிறகு என் அடையாளங்களுடன் போட்டியிட்டுப் பாருங்கள். கொள்கை முரண்பாடுகள் உள்ள இக்காலகட்டத்தில் தோன்றியுள்ள எனக்கு எதிரில் மற்ற எல்லா விவாதங்களும் ஒன்றுமற்றவையாகும். நீதிபதி என்ற அடிப்படையில் எனது கூற்றிற்கு செவிமடுப்பதுதான் அனைவரின் கடமையாகும். அதனை நான் முழுமை செய்து விட்டேன். இறைவன் எனக்கு நான்கு அடையாளங்களை வழங்கியுள்ளான்.

(1) எனக்குத் திருக்குர்ஆனின் அற்புதங்களின் ஒளியில் அரபி மொழியில் புலமை மற்றும் சொற்செறிவு, பொருட்செறிவு ஆகியவற்றின் அற்புதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் யாராலும் என்னுடன் போட்டியிட முடியாது.

(2) எனக்கு திருக்குர்ஆனின் தத்துவம் மற்றும் நுட்பமான ஞானம் ஆகியவற்றை எடுத்துரைப்பதில் அற்புதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் யாராலும் என்னுடன் போட்டி போட முடியாது.

(3) எனக்கு அதிகமாக துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அடையாளங்கள் வழங்கப்பட்டுள்ளது. யாராலும் இதனை எதிர்க்க முடியாது. எனது ஏறக்குறைய முப்பதாயிரம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று என்னால் சத்தியம் செய்து கூற முடியும். இதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது.

(4) எனக்கு மறைவான செய்திகளை முன்னறிவிப்பதன் அற்புதம் வழங்கப்பட்டுள்ளது. யாராலும் இதனை எதிர்க்க முடியாது. இதற்கு இறைவனின் சாட்சிகள் என்னிடம் உள்ளன. மேலும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் எனக்கு ஆதரவாக ஒளிமிக்க அடையாளங்களைப் போன்று நிறைவேறியுள்ளன.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 495)

## திருக்குர்ஆன் எனக்கு சாட்சியம் அளிக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு சாட்சியம் அளித்துள்ளார்கள். முந்தைய நபிமார்கள் எனது வருகைக்கான காலத்தை நிர்ணயித்துக் கூறியுள்ளார்கள்

நான் ஏற்கனவே மீண்டும் மீண்டும் கூறியதைப் போன்று நான் உங்களுக்கு கூறக்கூடிய இந்த வார்த்தை நிச்சயமாக உறுதியாக திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத்தைப் போன்று இறைவார்த்தையாகும். நான் இறைவனின் நிழலான, பிரதிபிம்பமான நபியாவேன். மார்க்க விஷயத்தில் என்னைப் பின்பற்றுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வாஜிபாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்வது வாஜிபாகும். மேலும் எவருக்கு எனது தூதுச் செய்தி எட்டியுள்ளதோ அவர் முஸ்லிமாக இருந்தாலும் என்னை தனது நெறி நீதித் தீர்ப்பு வழங்குபவராக ஏற்கவில்லையென்றால், என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஏற்கவில்லையென்றால், எனது வஹியை இறைவன் புறமிருந்து வந்ததாக கருதவில்லையென்றால் அவர் விண்ணில் பிடிக்கப்படுவார்.

ஏனென்றால் எந்த விஷயத்தை அவர் தனது காலத்தில் ஏற்க வேண்டியது இருந்ததோ அதை அவர் மறுத்து விட்டார். நான் பொய்யனாக இருந்தால் அழிந்து விடுவேன் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, நான் மூஸா, ஈஸா, தாவூது மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்று உண்மையாளன் ஆவேன். எனக்கு சாட்சியாக இறைவன் பத்தாயிரத்தையும் விட அதிகமான அடையாளங்களைக் காட்டியுள்ளான்.

திருக்குர்ஆன் எனக்கு சாட்சி அளிக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு சாட்சியம் அளித்துள்ளார்கள். முந்தைய நபிமார்கள் எனது வருகைக்கான காலத்தை இதுதான் என நிர்ணயித்து சென்றுள்ளார்கள். மேலும் திருக்குர்ஆனும் இதுதான் அந்த காலம் என எனது வருகைக்கான காலத்தை நிர்ணயம் செய்துள்ளது. எனக்கு வானமும் சாட்சி அளித்துள்ளது. பூமியும் சாட்சி அளித்துள்ளது. எனக்காக எந்த நபியும் சாட்சியளிக்காமல் இல்லை.

இங்கு நான் கூறியுள்ள பத்தாயிரம் அடையாளங்கள் இது குறைவாக எழுதியுள்ளேன். இல்லையென்றால் எனது உயிர் எவன் கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! ஆயிரம் பகுதிகளைக் கொண்ட ஒரு வெள்ளை நிற புத்தகம் இருந்து அதில் நான் எனது உண்மைக்கு ஆதாரங்களை எழுத நினைத்தால் நான் உறுதியாக கூறுகின்றேன். அந்த புத்தகம் முடிந்து போய்விடும். ஆனால் அந்த அடையாளங்கள் முடியாது. அல்லாஹ் தனது வேதத்தில் கூறுகிறான்:

إِنْ يَكُ كَاذِبًا فَعَلَيْهِ كَذِبُهُ ۚ وَإِنْ يَكُ صَادِقًا يُصِبْكُمْ بَعْضُ الَّذِي يَعِدُكُمْ ۖ
إِنَّ اللَّهَ لَا يَهْدِي مَنْ هُوَ مُسْرِفٌ كَذَّابٌ

அதாவது பொய்யன் என்றால் உங்களது பார்வையின் முன்பே நான் அழிந்துபோய் விடுவேன். அவனது பொய்யே அவனை அழித்து விடும். ஆனால் உண்மையாளன் என்றால் உங்களில் சிலர் அவரது முன்னறிவிப்பிற்கு இலக்காகி விடுவீர்கள். மேலும் அவனது பார்வையின் முன்பே இவ்வுலகை விட்டு சென்று விடுவீர்கள்.(40:29)

தற்போது இறை வார்த்தையிலுள்ள இந்த தரத்தைக் கொண்டு என்னை சோதித்துப் பாருங்கள். எனது வாதத்தை ஆய்வு செய்யுங்கள். இந்த மவ்லவிகள் என்னை அழிப்பதற்காக ஏதாவதொரு சிறிய வழியினைக் கண்டுபிடிக்க முயலுவது உண்மையா? இல்லையா? காஃபிர் ஃபத்வா தயார் செய்வதற்குள் அவர்களது கால்கள் தேய்ந்து விட்டன. ஏச்சுப் பேச்சுகளைக் கொண்ட பிரசுரங்களை வெளியிடுவதில் ஷியாக்களையே பின்னுக்கு தள்ளிவிட்டனர்.

என் மீது கொலை வழக்கு தொடரப்பட்டது. பலமுறை குற்றவியல் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றம் வரை வரவழைக்கப்பட்டுள்ளேன். என்னிடம் வருபவர்களுக்கு மக்காவில் சஹாபாக்களுக்கு இழைக்கப்பட்ட கடுமை போன்று கடுமை இழைக்கப்பட்டது. உலகில் இதனைப் போன்ற எந்தவோர் இழிவும், ஏளனமும் கடுமையும் ஏற்பட்டதற்கான உதாரணமே இல்லை.

என்னுடன் தொடர்பு கொண்டுள்ள மற்ற நாட்டைச் சேர்ந்த சிலர் அந்த நாட்டிலேயே கொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் என்னை அழிப்பதற்காகவும், மக்கள் என்னிடம் வருவதிலிருந்து தடுப்பதற்காகவும் இயன்ற அளவு முயற்சிகளைச் செய்தனர். எதனையும் விட்டு வைக்கவில்லை. வெட்கங்கெட்ட செயல்களும் கூட அந்த மவ்லவிகளில் சிலரிடமிருந்து வெளிப்பட்டன. என் மீது பொய் வழக்குகளும் தொடரப்பட்டன. அரசாங்கத்திடம் சம்பவங்களுக்கு மாற்றமான கருத்தை எடுத்துரைத்துத் தூண்டி விட்டனர். அதன் விளைவு என்னவாயிற்று என்பது தெரியுமா?

என்ன நடந்ததென்றால், நான் முன்னேறிக் கொண்டே சென்றேன். இவர்கள் என்னை மறுப்பதிலும், பொய்ப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்டிருந்தனர். மேலும் சுயமே நாங்கள் விரைவில் இவரை அழித்து விடுவோம் என முன்னறிவிப்புகளை செய்து கொண்டிருந்தனர். அப்போது என்னுடன் எந்த பெரிய ஜமாஅத்தும் இருக்கவில்ல. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு ஒரு சில மக்கள் மட்டுமே இருந்தனர். இன்னும் சொல்லப்போனால், பராஹீனே அஹ்மதிய்யாவின் காலத்தில் பராஹீனே அஹ்மதிய்யா அச்சிடப்படும்போது நான் மட்டும் தனியாகத்தான் இருந்தேன். அப்போது என்னுடன் வேறொருவர் இருந்தார் என்று நிரூபிக்க முடியுமா?

அந்த காலத்தில் இறைவன் எனக்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட முன்னறிவிப்புகளை வழங்கினான். அதாவது நீர் தற்போது தனித்தவனாய் இருக்கின்றீர். ஆனால் ஒரு காலம் வரும். அப்போது உம்முடன் ஒரு உலகம் இருக்கும். அதன் பின்னர் ஒரு காலம் வரும். அப்போது நீர் எந்த அளவு உயர்வு பெறுவவீர் என்றால் அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருள்களைத் தேடுவார்கள். ஏனென்றால் உமக்கு அருள் வழங்கப்படும். இறைவன் தூயவன் ஆவான். அவன் விரும்புவதைச் செய்கின்றான். அவன் உமது இயக்கத்தை உமது ஜமாஅத்தை பூமியில் பரவச் செய்வான். மேலும் அதற்கு அருள்களை வழங்குவான். வளரச் செய்வான். அவர்கள் இந்த வாக்குறுதியில் நிறைபெற்று இருக்கும் வரை அவர்களது கண்ணியத்தை பூமியில் நிலைபெறச் செய்வான்.

தற்போது பாருங்கள். பராஹீனே அஹ்மதிய்யாவின் அந்த முன்னறிவிப்புகளைப் பாருங்கள். அதன் மொழியாக்கம் எழுதப்பட்டுள்ளது. அந்த காலத்தில் உலகில் என்னுடன் யாரும் இருக்கவில்லை. அப்போது இறைவன் எனக்கு இந்த துஆவை கற்றுக் கொடுத்தான்.

رَبِّ لَا تَذَرْنِیْ فَرْدًا وَّاَنْتَ خَیْرُ الْوٰرِثِیْنَ

அதாவது இறைவா! என்னை நீ தனியாக ஆக்கி விடாதே. நீயே மிகச் சிறந்தவனாவாய். (21:90)

இந்த இல்ஹாமிய துஆ பராஹீனே அஹ்மதிய்யாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த காலத்தில் பராஹீனே அஹ்மதிய்யா தானே சாட்சியளிக்கிறது. அதாவது அந்தக் காலத்தில் நான் ஓர் அறியப்படாத மனிதனாக இருந்தேன். ஆனால் இன்று எதிரிகளின் முயற்சிகள் இருந்தும்கூட இலட்சத்திற்கும் அதிகமான பல வழக்குகள் எனது ஜமாஅத்தின் மீது உள்ளது. என்னை எதிர்ப்பதற்கு, என்னை அழிப்பதற்கு எல்லா வகையான திட்டங்களும் தீட்டப்பட்டன. ஆனால் இந்த அனைத்து மவ்லவிகளும் அவர்களது சிறிய பெரிய நண்பர்கள் அனைவரும் தோல்வியடைந்துள்ளனர்.

ஆக, இது அற்புதமா? இல்லையா? இது அற்புதம் இல்லையென்றால், பிறகு அற்புதம் என்பது என்ன? என்பதை நத்வாவில் ஜுப்பா அணிந்து இருப்பவர்களே கூறட்டும். நான் அற்புதம் காட்டக்கூடியவன் இல்லையென்றால் நான் பொய்யன் ஆவேன். திருக்குர்ஆனிலிருந்து இப்னு மர்யம் மரணித்து விட்டார்கள் என்பதை நிரூபிக்க முடியவில்லையென்றால் நான் பொய்யன் ஆவேன். மிஃராஜ் ஹதீஸ் இப்னு மர்யமை மரணித்த ஆன்மாக்களுடன் இருக்கச் செய்யவில்லையென்றால் நான் பொய்யன் ஆவேன்.

திருக்குர்ஆனின் அதிகாரம் அந்நூரில் இந்த உம்மத்தின் கலீஃபாக்கள், இந்த உம்மத்திலிருந்துதான் தோன்றுவார்கள் என கூறவில்லையென்றால் நான் பொய்யன் ஆவேன். திருக்குர்ஆன் எனது பெயரை இப்னு மர்யம் என்று கூறவில்லையென்றால் நான் பொய்யன் ஆவேன். அழிந்து போகக்கூடிய மனிதனே! விழித்துக் கொள். மேலும் சிந்தனை செய். இந்த அளவுக்கு எதிர்ப்பின் போர் நிகழ்ந்த பிறகும் கடைசியில் இன்றிலிருந்து 22 வருடத்திற்கு முன்பு பராஹீனே அஹ்மதிய்யாவில் முன்னறிவிப்புகளாக கூறப்பட்டவை இன்று உண்மையாகின்றன. இவை அற்புதங்கள் இல்லையென்றால் பிறகு அற்புதங்கள் எவ்வாறு இருக்கும்?

(தொஹ்ஃபத்துன் நத்வா, ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 95)

**நான் களத்தை வென்று விட்டேன். பூமியில் கிழக்கிலிருந்து மேற்கின் எல்லை வரை எனக்கு எதிரில் இறை அடையாளங்களை காட்டுவதற்கு எந்தவொரு பாதிரியாவது உள்ளாரா?**

பராஹீஹே அஹ்மதிய்யாவில் பக்கம் 522–ல்,

بخرام کہ وقتِ تو نزدیک رسید و پائے محمدیان برمنار بلند تر محکم اُفتاد

(பகராம் கே வக்தே து நஸ்தீக் ரஷீது வ பாயே முஹம்மதியான் பர் மனாரே புலந்த் தர் முஹக்கம் உஃப்தாத்) என்ற முன்னறிவிப்பு உள்ளது. இறைவனுடைய இந்த முன்னறிவிப்பு பராஹீனே அஹ்மதிய்யாவில் வெளியிடப்பட்டு 25 ஆண்டுகளை விட அதிகமாகவே கழிந்து விட்டன. இந்த முன்னறிவிப்பின் பொருள் என்னவென்றால், நீர் ஏற்றுக் கொள்ளப்படும் நாள் வரவுள்ளது. அது முஹம்மதின் மார்க்கத்தின் மகத்துவத்தையும், கண்ணியத்தையும் உயர்த்தும்.

இந்த காலத்தில் அனைவரும் அறிந்தது போன்று நான் ஒருவகையில் எவரும் அறியாதவனாய் திரைமறைவில் இருந்தேன். என்னுடன் ஒரு மனிதர் கூட இருக்கவில்லை. மேலும் நானே இந்த எதிர்காலத்தில் கிடைக்கும் மேன்மை மற்றும் கண்ணியம் குறித்து அறியாதவனாய் இருந்தேன். உண்மை இதுதான்.

அதாவது நான் ஒன்றுமற்றவனாய் இருந்தேன். பின்னர் என்னுடைய எவ்விதத் திறமையுமின்றி இறைவன் தனது அருளால் என்னைத் தேர்ந்தெடுத்தான். நான் அறியப்படாதவனாய் இருந்தேன். எனக்குப் புகழை வழங்கினான். மின்னல் தனது

ஒளியை ஒருபுறமிருந்து மறுபுறம் வெளிப்படுத்துவதைப் போன்று மிக வேகமாக எனக்குப் புகழை வழங்கினான்.

நான் செல்வம் படைத்தவனாக இருக்கவில்லை. அவன் பல இலட்சம் ரூபாய்க்கான வெற்றியை எனக்கு வழங்கினான். நான் தனித்தவனாய் இருந்தேன். அவன் பல இலட்சம் மக்களை என்னைப் பின்பற்றச் செய்தான். வானம், பூமி இரண்டிலிருந்தும் எனக்காக அடையாளங்களை வெளிப்படுத்தினான்.

அவன் எனக்காக ஏன் அவ்வாறு செய்தான்? என்பது எனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் எனது ஆன்மாவில் எவ்விதச் சிறப்பையும் காணவில்லை. மேலும் ஷேக் சஅதீ (அலைஹிர் ரஹ்மா) அவர்களின் இந்தக் கவிதையைப் புகழ்ந்து குறிப்பிடுவதற்குப் பொருத்தமானதாகக் கருதுகிறேன்.

پسندیدگانے بجائے رسند زما کہتر انت چہ آمد پسند

என் இறைவன் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் எனக்கு உதவி செய்துள்ளான். என்னை எதிர்ப்பதற்காக எழுந்த ஒவ்வொருவரையும் கீழே தாழ்த்தியுள்ளான். எனக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதற்காக நீதிமன்றங்கள் வரை என்னை இழுத்த ஒவ்வொருவருக்கும் எதிராக என் இறைவன் அந்த அனைத்து வழக்குகளிலும் வெற்றியை வழங்கினான். எனக்கு எதிராக கெட்ட துஆக்கள் (சாபம்) செய்த ஒவ்வொருவர் மீதும் என் இறைவன் அந்த கெட்ட துஆக்கள் (சாபம்) விழும்படிச் செய்தான்.

எவ்வாறென்றால் பண்டித் லேக்ராம் துரதிஷ்டவசமாகத் தனது சிறிய மகிழ்ச்சியின் மீது நம்பிக்கை கொண்டவாறு என்னைப் பற்றி இவர் மூன்று வருடத்திற்குள் தனது அனைத்து குழந்தைகளுடன் மரணித்து விடுவார் என முன்னறிவிப்புச் செய்தான். இறுதியில் முடிவு என்னவாயிற்று? அவன் எனது முன்னறிவிப்பிற்கேற்ப சந்ததியில்லாமல் மரணமடைந்தான். அவனது எந்த சந்ததியும் இந்த உலகில் இருக்கவில்லை. இதனைப் போன்று அப்துல் ஹக் கஸ்னவியும் எழுந்தான். அவன் முபாஹலா செய்து தனது கெட்ட துஆவினால் (சாபத்தினால்) எனது அழிவை நாடினான்.

எனக்கு எந்த அளவு ஒவ்வொரு பிரிவிலும் முன்னேற்றம் கிடைத்ததோ அது இந்த முபாஹலாவிற்குப் பிறகுதான் கிடைத்தது. பல இலட்சம் மக்கள் என்னைப் பின்பற்றக் கூடியவர்களானார்கள். பல இலட்சம் ரூபாய் வந்தது. ஏறக்குறைய உலகின் அனைத்துப் பகுதியிலும் கண்ணியத்துடன் எனது புகழ் பரவியது.

எந்த அளவுக்கு என்றால் ஏனைய நாட்டவரும் எனது ஜமாஅத்தில் இணைந்தனர். மேலும் பல குழந்தைகள் பின்னர் பிறந்தன. ஆனால் அப்துல் ஹக் கஸ்னவி மரணத்திற்குச் சமமான நிலையாகிய சந்ததியில்லாமல் இருந்தார். கடுகளவு கூட அவருக்கு இறைவன் புறமிருந்து அருள் கிடைக்கவில்லை. பின்னரும் கூட எவ்வித கண்ணியமும் அவருக்கு கிடைக்கவில்லை.

اِنَّ شَانِئَكَ هُوَالْاَبْتَرُ அதாவது உனது எதிரி சந்ததியற்றவனாவான் என்பதற்கு முற்றிலும் உகந்தவரானார்.

பிறகு மவ்லவி குலாம் தஸ்த்தகீர் கஸூரி எழுந்தார். அவருக்கு முஹம்மது தாஹிரைப் போன்று என் மீது சாபமிட்டு சமுதாயத்தில் பெயர் வாங்க வேண்டும் என்ற ஆசை உருவானது. அதாவது முஹம்மது தாஹிர் ஒரு பொய் மஸீஹ் மற்றும் பொய் மஹ்தியின் மீது சாபமிட்டார். அந்த பொய்யனும் அழிந்து போனான். மேலும் முஹம்மது தாஹிர் தனது காலத்தின் பொய் மஸீஹ் மீது சாபமிட்டு அவரை அழித்து விட்டார். ஆனால் மவ்லவி குலாம் தஸ்த்தகீர் தனது காலத்தில் மஸீஹ் மீது சாபமிட்டுத் தானே அழிந்து போனார்.

இதில் என்ன இரகசியம் அடங்கியுள்ளது என்று எந்த மவ்லவியாலும் பதில் கூற முடியவில்லை. இதனைப் போன்ற உதாரணம் காண முடிவதில்லை. இது இறைவனது உட்புற உதவியாகும். வெளிப்புற உதவியாக இறைவன் எனக்கு கண்ணியத்தை வழங்கியுள்ளான். அதாவது எனக்கு எதிராக எந்த பாதிரியும் வர முடியாது. ஒருகாலம் இருந்தது. மக்கள் கடை வீதிகளில் சப்தமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து எந்த அற்புதமும் வெளிப்படவில்லை. திருக்குர்ஆனில் எந்த முன்னறிவிப்பும் இல்லை என்று கூறி வந்தனர்.

ஆனால் இறைவன் அவர்கள் மீது எப்படிப்பட்ட திகிலை ஏற்படுத்தினான் என்றால் இந்த பக்கம் அவர்கள் முகம் திரும்புவது கூட கிடையாது. ஒருவகையில் அவர்கள் அனைவரும் இந்த உலகை விட்டுச் சென்று விட்டனர்.

யாருடைய கையில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! ஏதாவதொரு பாதிரி எனக்குப் போட்டியாக இந்த பக்கம் முகம் திருப்பினால் இறைவன் அவனை இழிவுபடுத்தி விடுவான். உதாரணம் காண முடியாத தண்டனையில் அவர்களை இடுவான். மேலும் நான் காண்பிக்கக் கூடியதை அவனது கற்பனை கடவுளின் ஆற்றல் மற்றும் சக்தியினைக் கொண்டு அவனால் காண்பிக்க இயலாது. எனக்காக எனது இறைவன் விண்ணிலிருந்தும் அடையாளங்களை இறக்குவான். பூமியிலிருந்தும் இறக்குவான்.

நான் உண்மையாகவே கூறுகின்றேன். இந்த அருள்கள் மற்ற மதத்தினருக்கு வழங்கப்படவில்லை. பூமியில் கிழக்கிலிருந்து மேற்கின் எல்லைவரை எனக்கு எதிரில் இறை அடையாளங்களைக் காட்டுவதற்கு எந்தவொரு பாதிரியாவது உள்ளனரா? நாம் களத்தை வென்று விட்டோம். நமக்கு எதிரில் வருவதற்கு யாருக்கு தைரியம் உள்ளது.

இது இறைவன் இன்றிலிருந்து 25 ஆண்டுகளுக்கு முன்பு முன்னறிவிப்பு செய்த அதே விஷயம்தான்.

بخرام کہ وقتِ تو نزدیک رسید و پائے محمدیان برمنارِ بلند تر محکم اُفتاد

அதாவது (பகராம் கே வக்தே து நஸ்தீக் ரஷீது வ பாயே முஹம்மதியான் பர் மனாரே புலந்த் தர் முஹக்கம் உஃப்தாத்) – இறைவன் மீது ஆணையாக! நாம் இன்று முஹம்மதின் உயரமான மினாராவில் இருக்கின்றோம். ஒவ்வொரு மனிதரும் நமது பாதத்தின் கீழ் உள்ளனர்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 347)

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடன் இறைவனது அருள் இருக்கும்

அனைத்து மக்களே ! கேட்டுக் கொள்ளுங்கள். இது வானத்தையும் பூமியையும் படைத்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் இந்த ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரப்புவான்.... உலகில் இந்த ஒரு மார்க்கம் மட்டுமே கண்ணியத்துடன் நினைவு கூரப்படும். இறைவன் இந்த மார்க்கத்திலும், ஜமாஅத்திலும் மிகவும் மேலான வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அருளை வழங்குவான்...

இன்றிலிருந்து மூன்று நூற்றாண்டுகள் முழுமையடைந்திருக்காது. ஈஸாவை எதிர்பார்த்திருக்கின்ற முஸ்லிம்களாயினும், கிறித்தவர்களாயினும் மிகவும் அவநம்பிக்கை அடைந்து இந்த பொய்யான கொள்கையை விட்டு விடுவார்கள். மேலும் உலகில் ஒரே மார்க்கம் தான் இருக்கும். ஒரே தலைவர் தான் இருப்பார். நான் ஒரு விதையை விதைக்க வந்துள்ளேன். எனவே அந்த விதை எனது கைகளால் விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும். அதைத் தடுப்பவர் யாருமில்லை.

(தஸ்கிரதுஷ் ஷஹாததைன் பக்கம் 64,65 ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 66,67)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தொடரப்பட்ட ஏழு வழக்குகளும் அன்னாரின் உண்மைக்கான ஏழு அடையாளங்களும்

மவ்லவி நஸீர் அஹ்மது ஆரிஃப், நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்.
(தமிழாக்கம்: மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது)

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

حَسْرَةً عَلَى الْعِبَادِ مَا يَأْتِيهِمْ مِّن رَّسُولٍ إِلَّا كَانُوا بِهِ يَسْتَهْزِئُونَ

பொருள்: (நிராகரிக்கும்) அடியார்களின் மீது பரிதாபமே! எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனத்திற்குள்ளாக்கவே செய்கின்றனர். (36:31)

இந்த திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் தனது நபிமார்கள் மற்றும் தூதர்களிடம் அவர்களின் பணியை நிறைவேற்றுவதில் வரும் கஷ்டங்கள் மற்றும் இன்னல்களைப் பற்றி எடுத்துக்கூறியவாறு அவர்கள் எந்த நோக்கத்தை அடைவதற்காக அனுப்பப்படுகிறார்களோ அந்தப் பாதையில் முட்கள் நிறைந்த புதர்கள் உள்ளன என்றும், அவை அபாயம் நிறைந்த பாதைகளாகும் என்றும், அவர்கள் ஏளனம் மற்றும் எள்ளிநகையாடப்படுவார்கள் என்றும், புயல்களும், ஆபத்துக்களின் மலைகளும் உள்ளன என்றும் ஆனால் இந்த இன்னல்கள் அவர்களின் ஈமானை பலவீனப்படுத்துவதில்லை என்றும் கூறுகிறான்.

இந்த கஷ்டங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதும் வந்தன. அன்னாரின் வாழ்வில் எதிரிகள் அன்னாரின் மீது பல்வேறு வகையான பொய்யான மற்றும் அடிப்படை ஆதாரமற்ற வழக்குகள் தொடுத்தனர். எல்லா வகையிலும் அன்னாரைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்க முயற்சி செய்தனர். எதிரிகள் தரப்பிலிருந்து அன்னாரின் மீது ஏழு வழக்குகள் தொடுக்கப்பட்டன. இந்த ஏழு வழக்குகளும் அன்னாரின் உண்மைத்துவத்திற்குத் தெளிவான சான்றுகளாகும். அந்த ஏழு வழக்குகளைப் பற்றி சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது:

**வழக்கு எண்:–1**

1877 ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக ரல்யாராம் என்ற ஒரு கிறித்தவர் அன்னாரின் மீது வழக்கு தொடுத்தார். இது அன்னாரின் மீது தொடுக்கப்பட்ட முதல் வழக்காகும். அன்னார் இஸ்லாத்தின் தப்லீக்கிற்காக (பிரச்சாரத்திற்காக) எழுதுகோல் மூலமாக ஜிஹாது (மார்க்கப்போர்) செய்து கொண்டிருந்தார்கள். இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்காக கட்டுரை எழுதி நூல் வடிவில் வெளியிட்டு வந்தார்கள். அன்னார் இஸ்லாத்திற்கு ஆதரவாக கட்டுரை ஒன்றை எழுதினார்கள். அதை அச்சிடுவதற்காக பாக்கட் வடிவில் அமிர்தசரஸிலுள்ள அச்சகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் அந்த பாக்கட்டில் அந்த கட்டுரையை அச்சிட வலியுறுத்தி ஒரு கடிதத்தையும் வைத்து விட்டார்கள்.

அச்சகத்தின் எஜமானர் ரல்யாராம் ஒரு கிறிஸ்தவராவார். அவர் கிறிஸ்தவ மிஷனின் ஆன்மாவாகக் கருதப்பட்டு வந்தார். அவர் கடுமையாக வெகுண்டெழுந்தார். அவருக்கு தனது உள்ளத்தின் கோபத்தை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. பாக்கட்டில் தனியாக ஒரு கடிதத்தை வைப்பது சட்ட ரீதியாக குற்றம் என்பதால் தபால் நிலையத்தின் சட்டத்தின் அடிப்படையில் அந்த குற்றத்திற்கான தண்டனை 500 ரூபாய் அபராதமும், 6 மாதங்கள் வரை சிறை தண்டனையுமாகும்.

ஆனால் இது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தெரியாதிருந்தது.

ரல்யாராம் உளவாளியாக மாறி தபால் நிலைய அதிகாரிகள் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தெரிய வரும் முன்பே அல்லாஹ் ஆன்மீகக் காட்சி மூலம் ரல்யாராம் என்பவர் ஒரு பாம்பை அன்னாரைக் கடிக்க அனுப்புவதாகவும், அதனை அன்னார் ஒரு மீனைப் போன்று பொரித்து திரும்ப அனுப்புவதாகவும் காட்டிக் கொடுத்தான்.

எவ்வாறிருப்பினும், இந்த குற்றத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் அழைக்கப்பட்டார்கள். இந்த வழக்கு தொடர்பாக ஆலோசனை பெறப்பட்ட அனைத்து வக்கீல்களும் பாக்கட்டில் நான் கடிதத்தை வைக்கவே இல்லை என்று மறுத்து விடுங்கள். பொய் கூறாமல் விடுபடவே முடியாது என ஆலோசனை வழங்கினர். ரல்யாராம்தான் போட்டிருப்பார் என்று கூறி விடுங்கள். ஒரு சில பொய் சாட்சிகளைக் கொண்டு வந்தால் விடுதலையாகி விடலாம். இல்லையென்றால் மிகக் கடினம் என்று கூறினர். நான் ஒருபோதும் பொய் கூற மாட்டேன் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனைத்து வக்கீல்களுக்கும் பதிலளித்தார்கள்.

இந்த வழக்கில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரப்பு வக்கீலாக ஆஜராகிய மதிப்பிற்குரிய ஷேக் அலி அஹ்மது சாஹிப் கூறுகிறார்கள்:

இந்த கடிதத்தை நான் வைக்கவில்லை என மிர்ஸா சாஹிப் மறுத்து விடுவதற்கு நான் முழுமையாக முயற்சித்தேன். நான் எவ்வளவு வற்புறுத்தினாலும் மிர்ஸா சாஹிப் அதே அளவு அதை மறுத்து விடுவார்கள். விளைவு நல்லதாக இருக்காது என்றும் ஒரு கண்ணியத்திற்குரிய குடும்பத்தின் மீது கிரிமினல் குற்றத்திற்கு தண்டனை கிடைத்ததாக கரை ஏற்பட்டு விடும் என நான் அச்சமூட்டினேன். ஆனால் அன்னார் நான் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும், தபால் நிலைய அதிகாரியும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். நீதிபதி ஹுஸூர் அவர்களின் பதிலை எழுதினார். நீங்கள்தான் பாக்கட்டில் கடிதத்தை வைத்தீர்களா? இந்த கடிதம் உங்களுடையதா? என ஹுஸூர் அவர்களிடம் கேட்ட போது, இந்த கடிதம் என்னுடையதாகும். இந்த பாக்கட்டும் என்னுடையதாகும் என்றும் நான் இந்த கடிதத்தைக் கட்டுரையிலிருந்து தனித்த ஒன்றாக கருதவில்லை. அரசாங்கத்திற்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது நோக்கமல்ல என்றும் கூறினார்கள்.

இந்த விஷயத்தைக் கேட்டதுமே இறைவன் அந்த ஆங்கிலேயே நீதிபதியின் உள்ளத்தை திருப்பி விட்டான். தபால் நிலைய அதிகாரி ஹுஸூர் அவர்களுக்கு எதிராக அதிகமாக கூச்சலிட்டார். ஆனால் அந்த நீதிபதில் No, No என்று கூறி அவரது பேச்சை நிராகரித்தார். தபால் நிலை அதிகாரி தனது அனைத்து காழ்ப்புணர்ச்சிகளையும் வெளிப்படுத்திய பின்னர் நீதிபதி தீர்ப்பு எழுதி வழக்கை தள்ளுபடி செய்தார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நீதிமன்ற அறையிலிருந்து வெளியே வந்து உண்மை பேசியதன்

விளைவாக மகத்தான வெற்றி வழங்கிய தனது உண்மையான பேரருள் புரிபவனாகிய அந்த இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். இந்த வழக்குக்கு முன்பாக அன்னார் ஒரு கனவும் கண்டிருந்தார்கள்.

அது என்னவென்றால், ஒருவர் அன்னாரின் தொப்பியை கழற்றுவதற்காக கை வைக்கிறார். நீ என்ன செய்கிறாய்? என்று அன்னார் கூறியதும் அவர் அந்த தொப்பியை அன்னாரின் தலையிலேயே வைத்து விட்டார். மேலும் நல்லது, நல்லது என்று கூறினார். தண்டனை கண்டிப்பாக கிடைக்கும் என எண்ணிய அன்னாரது வக்கீல் ஷேக் அலி அஹ்மது சாஹிப் நீதிமன்ற அறையை விட்டுக் காணாமல் போய் விட்டார். வியந்து போனார். வாழ்நாள் முழுவதும் அன்னாரின் உண்மையான பேச்சைப் புகழ்ந்து வந்தார்.

(அஹ்மதிய்யத்தின் வரலாறு பாகம் 1 பக்கம் 146)

**வழக்கு எண்:– 2**

**ஹென்றி மார்டின் கிளார்க் என்ற பாதிரியின் வழக்கு**

அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் 1897–ஆம் ஆண்டு எப்போதும் நினைவில் கொள்ளப்படும். அந்த ஆண்டு பண்டித் லேக்ராம் கொல்லப்பட்டதன் காரணமாக உருவாகியிருந்த எதிர்ப்பின் சூழல் உச்சகட்டத்தில் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் கொலை வழக்கில் சிக்க வைப்பதற்குக் கிருத்தவ பாதிரிகள் செய்த மிகவும் அபாயகரமான சூழ்ச்சிகளும் ஒன்று சேர்ந்தன. புனிதப் போரில் (அமிர்தரஸில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அப்துல்லாஹ் ஆத்தம் ஆகிய இருவருக்கும் இடையே நடந்த எழுத்து வடிவிலான முபாஹலா) கிருத்தவர்களுக்குக் கிடைத்த தோல்வி அவர்களுக்கு கோபமூட்டியது. கிருத்தவர்கள் அன்னாருக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கைக்காகக் காத்திருந்தார்கள்.

அதேவேளையில் அப்துல் ஹமீது என்ற தீய இளைஞன் அவர்களிடம் சென்றான். இவன் சில சமயம் கிருத்தவனாகவும், சிலவேளை இந்துவாகவும், சில சமயம் முஸ்லிமாகவும் இருப்பான். இவ்வாறுதான் இவன் காதியானுக்கு வந்தான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் பெறுமாறு காதியான் வந்தான். அதை அன்னார் மறுத்து விட்டார்கள். அந்த நேரத்தில் காதியானை விட்டுப் போய் விட்டான். மீண்டும் கிருத்தவர்களின் பக்கம் சென்றான். ஒவ்வொரு பாதிரியாகச் சந்தித்து இறுதியில் ஹென்றி மார்ட்டின் கிளார்க்கை வந்தடைந்து நான் காதியானிலிருந்து வருகிறேன். இந்துவிலிருந்து முஸ்லிமானேன். இப்போது கிருத்தவனாக விரும்புகிறேன் என்று கூறினான்.

தான் காதியானிலிருந்து வருவதாக அப்துல் ஹமீது கூறியதைக் கேட்ட ஹென்றி மார்டின் கிளார்க் மிகவும் சாதுர்யத்துடன் அவனை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக கொலை முயற்சி வழக்கு தொடுக்க ஒரு திட்டமிட்டான். மிர்ஸா குலாம் அஹ்மது டாக்டர் கிளார்க்கை கொலை செய்வதற்காக என்னை அனுப்பினார் என்று கூறுமாறு பாதிரியார்கள் அப்துல் ஹமீதுக்கு அழுத்தம் கொடுத்தனர். பாதிரிமார்களிடத்தில் அப்துல் ஹமீது தன்னை இயலாதவனாகக் கண்டு நிர்பந்தத்தில் அவர்களின் விருப்பத்திற்கேற்ப எழுதினார். அதில் எட்டு பாதிரியார்கள் சாட்சிக் கையொப்பமிட்டனர்.

மிர்ஸா சாஹிப் என்னை டாக்டர் மார்டின் கிளார்க்கை கொல்வதற்காக அனுப்பினார். ஆனால் மாட்ரின் கிளார்க்கை கண்டதும் எனது எண்ணம் மாறி விட்டது என நீதிமன்றத்தில் கூற வேண்டும் என நன்றாக கற்றுக் கொடுத்தனர். பாதிரி மார்டின் கிளார்க் அவனை வழக்கிற்காக தன்னோடு அமிர்தஸரசுக்கு அழைத்து வந்தார். அவனை அமிர்தரஸரசின் மாவட்ட நீதிபதியின் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். அங்கு குற்றப் பிரிவு எண் 107 –ன் கீழ் வழக்கு பதிவு செய்ய வைத்தார். அப்துல் ஹமீதுக்கு என்ன கற்றுக் கொடுக்கப்பட்டதோ அதை அப்படியே கூறினான். மார்டின் கிளார்க் அவனுடைய எழுத்து ரீதியான புகாரையும் நீதிமன்றத்தில் வழங்கினார்.

வழக்கு மிகவும் ஆபத்தானதாக இருந்தது. தனது மார்க்கத்தைச் சார்ந்த பாதிரியார் தரப்பிலிருந்து வந்த காரணத்தால் அமிர்தசரஸின் மாவட்ட நீதிபதி விஷயத்தைக் கேட்டதுமே குற்றப்பிரிவு 114 –ன் கீழ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக பிடிவாரண்டு பிறப்பித்தார். இந்த நீதிமன்ற நடவடிக்கைக்குப் பிறகு எதிரிகள் அப்துல் ஹமீதின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக மிக வலுவாக முயற்சிகளை ஆரம்பித்து விட்டனர். இதற்காக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியிடம் இருந்தும் உதவிகள் பெறப்பட்டன. எதிரிகள் மிர்ஸா சாஹிபை எப்படியாவது கொலை முயற்சி வக்கீல் சிக்க வைத்து தண்டனை வாங்கி தந்து விடுவர் என்ற நிச்சய உறுதியில் இருந்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இது தொடர்பாக எதுவும் தெரியாது. இறை நியதியின் கீழ் வாரண்டின் காகிதங்கள் எங்கோ காணாமல் போய்விட்டன. சில நாட்களுக்குப் பிறகு நாம் சட்டத்திற்கு புறம்பாக அல்லவா வாரண்ட்டை பிறப்பித்தோம் என்ற உணர்வு மாவட்ட நீதிபதிக்கு ஏற்பட்டது. அதாவது அவரால் குர்தாஸ்பூரின் ஏதேனும் குற்றவாளிக்கு வாரண்டு பிறப்பிக்க முடியாது என்பதை உணர்ந்தார். பிறகு வழக்கு அமிர்தசரஸிலிருந்து குர்தாஸ்பூருக்கு மாற்றப்பட்டது. குர்தாஸ்பூரிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரில் நோட்டிஸ் வந்தது. அதில் 10 ஆகஸ்ட் 1897 அன்று பட்டாலாவிலுள்ள துணைக் கமிஷனர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்றைய தினம் காலையில் அன்னார் பட்டாலா வந்தடைந்தார்கள். பயணத்தில் வழக்கு பற்றி மேலோட்டமாக பேசப்பட்டது. அன்னார் கூறினார்கள்:

நமக்கு அல்லாஹ் முன்பே தெரிவித்து விட்டான். நாம் அவனுடைய உதவிகளையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். எனவே அல்லாஹ்வின் இந்த முன்னறிவிப்பு ஆரம்பமானதில் நாம் மகிழ்ச்சியாக உள்ளோம். இதன் முடிவு நல்லதாக இருக்கும் என நான் நம்புகிறேன். நமது நண்பர்கள் அச்சப்பட வேண்டாம்.

(கிதாபுல் பரிய்யா முதல் பதிப்பு பக்கம் 237)

கிருத்தவர்களோடு, ஆரியர்களும் ஒன்று சேர்ந்து விட்டனர் என்றும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியும் அவர்களுடன் இணைந்து விட்டார் என்றும் கூறப்பட்டபோது ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நம்முடன் இறைவன் இருக்கின்றான். அவன் அவர்களுடன் இல்லை. அல்லாஹ் நமது தீர்ப்பு பற்றி நமக்கு தெரியப்படுத்தி விட்டான். நாம் அதில் நிச்சய உறுதி கொண்டுள்ளோம். அதுவே நடக்கும். இந்த வழக்கில் முழு உலகமும் நமக்கு எதிராக இருக்குமென்றாலும் எனக்கு ஓர் அணு அளவு கூட கவலையில்லை. அல்லாஹ் நற்செய்தி வழங்கிய பிறகு தவறான எண்ணம் கொள்வதும் பாவமாக கருதுகிறேன்.

(ஹயாத்தே அஹ்மது தொகுதி 4 பக்கம் 597,598)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கலப்பற்ற தோழர்களுடன் பட்டாலாவிலுள்ள தபால் பங்களாவிற்கு வந்து நீதிமன்ற அறைக்கு வந்தார்கள். துணைக் கமிஷனர்

வில்லியம் மாண்டிகோ டக்லஸ் சாஹிப் முதலிலேயே அன்னாருக்காக நாற்காலி வைக்கச் சொல்லியிருந்தார். அறைக்கு வெளியே பார்வையாளர்களின் கூட்டம் இருந்தது. அதில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியும் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கையில் விலங்கு போடப்படுவதை பார்க்க எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார். மற்ற சாட்சிகளுக்குப் பின்னர் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியும் சாட்சி கூற வேண்டியதிருந்தது. அவர் அறைக்குள் வந்து எந்த நாற்காலியும் காலியாக இல்லாததைக் கண்டு நீதிபதியைப் பார்த்து, நீதிபதியே! நாற்காலி என்று கேட்டார்.

துணை கமிஷனர் ராஜா குலாம் ஹைதர் கான் கோப்புகளை வைத்திருப்பவர்களிடம் மவ்லவி சாஹிபிற்கு ஆட்சியாளர்களின் முன் நாற்காலி வழங்கப்படுவதுண்டா? என்று கேட்டார். உடனே பெயர் பட்டியல் பார்க்கப்பட்டது. அதில் அவர் பெயர் இருக்கவில்லை. உங்களுக்கு அரசாங்க ரீதியில் நாற்காலி வழங்கப்படுவதில்லை. எனவே நேராக நில்லுங்கள். சாட்சி கூறுங்கள் என துணைக் கமிஷனர் கூறினார்.

எவ்வாறிருப்பினும் சாட்சி ஆரம்பமானது. மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது குற்றம் சுமத்தினார். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாட்சி கூறிய பின்னர் வெளியே வந்தார். அறைக்கு வெளியே ஒரு நாற்காலி கிடந்தது. அதில் அமர்ந்தார். காவலாளி அவரை கேப்டன் சாஹிப் கட்டளை தரவில்லை எனக்கூறி அங்கிருந்தும் எழுப்பி விட்டார். பிறகு மவ்லவி சாஹிப் விரித்திருந்த ஒரு போர்வையில் அமர்ந்தார். போர்வையின் உரிமையாளர், முஸ்லிம்களின் தலைவன் என்று கூறிக்கொண்டு அப்பட்டமாக பொய் கூறுகிறாய்.

எங்களது போர்வையில் அமர்ந்து அதை அசுத்தம் செய்து விடாதே எனக்கூறி போர்வையை இழுத்து விட்டார். அப்போது மவ்லவி நூருத்தீன் சாஹிப் (முதலாவது கலீஃபத்துல் மஸீஹ்) அவர்கள் எழுந்து மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிபின் கையைப் பிடித்து இங்கு எங்களோடு அமருங்கள் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அப்துல் ஹமீது சாட்சி கூறினான். அப்துல் ஹமீது மற்றும் மவ்லவி முஹம்மது ஹுஸைனின் சாட்சிகள் பொய்யை அடிப்படையாகக் கொண்டது என்பதை நீதிபதி புரிந்து கொண்டார். சாட்சிகளுக்குப் பிறகு அவை முடிந்தது. தீர்ப்பு வழங்கப்படவில்லை.

துணை கமிஷனரின் கோப்புகளை வைத்திருப்பவர் கூறுகிறார்: நான் மிஸ்டர் வில்லியம் டக்லஸ் அவர்களை மிகக் கடுமையான குழப்பத்தில் இருப்பதைக் கண்டு அவரிடம் காரணம் கேட்டபோது அவர் கூறினார்: நான் மிர்ஸா சாஹிபின் முகத்தைப் பார்த்ததிலிருந்து ஒரு மலக்கு மிர்ஸா சாஹிபின் பக்கம் கையை காட்டி மிர்ஸா சாஹிப் குற்றவாளி இல்லை. அவர் மீது எந்த குற்றமும் இல்லை என என்னிடம் கூறுகிறார். இப்போது நீதிமன்றத்தை முடித்து விட்டு வந்துள்ளேன். எனக்கு மிர்ஸா சாஹிபின் முகம் தெரிகிறது. அவர்கள் இந்த வேலையை செய்யவில்லை. அனைத்தும் பொய்யாகும் என்று கூறுகிறார்கள். இதன் காரணமாக எனது நிலை பைத்தியக்காரனைப் போல் ஆகிவிட்டது.

அப்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மிஸ்டர் லிமார் சந்த் சாஹிப் கூறினார்: இது உங்களுடைய தவறாகும். நீங்கள் சாட்சிகளை பாதிரிகளிடம் ஒப்படைத்துள்ளீர்கள். அவர்கள் அவனுக்கு எதைக் கற்றுக் கொடுக்கின்றனரோ அதையே நீதிமன்றத்தில் வந்து கூறுகிறான்.

அப்போது அதே வேலையில் அப்துல் ஹமீதை போலீஸ் காவலில் ஒப்படைக்குமாறு நீதிபதி மிஸ்டர் டக்லஸ் கட்டளை பிறப்பித்தார். அப்துல் ஹமீது தனது வாதத்தில் மாறிவிடக் கூடாது என்பதற்காக எதிரிகள் அழுத்தம் கொடுத்தனர். அதன் காரணமாக அவன் தனது வாதத்தில் உறுதியாக நின்றான். ஆனால் மிஸ்டர் லிமார் சந்த் சாஹிப் அவனிடம் தேவையில்லாமல் நேரத்தை வீணடிக்காதே. உண்மையை கூறி விடு எனக் கூறினார்.

இவ்வாறு கூறியதும் அப்துல் ஹமீது அவருடைய கால்களில் விழுந்து விட்டான். கண்ணீர் கொட்ட கொட்ட அழ ஆரம்பித்தான். அனைத்து சூழ்ச்சி பற்றிய உண்மையைக் கூறினான். இதன் காரணமாக மீண்டும் அவனிடம் புதிதாக எழுதி வாங்கப்பட்டது. அதில் இந்த சூழ்ச்சி பற்றி உண்மையைக் கூறியதோடு மட்டுமின்றி இதுவரை அவனுக்கு எது கற்றுக் கொடுக்கப்பட்டதோ அதையே கூறி வந்ததாகவும் ஒப்புக் கொண்டான்.

20 ஆகஸ்ட் அன்று மீண்டும் நீதிமன்றம் கூடியது. அப்துல் ஹமீது அரசாங்க சாட்சியாக நீதிமன்றத்தில் உண்மையைக் கூறியபோது பாதிரிமார்கள் மற்றும் அவர்களுடனிருந்தவர்களின் பாதங்களிலிருந்து பூமி விலகி விட்டது. மார்ட்டின் கிளார்க் பாதிரியாரும் தனது இறுதி வாதத்தில் தனது அப்பாவித்தனத்தை வெளிப்படுத்த இங்கும் அங்கும் முயற்சி செய்தார். ஆனால் இரகசியம் வெளிப்பட்டு விட்டது.

எனவே 23 ஆகஸ்ட் 1897 அன்று மிஸ்டர் வில்லியம் மாண்டிகோ டக்லஸ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நிரபராதி என விடுவித்தார். அத்தோடு டாக்டர் மார்ட்டின் கிளார்க் தொடர்பாக குலாம் அஹ்மது தரப்பிலிருந்து எந்த ஆபத்தும் ஏற்படாது என்பதற்கு எந்த உத்திரவாதமும் பெற வேண்டிய தேவையில்லை எனவும் தீர்ப்பு எழுதினார்.

எனவே அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். அத்தோடு வில்லியம் மாண்டோ டக்லஸ் நீதிமன்றத்திலேயே புன்னகைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். நீங்கள் மார்ட்டின் கிளார்க் மீது வழக்கு தொடுக்க விரும்புகின்றீர்களா? இது உங்களது உரிமையாகும் என்றும் கூறியபோது அன்னார் ஈமானை வலுவூட்டக்கூடிய பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் யார் மீதும் வழக்கு தொடுக்க விரும்பவில்லை. எனது வழக்கு வானத்தில் பதியப்பட்டுள்ளது.

(ஹயாத்தே அஹ்மது தொகுதி 4 பக்கம் 602)

இவ்வாறு இந்த வேதனை சில நாட்களில் முடிவுக்கு வந்தது. இறை உதவிக்குச் சான்றாக அமைந்தது. இன்னல்கள் மற்றும் துன்பங்களின் சூறாவளி வந்தாலும் அன்னாருக்கு இறைவன் மீதிருந்த நம்பிக்கை மற்றும் நிச்சய உறுதியை அசைக்க முடியாது என்பதை இந்த வழக்கு மீண்டும் ஒருமுறை தெளிவாக்கியது.

(அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 1 பக்கம் 620)

**வழக்கு எண்:– 3**

பொருளாதார ரீதியில் அல்லாஹ்வின் உதவிகள் என்றென்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இருந்து வந்தன. அதிகமான உதவிகளைக் கண்டு பொறாமைக்காரர்கள் அன்னாரின் வருமானம் அதிகமானது ஆகும். அன்னார் சட்டத்திற்கேற்ப வருமான வரி செலுத்துவதில்லை. அரசாங்க சொத்திற்கு இழப்பு ஏற்படுத்துகிறார்கள் என பிரச்சனையை கிளப்பினர். இவ்வாறு சிலரின் தகவலின் அடிப்படையில் 1898 ஆம் ஆண்டு 7200 ரூபாய்க்கு 167.50 ரூபாய் வருமானவரி போடப்படுவதாக பஞ்சாப்

அரசாங்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது வழக்கு பதிந்தது.

டாக்டர் மார்டின் கிளார்க்கும் அவருடைய நண்பர்களும் மகிழ்ச்சியடைந்தனர். அதாவது நமது முதல் குறி தப்பிவிட்டது. இந்த வழக்கில் கண்டிப்பாகப் பிடிக்கப்படுவார் என்று எண்ணினர். ஆனால் அல்லாஹ் தனது நேசத்திற்குரியவரின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கான அடையாளத்தை வெளிப்படுத்திய பின்னர் பொருளாதார ரீதியிலும் உதவிக்கான அடையாளங்களை காட்ட வேண்டியதிருந்தது. இந்த வழக்கு ஓர் இந்து தாசில்தாரிடம் இருந்தது.

மதிப்பிற்குரிய ஷேக் அலி அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வக்கீலாக இருந்தார்கள். 20 ஜூன் 1898 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அப்போது அன்னார் மஸ்ஜிது முபாரக்கில் சிலரோடு அமர்ந்து வரவு செலவு கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னாருக்கு விழித்திருந்த நிலையில் ஆன்மீகக் காட்சி காட்டப்பட்டது. அதில், இந்த வழக்கு யாரிடம் இருந்ததோ அந்த தாசில்தார் மாற்றப்பட்டு விட்டதாகவும், அத்தோடு வெற்றிக்கான நற்செய்தியும் காட்டப்பட்டன.

(ஹயாத்தே அஹ்மது தொகுதி 5 பக்கம் 49)

அதற்கிடையில் திடீரென அந்த இந்து தாசில்தார் மாறிவிட்டார். மேலும் அவரின் இடத்திற்கு பட்டாவிலுள்ள பாக்பான்பூரைச் சார்ந்த முன்ஷி தாஜுத்தீன் சாஹிப் வந்தார். 1898 ஆகஸ்ட் மாதம் சார்பற்ற முறையில் ஆய்வு செய்தார். அதன் பிறகு குர்தாஸ்பூர் மாவட்ட ஆட்சியர் மிஸ்டர் F.T. டிக்ஸன் அவர்களுக்கு விரிவான அறிக்கையை அனுப்பினார். மிர்ஸா குலாம் அஹ்மதுக்கு அவருடைய நிலம் மற்றும் தோட்டத்திலிருந்து வரும் வருமானத்தைத் தவிர வருமான வரி செலுத்தும் அளவுக்கு வருமனாம் வேறெதுமில்லை. நான் சம்பவ இடத்திலும், இரகசியமாகவும் மிர்ஸா குலாம் அஹ்மதின் தனிப்பட்ட வருமானம் தொடர்பாக சிலரிடம் விசாரித்தேன். ஆனால் சிலரிடமிருந்து மிர்ஸா குலாம் அஹ்மதின் தனிப்பட்ட வருமானம் அதிகமாகும் எனவும் தெரிய வந்தது.

முன்ஷி தாஜுத்தீன் சாஹிப் தனது அறிக்கையின் இறுதியில் மிர்ஸா குலாம் அஹ்மது ஒரு கண்ணியத்திற்குரிய குடும்பத்தைச் சார்ந்தவர். அவருடைய மூதாதையர்கள் செல்வந்தர்களாக இருந்துள்ளனர். மிர்ஸா குலாம் அஹ்மதும் கூட பணியாற்றி இருக்கின்றார். மிர்ஸா குலாம் அஹ்மது ஒரு செல்வந்தராவார். எனவே வருமான வரி அவர் செலுத்த வேண்டும் என்ற எண்ணமும் எழுவதாக குறிப்பிட்டார்.

இந்த அறிக்கையோடு அனைத்து கோப்புகளையும் மிஸ்டர் F.T. டிக்ஸன் சாஹிபிற்கு டல்ஹவ்ஸிக்கு அனுப்பினார்கள். அவர் கோப்புகளைப் பார்த்து விட்டு ஹுஸூர் அவர்களுக்கு வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தார். தீர்ப்பு எழுதும் போது, ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் தாசில்தார் முன்பு அன்னாரின் நிலத்தின் விவசாயம் மற்றும் விளைச்சல் வருமான வரிக்கு உட்படாது. ஏனென்றால், இந்த அனைத்து வருமானமும் மார்க்க செலவீனங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று கூறினார்கள். எனவே இந்த மனிதர் வெளிப்படுத்திய நல்லெண்ணத்தின் மீது நான் சந்தேகம் கொள்ள எந்த காரணமும் எனக்கு ஏற்படவில்லை. எனவே நான் இவரை வருமான வரியிலிருந்து விடுவிக்கிறேன் என்று எழுதினார். (அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 2 பக்கம் 15)

**வழக்கு எண்:– 4**

மார்ட்டின் கிளார்க் வழக்கில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கு தோல்வியும் இழிவும் ஏற்பட்ட காரணத்தால் அதற்கு பழிவாங்குவதற்காக அன்னாரை எதிர்ப்பதில் உச்சகட்டத்தை அடைந்திருந்தார். அதனால் அன்னாரின் ஒரு நண்பர் லூதியானாவைச் சார்ந்த மவ்லவி அப்துல் காதிர் சாஹிப், மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிபிடம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பட்டாலாவில் நிபந்தனையற்ற முபாஹலா செய்யுமாறு வேண்டிக் கொண்டார். அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு கடிதம் மூலம் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிபை நிபந்தனையற்ற முபாஹலாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள்.

அத்தோடு 200 ரூபாய் பரிசுத் தொகை தருவதாகவும் அறிவித்தார்கள். ஜமாஅத் சகோதரர்களின் ஆர்வத்தைப் பார்த்து முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப் வெற்றி பெறுகின்ற பட்சத்தில் அந்த முபாஹலாவின் பரிசுத் தொகை இரண்டாயிரத்து ஐநூற்றி இருபத்தைந்து ரூபாய் எட்டு அனா வரை உயர்ந்து விட்டது. மதிப்பிற்குரிய ஷேக் யாகூப் அலி சாஹிப் துராப் அவர்கள் அக்டோபர் 1898–ல் முபாஹலாவிற்கான அறிவிப்பு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில். வாருங்கள்! ஆண் மகனாக மைதானத்தில் வந்து முபாஹலா செய்யுங்கள். முபாஹலாவில் கலந்து கொள்வதற்கான சம்மதத்தை 1898 நவம்பருக்குள் தாருங்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

ஆனால் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப் அழைப்பிற்கு பதிலளிக்காமல் கடுமையாக பேச ஆரம்பித்தார். மேலும் அபுல் ஹஸன் திப்தி மற்றும் முல்லா முஹம்மது பக்ஷ் ஜஃபர் ஸட்லி தரப்பிலிருந்து ஏச்சுப் பேச்சுக்கள் நிறைந்த பிரசுரத்தை வெளியிட்டார். இந்த ஏச்சுப் பேச்சுக்கள் நிறைந்த பிரசுரம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கிடைத்தபோது அன்னார் கீழ்வரும் பிரசுரத்தை வெளியிட்டார்கள்.

இப்போது இந்த பிரசுரம் என் முன்னால் உள்ளது. இறைவனே! எனக்கும் முஹம்மது ஹுஸைனுக்கும் இடையில் தீர்ப்பு வழங்க நான் இறைவனிடம் துஆ செய்தேன்.....

எனது கண்ணியத்திற்குரியவனே! படைப்பாளனே! முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தனது பத்திரிகையான இஷாஅத்துஸ் ஸுன்னாவில் மீண்டும் மீண்டும் என்னை பெரும் பொய்யன் என்றும், தஜ்ஜால் என்றும், இட்டுக் கட்டுபவன் என்ற வார்த்தைகளால் நினைவு கூர்வதைப் போன்று மேலும் என்னை இழிவுபடுத்த எந்த சிறியதிலும் சிறிய சந்தர்ப்பத்தையும் விட்டுவிடாத அளவுக்கு நான் உனது பார்வையில் இழிவடைந்தவனாகவும், பொய்யனாகவும், இட்டுக் கட்டுபவனாகவும் இருந்தால், உனது பார்வையில் நான் அதுபோன்ற இழிவடைந்தவனாக இருக்கிறேன் என்றால் 13 (பதிமூன்று) மாதத்திற்குள் அதாவது 15 டிசம்பர் 1898–லிருந்து 15 ஜனவரி 1900–ற்குள் இழிவின் அழிவைத் தருவாயாக! அவர்களின் கண்ணியத்தையும் மரியாதையையும் வெளிப்படுத்துவாயாக!

அவ்வாறில்லாமல் உன்னிடத்தில் எனக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கிறதென்றால் பிறகு எனக்காக அடையாளத்தை வெளிப்படுத்துவாயாக! அதாவது அந்த மூவரையும் (மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப், அபுல் ஹஸன் திபதி சாஹிப், முல்லா முஹம்மது பக்ஷ் சாஹிப் ஜஃபர் ஸட்லி) இழிவுபடுத்துவாயாக. ஆமீன். ஆமீன்.

நான் செய்த இந்த துஆவிற்குப் பதிலாக, நான் அநீதியாளனை இழிவுபடுத்துவேன். மேலும் அவர் தனது கையை வெட்டிக் கொள்வார் என்ற இல்ஹாம் இறங்கியது. இது இறைவனின் தீர்ப்பாகும். அதன் சுருக்கம், இந்தப் பிரசுரத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள இரு பிரிவினரில் எவர் இறைவனின் (தண்டனை பற்றிய) கட்டளையின் கீழ் இருக்கிறாரோ – அவர்களில் யார் பொய்யராக இருக்கிறாரோ அவர் அவமானத்திற்குள்ளாவார்.

இந்த பிரசுரத்திற்குப் பதிலாக ஜஃஃபர் ஸட்லி **30**, நவம்பர் **1898–**ஆம் ஆண்டு மீண்டும் ஏச்சுப் பேச்சுக்கள் நிறைந்த ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை பொய்ப்படுத்தியதோடு மட்டுமின்றி உள்ளத்திலிருந்த காழ்ப்புணர்ச்சிகளையெல்லாம் கொட்டித் தீர்த்தார். இரு தரப்பினருக்கிடையே யார் உண்மையாளர்? யார் பொய்யர் என்ற தீர்ப்பை அல்லாஹ் தனது கையில் வைத்திருப்பதனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ராஸே ஹகீகத் அதாவது உண்மையின் இரகசிம் என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதி அதில் தனது ஜமாஅத்தினருக்கு இவ்வாறு அறிவுரை கூறினார்கள்:

வீண் பேச்சுக்களுக்கு எதிரில் வீண்பேச்சுகளைக் கூறி இறையச்சத்தின் வழிமுறையை கைவிட்டு விடாதீர்கள். ஏச்சுப்பேச்சுகளுக்கு எதிரில் ஏசிப்பேச வேண்டாம். ஜமாஅத்தினர் ஏராளமாக எள்ளிநகையாடல்களைக் கேட்பர்..... ஆனால் அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். இறையச்சம் மற்றும் நல்லியல்புடன் இறைவனின் பார்வையில் அவனது உதவிக்கு தகுதியுடையவர்களாக இருங்கள். இறையச்சத்தையும், பொறுமையையும் இழந்து விடாதீர்கள்.

இப்போது இந்த வழக்கின் கோப்புகள் எப்படிப்பட்ட நீதிமன்றத்தில் உள்ளன என்றால் அங்கு யாருக்கும் எந்த பாகுபாடும் பார்க்கப்பட மாட்டாது. கண்ணியக்குறைவான வழிமுறைகளை அது விரும்புவதில்லை...... நான் உங்களிடம் கூறுகின்றேன். நீங்கள் இறைவனை அவமானப்படுத்துவதற்கு அஞ்சிக் கொள்ளுங்கள். மென்மையையும், பொறுமையையும், இறையச்சத்தையும் மேற்கொள்ளுங்கள்..... மேலும் இறையச்சத்தில் முன்னேறிச் செல்லுங்கள். இறையச்சத்தை மேற்கொள்பவர்களை அவன் வீணாக்குவதில்லை.

(ராஸே ஹகீகத் தொகுதி 1 பக்கம் 2)

இதற்கிடையே மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் இழிவிற்கான ஏற்பாடுகள் பல நடந்தன. அதில் ஒரு சம்பவம் என்னவென்றால், மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அரசாங்கத்திடமிருந்து மரியாதையைப் பெற வேண்டும் என்பதற்காக தனது ஆங்கிலப் பத்திரிகையில் இறுதி காலத்தில் தோன்ற இருக்கும் இமாம் மஹ்தி தொடர்பான முன்னறிவிப்புகளை வெளிப்படையாக மறுத்து விட்டார். அதுமட்டுமின்றி மஹ்தியின் வருகைப் பற்றிய அனைத்து ஹதீஸ்களையும் நீக்கப்பட்டதாக கருதுவதாகவும் ஏழுதினார்.

மேலும் அரசாங்கத்திற்கு தனது விசுவாசத்தையும் நன்றியுணர்வையும் எழுதி, இஷாஅத்துஸ் ஸுன்னா என்ற தனது பத்திரிகையில் வெளியிட்டார். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி முழுக்க முழுக்க பௌதீக நலன்களுக்காக செய்த இந்த ஒரு நம்பிக்கைக்கு மாற்றமான செயலைப் பார்த்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் டிசம்பர் **1898–**ஆம் ஆண்டு இந்திய ஆலிம்களிடம் ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) கேட்டார்கள்.

அதாவது எவர் இமாம் மஹ்தி தொடர்பாக ஹதீஸ்களில் கூறப்பட்டவற்றை முற்றிலும் மறுக்கிறாரோ மேலும் அந்த ஹதீஸ்களை வீணானவையாக கருதுகிறாரோ அவரை அஹ்லே சுன்னத் என்றும் நேர்வழியில் உள்ளார் என்றும் கருதலாமா? என மார்க்கத் தீர்ப்பு கேட்டார்கள்.

அதற்கு, இவர் (முஹம்மது ஹுஸைன் பட்டாலவி) காஃபிர், வழிதவறியவர், இட்டுக்கட்டுபவர், அஹ்லே சுன்னத்தை விட்டு வெளியேறியவர், பொய்யர் மற்றும் தஜ்ஜால் ஆவார் என்று அனைத்து ஆலிம்களும் ஒருமனதாக ஃபத்வா கொடுத்தனர்.

இதன் அடிப்படையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆலிம்களின் ஃபத்வாவின் விளக்கத்தை பிரசுரமாக பகிரங்கமாக வெளியிட்டார்கள்.

அதில் அன்னார், மவ்லவி முஹம்மது ஹுஸைன் தகாத வார்த்தைகளால் என்னை இழிவுபடுத்தினார். மேலும் பஞ்சாப் மற்றும் இந்தியாவின் மவ்லவிமார்களிடம் என்னைப் பற்றி காஃபிர் என்றும், தஜ்ஜால் என்றும் பொய்யன் என்றும் ஃபத்வா எழுத வைத்தார். இப்போது பஞ்சாப் மற்றும் இந்தியாவின் மவ்லவிகள் அவர் தொடர்பாக அதே ஃபத்வாவை வழங்கியுள்ளனர் என்று கூறினார்கள்.

(அல்ஹகம் 10 ஜனவரி 1889 பக்கம் 4)

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தனது ஆங்கில பத்திரிகையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக அன்னார் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்வதாக குற்றம் சாட்டியதோடு ஆங்கிலேய அரசாங்கம் **8** வருட காலத்திற்குள் அழிந்து விடும் என்று அன்னார் ஓர் இல்ஹாமை வெளியிட்டுள்ளதாகவும் எழுதினார்.

இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் **1898–**ஆம் ஆண்டு கஷ்ஃபுல் கதா என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார்கள். அதில் நான் கிளர்ச்சி செய்வதாக சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் இட்டுக்கட்டப்பட்டது என்றும் மேலும் அவர் கூறிய இல்ஹாம் நான் எந்த நூலில் அல்லது எந்த பிரசுரத்தில் கூறியுள்ளேன் என்பதை முஹம்மது ஹுஸைன் பட்டாலவியிடம் கேட்குமாறும் தெளிவாக அரசாங்கத்திற்கு கூறினார்கள்.

ஆரம்பத்தில் இதன் பக்கம் அரசாங்கம் முற்றிலும் கவனம் செலுத்தவில்லை. ஆனால் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மறைமுகமாக ஆங்கில பத்திரிகையில் வெளியிட்டதற்காக அவருக்கு நான்கு நிலங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அவருடைய ரகசிய தகவல் தருபவர்களின் காரணமாக அரசாங்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக செயல்படத் தொடங்கியது.

ஓர் ஆங்கிலேய கேப்டன் போலீஸ் இன்ஸ்பெக்டர் (ராஜா ஜமாலுத்துன்) சிப்பாய்களோடு மாலை வேளையில் காதியானுக்கு வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வீட்டை சுற்றி வளைத்தனர். கேப்டனும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் பள்ளியின் மாடிக்கு சென்றனர். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு செய்தி கிடைத்ததும் வெளியே வந்தார்கள்.

கேப்டன் இவ்வாறு கூறினார்: நாங்கள் உங்களுடைய வீட்டை சோதனையிட வந்துள்ளோம். ஆப்கானிஸ்தானின் அமீர் அப்துர் ரஹ்மான் கானுடன் இரகசிய தொடர்பு உள்ளதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்றார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்கள், இது முற்றிலும் தவறாகும். நாம் ஆங்கிலேயே அரசாங்கத்தின் நீதி, நேர்மை, அமைதி மற்றும் அது வழங்கும் மார்க்க சுதந்திரத்தை உள்ளத்தால் போற்றுகிறோம். ஆனால் இப்போது நாங்கள் தொழப் போகிறோம். தாங்கள் காத்திருங்கள் என்றார்கள்.

அதை கேப்டன் போலீஸ் எற்றுக் கொண்டார். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் பாங்கு கொடுத்து தொழ வைத்தார்கள். அன்னார் (அலை) அவர்களின் கிராஅத்தில் மின்னல் தன்மை இருந்தது. கேப்டன் இறைவனின் மகத்துவம் நிறைந்த

வார்த்தையைக் கேட்டு வியப்பில் ஆழ்ந்து விட்டார். தொழுகை முடிந்ததுமே எழுந்து நின்று ஹுஸூர் (அலை) அவர்களிடம், நீங்கள் நேர்மையானவரும், இறைவணக்கம் செய்பவரும் ஆவீர்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். நீங்கள் உண்மையாளர்கள் ஆவீர்கள். எதிரிகள் உங்கள் மீது தவறான குற்றச்சாட்டு வைத்துள்ளனர் என்று கூறி சோதனையிடுவதை கைவிட்டு விட்டார். மிர்ஸா சாஹிபிற்கு எதிராக இவ்வாறு தவறாக பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது என அரசாங்கத்திற்கு அறிக்கையும் அனுப்பினார்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி முபாஹலா அழைப்பிற்கு பதில் கூற முடியாமல் இருந்தார். மேலும் அவர் இழிவடைந்து கொண்டிருப்பதைக் கண்டு எதையாவது செய்ய வேண்டும் என முயற்சித்தார். 13 மாதங்களில் இழிவடைவார் என்ற அந்த முபாஹலா அழைப்பிலிருந்து எப்படியாவது ஓடி விடுவதற்கு சாக்குப் போக்குகளை தேடினார். இவ்வாறு ஒரு புதிய விதிமுறையை கையாண்டவாறு ஒரு கூர்மையான கத்தியை மக்களுக்கு காட்டி மிர்ஸா சாஹிப் லேக்ராமைப் போல் என்னையும் கொல்ல ஏற்பாடு செய்துள்ளார் என மக்களை தூண்ட ஆரம்பித்தார்.

மேலும் தனது உண்மைத்துவத்தை நிரூபிக்கவும், முன்னறிவிப்பை உண்மை என நிரூபிக்கவும் என்னை கொல்ல வைக்கலாம். எனவே எனக்கு துப்பாக்கிக்கான உரிமம் தருமாறு பட்டாலாவிலுள்ள துணைக் கமிஷனரிடம் விண்ணப்பித்தார். பட்டாலாவிலுள்ள காவல் நிலையத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கடுமையான எதிரி முஹம்மது பக்ஷ் என்பவர் துணை ஆய்வாளராக இருந்தார். அவர் குர்தாஸ்பூரின் துணை ஆய்வாளருக்கு ஒரு அறிக்கை அனுப்பினார்.

அதில் ஹென்றி மார்ட்ரின் கிளார்க் வழக்கில் மிர்ஸா குலாம் அஹ்மது விடுதலையானபோது இனிமேல் இதுபோன்ற அமைதிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய பிரசுரம் வெளியிடவோ, முன்னறிவிப்பு செய்யவோ கூடாது என கேப்டன் டக்லஸ் தீர்ப்பு கூறியிருந்தார். ஆனால் மிர்ஸா சாஹிப் இப்போது முன்னறிவிப்பு செய்து அதை மீறியுள்ளார். அதனால் அமைதிக்கு பங்கும் ஏற்படும் அபாயம் உள்ளது என எழுதினார்.

இந்த அறிக்கை மற்றும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் துப்பாக்கி உரிமம் பெற கொடுத்த விண்ணப்பம் ஆகியவற்றின் பெயரில் துணை ஆணையர் 5 ஜனவரி 1899 அன்று ஆஜராகுமாறு உத்தரவிட்டார். இதனால் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மற்றும் அவருடன் ஒத்த சிந்தனையாளர்கள் அனைவரும் வழக்கில் வெற்றி பெறுவதற்காக ஆயத்தங்களை தொடங்கினர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இது தொடர்பான அனைத்து செய்திகளும் கிடைத்திருந்தும் அன்னார் அணுவளவு கூட பதற்றமடையவில்லை.

இந்த வழக்கிற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் சென்றார்கள். தனது உடனிருந்தவர்களுடன் நீதிமன்றத்திற்கு சென்றார்கள். 12 மணி வரை நீதிமன்ற அவைக்காக காத்திருந்தார்கள். முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் வக்கீல் விண்ணப்பத்தின் அடிப்படையில் வழக்கு 11 ஜனவரிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

11 ஜனவரி அன்று ஹுஸூர் அவர்கள் மீண்டும் குர்தாஸ்பூர் வந்தார்கள். நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். அன்றைய தினம் எதிர்தரப்பு வாதம் வைக்கப்பட்டது. பண்டித் லேக்ராம் கொல்லப்பட்டதன் காரணத்தால் நான் ஏற்கனவே மிகவும் அச்சத்திற்குள்ளாகியுள்ளேன். மேலும் என்னை பாதுகாத்துக் கொள்வதற்காக கத்தி வைத்துள்ளேன். 1898–ல் பிரசுரம் மூலம் மிர்ஸா சாஹிப் என்னை இன்னும் அச்சத்திற்குள்ளாக்கியிருக்கிறார் என மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரப்பு வாதத்தில் கூறினார்கள்: பண்டித் லேக்ராம் பற்றிய முன்னறிவிப்பு அவருடைய விருப்பத்தின் அடிப்படையிலேயே எழுத்து ரீதியாக அவர் வேண்டி கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலேயே செய்யப்பட்டது. பண்டித் லேக்ராம் பெஷாவரிலிருந்து காதியான் வந்து 2 மாதங்கள் தங்கி இருந்தார். தீய வார்த்தைகளை பேசி வந்தார். அதுமட்டுமின்றி நான் மூன்று ஆண்டுகளுக்குள் காலரா நோயால் மரணித்து விடுவேன் என்ற முன்னறிவிப்பு அடங்கிய பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டார். முன்னறிவிப்பை அவரே முதலில் வெளியிட்டார்.

எவ்வாறிருப்பினும் இரு தரப்பு வாதத்திற்குப் பிறகு காவல்துறை ஆய்வாளர் மதிப்பிற்குரிய சய்யிது ஷபீர் ஹுஸைன் சாஹிபும் சாட்சி கூறினார். அவர் கூறும்போது குர்தாஸ்பூர் மாவட்டத்திற்கு முன்பு லாஹூர் மாவட்டத்தில் காவல் ஆய்வாளராக இருந்தேன். பண்டித் லேக்ராம் கொல்லப்பட்டபோது நான் அங்கு இருந்தேன். மிர்ஸா குலாம் அஹ்மதுக்கும் அந்த கொலைக்கும் தொடர்பு இருந்தது என்பது பொதுவான வலுவான சந்தேகமாக இருந்தது. எனவே இரு தரப்பினரின் வாதத்தின் அடிப்படையில் அமைதிக்கு பங்கம் ஏற்படும் ஆபத்து இருக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றார்.

இந்த வாதங்களுக்குப் பிறகு வழக்கு 27 ஜனவரிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. தாரிவால் என்ற இடத்தில் விசாரனை நடக்கும் என நியமிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை காப்பாற்றும் வகையில் ஒரு விரிவான எழுத்து வடிவிலான வாதத்தை ஆங்கிலத்தில் அச்சிட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்கள். அதில் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, பண்டிட் லேக்ராம், பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் ஆகியயோரின் உண்மை நிலை பற்றிய தமது முன்னறிவிப்புகளின் சம்பவங்களை விரிவாக எழுதினார்கள். அதேபோல் தனது இந்த பிரசுரத்தில் அவருடைய உயிர், பொருள் மற்றும் கண்ணியத்திற்கு ஆபத்து உள்ள எந்த முன்னறிவிப்பும் இல்லை என்று அவரின் வாதத்திற்கு மறுப்பு எழுதியிருந்தார்கள். அது மட்டுமின்றி தனது குடும்பத்தின் அந்தஸ்து மற்றும் ஜமாஅத்தின் தகுதிகளை எடுத்துரைத்து தன்னை அமைதியின் தூதுவர் எனவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

(தப்லீக், தொகுதி 8 பக்கம் 24)

27 ஜனவரி அன்று 12 மணிக்கு நீதிமன்றத்திற்கு சென்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரப்பிலிருந்து முன்பிருந்த அதே வக்கீல்கள் ஆஜராயினர். ஆனால் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தரப்பிலிருந்து ஒரு புதிய சட்ட ஆலோசகளர் மிஸ்டர் ஹர்பர்ட் என்பவர் வாதாட வந்தார். அவர் சட்ட ரீதியாக ஒரே நேரத்தில் வழக்கு விசாரணை நடக்க இயலாது என காரணம் கூறினார். இவ்வாறு வழக்கு 14 பிப்ரவரிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

துணை ஆணையர் 14 ஆம் தேதிக்கு முதலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழக்கை விசாரிக்க உத்தரவிட்டார். முந்தைய நடவடிக்கை தள்ளுபடி செய்யப்பட்டது.

3 பிப்ரவரி 1899 அன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கனவின் மூலமாக அன்னார் விடுதலை ஆவார்கள் என்றும் எதிரி தோல்வியடைவான் என்றும்

நற்செய்தி வழங்கினான். (ஹகீகத்துல் மஹ்தி பக்கம் 10)

இறுதியில் 14 பிப்ரவரியும் வந்தது. அன்னார் குர்தாஸ்பூர் சென்றார்கள். இன்று நமது எதிரி நீதிமன்றக் கூண்டில் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்படுவார் என எண்ணியும் அவர்களுக்கு மகத்தான வெற்றி கிடைக்கும் என எண்ணியும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மற்றும் அவரது கூட்டாளிகள் மகிழ்ச்சியாக இருந்தனர்.

ஆனால் நீதிபதி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உறுதியான எழுத்துக்களையும், அதற்கு எதிரில் முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் வெறுப்பு நிறைந்த பிரசுரங்களையும் பார்த்து வியப்படைந்தார். மேலும் போலீஸ் தரப்பிலிருந்து மிகவும் சிரமப்பட்டு தயாரிக்கப்பட்ட வழக்கையும் தள்ளுபடி செய்தார்.

பிறகு ஒரு ஒப்பந்தத்தில் இரு தரப்பினரிடமும் கையெழுத்து வாங்கினார். அதில் இனிமேல் எந்த தரப்பினரும் தனது எதிர்தரப்பு தொடர்பாக மரணம் பற்றி உள்ளத்திற்கு கஷ்டமளிக்கக்கூடிய கருத்துகளைக் கொண்ட முன்னறிவிப்பு செய்யக் கூடாது. யாரும் பிறரை காஃபிர் என்றோ, தஜ்ஜால் என்றோ, இட்டுக்கட்டுபவன் என்றோ, பெரும் பொய்யன் என்றோ கூறக் கூடாது. யாரும் யாரையும் முபாஹலாவிற்கு அழைக்கக் கூடாது.... ஒருவர் பிறர் தொடர்பாக மென்மையான வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும் என்றும், தீய வார்த்தைகள், ஏச்சுப்பேச்சுக்களிலிருந்து விலக வேண்டும் என்றும் எழுதப்பட்டிருந்தது.

**வழக்கு எண்:– 5**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜனவரி 1897 ஆம் ஆண்டு கிருத்தவர்களுக்கு ஓராயிரம் ரூபாய்க்கான பரிசுத்தொகை தருவதாக அறிவித்து பிரசுரம் ஒன்றை வெளியிட்டார்கள். அதில் ஈஸா (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளை விட எனது முன்னறிவிப்புகள் அதிகமாகும் எனக் குறிப்பிட்டு விட்டு ஏதேனும் ஒரு பாதிரியார் என்னுடைய முன்னறிவிப்புகளோடு ஒப்பிடுகையில் ஈஸாவின் அடையாளங்கள் அதிகம் என ஆதாரங்களுடன் நிரூபித்தால் அவருக்கு நான் ஆயிரம் ரூபாய் ரொக்கத்தொகை வழங்குவேன் என கூறியிருந்தார்கள்.

ஆனால் எந்த கிருத்தவருமே போட்டியிடுவதற்கு களத்திற்கு வரவில்லை. ஆனால் ஒரு முஸ்லிம் ஆலிம் அஸ்கர் அலி ஹுஸைன் சாஹிப் கோட்காவு என்ற இடத்தில் நீதிபதி லாலாஜோதி பிரஷாத் சாஹிபின் நீதிமன்றத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக முறையிட்டார். அதாவது நான் இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்கின்றேன். ஏனென்றால் நானும் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொள்கின்றேன். இதன் காரணமாக நானும் கிருத்தவனாவேன். எனவே மிர்ஸா சாஹிபின் பிரசுரத்திற்கு ஏற்ப எனக்கு ஆயிரம் ரூபாயை பெற்றுத் தாருங்கள் என விண்ணப்பித்தார். இது பற்றி ஆம் மற்றும் ஸத் தரம் போன்ற இந்துப் பத்திரிகைகளுக்கு தெரியவந்தபோது அவர்கள் இதன்மேல் பெரும் பெரும் குறிப்புகள் எழுதினர்.

எவ்வாறிருப்பினும், வழக்கின் சம்மன் காதியான் வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மவ்லவி முஹம்மது அலி M.A, மிர்ஸா ஹுதா பக்ஷ் சாஹிப் மற்றும் மிர்ஸா அஃப்ஸல் சாஹிப் ஆகியோரை வழக்கு விசாரணைக்கு குர்காவ்ன் அனுப்பி வைத்தார்கள். லாலா ஜோதி பிரஷாத் சாஹிப் அரசாங்க நடவடிக்கைகளுக்குப் பிறகு வழக்கை தள்ளுபடி செய்து விட்டார். மேலும் இந்த வழக்கு விசாரணைக்கு தகுந்ததாக இருக்கவில்லை. ஆனால் இந்த வழக்கை காரணம் காட்டி, மிர்ஸா சாஹிபை பார்க்கலாம் என்ற எண்ணத்தில்தான் வழக்கை எடுத்துக் கொண்டேன். ஆனால் அவர்கள் வராததால் இதை தள்ளுபடி செய்கிறேன் என்று கூறினார்.

(அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 2 பக்கம் 62)

**வழக்கு எண்:– 6**

மவ்லவி கரம் தீன் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் ஹக்கீம் ஃபஸல் தீன் சாஹிபின் பெயரில் கடிதம் அனுப்பினார். அதில் பீர் மெஹர் அலி ஷாஹ் சாஹிப் அவர்களின் நூல் ஸைஃபே சிஷ்தியாயின் கருத்துக்கள் உண்மையில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் ஃபைஸி சாஹிபிடமிருந்து திருடப்பட்டவை என்று குறிப்பிட்டிருந்தார். மவ்லவி கரீம் தீன் சாஹிப் அதற்கு சான்றாக பீர் சாஹிப் அவர்கள் இவரது பெயரில் கோல்டவிக்கு அனுப்பிய கார்டை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அனுப்பினார்.

அன்னார் அந்த நாட்களில் நுஸூலுல் மஸீஹ் என்ற நூலை எழுதிக் கொண்டிருந்தார்கள். அந்த கடிதங்கள் தொடர்பாகவும் ஹுஸூர் (அலை) அவர்கள் இந்த நூலில் குறிப்பிட்டார்கள். அல்ஹகம் பத்திரிகையின் ஆசிரியரும் கூட அவைகளின் அடிப்படையில் ஒரு கட்டுரையும் வெளியிட்டார். அதில் அந்த கடிதங்களின் நகலையும் இணைத்திருந்தார்கள். அது வெளியிடப்பட்ட போது மவ்லவி கரம் தீன் சாஹிப் ஒரு கட்டுரை எழுதினார். அதை ஜெஹ்லமைச் சார்ந்த சிராஜுல் அக்பார் பத்திரிகை வெளியிட்டது.

அதில் அவர் இந்த அனைத்து கடிதங்களும் போலியானவை என்றும் நான் மிர்ஸா சாஹிபின் தகுதியை சோதிப்பதற்காக இவ்வாறு ஏமாற்றினேன் என்றும் எழுதினார். அத்தோடு மிர்ஸா சாஹிபின் அனைத்து செயல்களும் சூழ்ச்சியும், ஏமாற்று வேலையுமாகும். அவர் தனது வாதத்தில் பெரும் பொய்யர் என்றும் இட்டுக்கட்டுபவர் என்றும் எழுதினார். மவ்லவி கரம் தீனின் இந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை மறுத்து தனது குற்றமின்மையை நிரூபிக்க நீதிமன்றம் செல்லும் உரிமை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இருந்தும் அன்னார் பொறுமையை மேற்கொண்டார்கள்.

மேலும் மவ்லவி கரம் தீன் சாஹிப் தானே இந்த கட்டுரையை மறுப்பார் என்று எதிர்பார்த்து காத்திருந்தார்கள். ஆனால் ஒரு மாதம் வரை அதை மறுக்கவில்லை. எனவே ஸியாவுல் இஸ்லாம் அச்சகத்தின் உரிமையாளர் ஹக்கீம் ஃபஸல் தீன் சாஹிப் கரம் தீன் சாஹிபிற்கு எதிராக குர்தாஸ்பூரில் நீதிகேட்டு வழக்கு தொடுத்தார்கள். இவர்களுக்கு கரம் தீன் ஆரம்பத்தில் கடிதம் எழுதியிருந்தார். அந்த வழக்கு விசாசணையின்போது சாட்சிகள் கூறப்பட்டுக் கொண்டிருந்தபோது அச்சில் உள்ள நூலான நுஸூலுல் மஸீஹின் பக்கங்களை சமர்ப்பித்தார். அதற்கு ஹக்கீம் ஃபஸ்ல் தீன் சாஹிப் அவர்கள் மவ்லவி கரம் தீன் சாஹிபிற்கு எதிராக இன்னொரு வழக்கு தொடுத்தார்கள்.

அதில் நான் அச்சகத்தின் உரிமையாளர் எனும் அடிப்படையில் இந்த நூல் எனது கட்டுப்பாட்டில் இருந்தது. இது இன்னும் முறையாக வெளிவரவும் இல்லை. எனவே இந்த பக்கங்கள் திருடப்பட்டுள்ளன. மவ்லவி கரம் தீன் சாஹிப் இதை தன்னிடத்தில் வைத்திருப்பது குற்றமாகும் என்று வழக்கு தொடுத்தார்கள். இதேபோல் மவ்லவி கரம் தீன் சாஹிப் அல்ஹகம் பத்திரிகையின் ஆசிரியரான ஷேக் யாகூப் அலி சாஹிப் துராப் அவர்களுக்கு எதிராகவும் விஷத்தை கக்கினான்.

எனவே மவ்லவி கரம் தீன் சாஹிப் மற்றும் சிராஜுல் அக்பார் பத்திரிகையின் ஆசிரியர் மவ்லவி ஃபக்கீர் முஹம்மது சாஹிபிற்கு எதிராகவும் வாதத்தை முன் வைத்தார்கள். இவ்வாறு மவ்லவி கரம்

தீன் சாஹிபின் மீது மூன்று வழக்குகள் பதியப்பட்டன. இந்த வழக்குகளுக்குப் பதிலாக மவ்லவி கரம் தீன் சாஹிபும், ஜெஹ்லத்திலுள்ள ராய் சன்ஸார் சந்த் என்பவரும் நீதிமன்றத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் கஷ்மீரி சாஹிப் மற்றும் ஷேக் யஃகூப் அலி சாஹிப் துராப் ஆகியோரின் மீது வழக்கு பதிவு செய்தார். இந்த வழக்கில் ஹுஸூர் மற்றும் சஹாபாக்களின் பேரில் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

17, ஜனவரி 1903–ஆம் தேதி ஆஜராக நிர்ணயிக்கப்பட்டது. இந்த வழக்கில் எதிர்தரப்பு பத்திரிகைகள் அனைத்தும் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தின.

ஜெஹ்லம் பயணத்திற்கு ஆயத்தமாகும் முன் மவாஹிபுர் ரஹ்மான் அச்சிடப்பட வேண்டியது இருந்தது. அல்லாஹ் இந்த வழக்கில் வெற்றியை வழங்குவான் என்ற முன்னறிவிப்பு அதில் இருந்தது. இந்த புத்தகம் 15 ஜனவரி அன்று அச்சிடப்பட்டு தயாராகி விட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜெஹ்லம் செல்வதற்காக கிளம்பினார்கள். மாலை 3 மணிக்கு நீதிமன்ற அறைக்கு அன்னார் வந்தார்கள். வழக்கு விசாரணை ஆரம்பமானது.

ஹுஸூர் (அலை) அவர்கள் தரப்பு வக்கீல்கள் தரப்பிலிருந்து மவ்லவி கரம்தீன் சாஹிபிற்கு சட்டத்தின் அடிப்படையில் வழக்கு தொடுக்கும் உரிமையே இல்லை. ஏனென்றால் மரணித்தவருக்கு இவர் நெருங்கிய உறவினர் இல்லை என்று கேள்வி எழுப்பினர். இறுதியில் நீதிபதி ஜனவரி 19 ஆம் தேதியை நியமித்து இரு தரப்பும் ஜெஹ்லத்தில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. வக்கீல்களின் கண்காணிப்பில் தீர்ப்பு வழங்கப்படும் என்று கூறினார். அதனால் ஹுஸூர் (அலை) அவர்கள் காதியான் வந்து விட்டார்கள்.

அறிவித்திருந்தபடி நீதிமன்றம் 19 ஜனவரி 1903 அன்று தீர்ப்பு கூறியது. அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விடுவித்தது. மவ்லவி கரம் தீன் சாஹிபின் வழக்கை தள்ளுபடி செய்தது. மேலும் முஹம்மது ஹஸன் ஃபைஸி சாஹிபின் விதவை மனைவி மற்றும் குழந்தைகள் உயிருடன் இருக்கும்போது மவ்லவி கரம்தீன் சாஹிபிற்கு சட்ட ரீதியாக வழக்கு தொடுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றும் தீர்ப்பில் எழுதப்பட்டது.

மவ்லவி கரம் தீன் சாஹிப் ஜெஹ்லம் நீதிமன்றத்தில் ஸெஷன் ஜட்ஜ் (அமர்வு நீதிபதி) அவர்களின் நீதிமன்றத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹக்கீம் ஃபஸ்ல் தீன் மற்றும் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் மற்றும் அல்ஹகம் பத்திரிகையின் ஆசிரியருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரின் நண்பர்களும் கண்ணியத்துடன் விடுதலையானார்கள்.

(அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 2 பக்கம் 261)

**வழக்கு எண்:– 7**

மவ்லவி கரம்தீன் சாஹிப் தனது முதல் வழக்கில் தோற்ற காரணத்தால் 1903–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் ஸியாவுல் இஸ்லாம் அச்சகத்தின் உரிமையாளர் ஹக்கீம் ஃபஸல் தீன் அவர்கள் மீது மீண்டும் நீதிபதி ராய் ஸன்சார் சந்த் சாஹிபிடம் ஜெஹ்லம் நீதிமன்றத்தில் இரண்டாவது கிரிமினல் வழக்கை தொடர்ந்தார். அந்த வழக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலான மவாஹிபுர் ரஹ்மான் பக்கம் 129–ல் தன்னைப் பற்றி (அதாவது மவ்லவி கரம் தீன் பற்றி) பெரும் பொய்யன், பெரும் கயவன் மற்றும் மாபெரும் அவதூறு போன்ற வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார்கள் என்றும் மிர்ஸா சாஹிபின் இந்த நூல் ஹக்கீம் ஃபஸல் தீனின் அச்சகமான ஸியாவுல் இஸ்லாம் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது என்று கூறி இருவரின் மீதும் வழக்குப் பதிவு செய்தார்.

இந்த செய்தி கிடைத்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த வழக்கு நம் மீது தொடுக்கப்பட்டதாக தெரியவில்லை. மாறாக அல்லாஹ்வின் மீது தொடுக்கப்பட்டுள்ளது. இறைவன் தனது வலுவான தாக்குதல்களால் உண்மையை வெளிப்படுத்துவான் என நான் உறுதியாக நம்புகிறேன்.

எவ்வாறிருப்பினும், வழக்கு விசாரணை ஆரம்பமானது. வழக்கின் ஆரம்பத்திலேயே இந்த வழக்கு ஜெஹ்லமிலிருந்து குர்தாஸ்பூருக்கு மாற்றப்பட்டது. அங்குள்ள நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவர் அன்னாரின் மீது மிகக் கடுமையான காழ்ப்புணர்ச்சி கொண்ட ஓர் ஆரியர் ஆவார். அவரது பெயர் லாலா சந்தூ லால் ஆகும்.

வழக்கு விசாரணை பல நாட்களாக நடந்து வந்தது. இடையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாம் இந்த வழக்கில் ஆஜராக இயலாது என்று கூறி அனுமதி பெற்றுக் கொண்டார்கள்.14 ஜனவரி 1904 ல் அன்று விசாரணை இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நோயுற்றிருந்ததன் காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராக இயலாது என்று மருத்துவ சான்றிதழ் வாங்கி அனுமதி பெற்றார்கள்.

இதற்கிடையே ஆரியர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி லாலா சர்தூ லாலையும் அழைத்து மிர்ஸா சாஹிப் நமது தலைவர் பண்டிதர் லேக்ராமை கொலை செய்துள்ளார். இப்போது இரை சிக்கியுள்ளது. எனவே அவரை விட்டு விடக்கூடாது. வேட்டையாட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தனர். அதற்கு அந்த நீதிபதி, சிறைக்கு அனுப்புவது என்ன! என்னால் முடிந்தால் அவர்கள் அனைவரையும் நரகத்திற்கே அனுப்பி விடுவேன் என்று கூறினார்.

அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஓர் ஆரியரின் நண்பர் முன்ஷி முஹம்மது ஹுஸைன் என்பவர் அங்கு ஓரத்தில் அமர்ந்து கொண்டு இந்த கூட்டத்தில் பேசப்பட்ட விஷயங்களை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் ஜமாஅத்திற்கு எதிராக இருந்தாலும் ஒரு கண்ணியமான குடும்பத்தை சேர்ந்தவரை ஆரியர்கள் இழிவுபடுத்த நினைப்பதை விரும்பாத காரணத்தால் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் கான் சாஹிபிடம் நடந்த சம்பவத்தை கூறினார்.

ஹுஸூர் (அலை) அவர்களுக்கு இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. ஹுஸூர் (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் வந்தபோது டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் கான் அவர்களை அழைத்து சம்பவத்தை கூறுமாறு கேட்டார்கள். சம்பவம் கூறுப்பட்டபோது இரை சிக்கியுள்ளது என்று அவர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அழுது அமர்ந்து விட்டார்கள். அன்னாரின் கண்கள் பிரகாசமாயின. முகம் சிவந்தது.

அன்னார் கூறினார்கள்: நான் அவனது இரையா? நான் இரை இல்லை. நான் சிங்கமாவேன். சிங்கம் என்றால் இறைவனின் சிங்கமாவேன். அவர்கள் இறைவனின் சிங்கத்தின் மீது கையை வைத்துள்ளார்கள். பார்க்கட்டும் என்று

கூறினார்கள். இதைக் கூறும் போது அன்னாரின் குரல் எந்த அளவு உயர்ந்ததாக இருந்ததென்றால் அறைக்கு வெளியில் இருந்தவர்களும் அரண்டு போனார்கள்.

எவ்வாறிருப்பினும் லாலா சந்தூ லால் அவர்கள் நீதிமன்றத்தில் 10 ஏப்ரல் 1904 அன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளையிட்டார். எதிரிகள் அனைவரும் அன்னாரை இழிவுபடுத்தி விடலாம் என்று பகல் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். தனது அன்பிற்குரியவருக்காக அல்லாஹ்வின் தன்மானம் பீறிட்டு எழுந்தது.

நீதிபதி லாலா சர்தூ லால் மாற்றப்பட்டார். அதற்குப்பிறகு அந்த நாற்காலிக்கு வந்தவரும் காழ்ப்புணர்ச்சி கொண்டவர். அவரது பெயர் ஆத்மா ராம் ஆகும். வழக்கு விசாரணை தொடர்ந்து வந்தது. இவரும் தீய எண்ணம் கொண்டவராக இருந்தார். 1 செப்டம்பர் 1904 அன்று தீர்ப்பு கூற வேண்டியதிருந்தது. ஆனால் அன்று கூறாமல் அக்டோபர் 8 ஆம் தேதி தீர்ப்பு கூறினார்.

அன்று சனிக்கிழமையாக இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு 500 ரூபாய் அபராதமும், ஹக்கீம் ஃபஸல் தீன் சாஹிபுக்கு 200 ரூபாய் அபராதமும் விதித்து உடனடியாக அபராதத்தை செலுத்த முடியவில்லை என்றால் 6 மாதம் இருவருக்கும் சிறை தண்டனை என தீர்ப்பு கூறினார்.

உடனடியாக இவர்களால் இந்தத் தொகையை கட்ட முடியாது. அடுத்த நாள் ஞாயிறு என்பதால் நீதிமன்றம் கிடையாது. எப்படியாவது இரண்டு நாளாவது சிறையில் அடைத்து விடலாம் என்று கனவு கண்டார். ஆனால் மதிப்பிற்குரிய நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் முன்னெச்சரிக்கையாக அதற்கு முந்தைய தினமே 900 ரூபாயை குர்தாஸ்பூர் அனுப்பி இருந்தார்கள். இவ்வாறு உடனடியாக அபராதத் தொகை கட்டப்பட்டது. இருவரும் விடுதலையானார்கள்.

இந்த வழக்கில் முன்னர் இருந்த லாலா சர்தூ லாலாவும் வீழ்ச்சியை சந்தித்து இறுதியில் மன ரீதியாக பாதிக்கப்பட்டு மரணமடைந்தார். அடுத்து வந்த நீதிபதி ஆத்மா ராமுமின் இரண்டு மகன்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே 20,25 நாட்கள் இடைவெளியில் மரணமடைந்தார். இந்த துக்கத்தில் ஆத்மா ராமும் பாதி பைத்தியமாக ஆகிவிட்டார்.

5 நவம்பர் 1904 அன்று அமிர்தசரஸ் மாவட்ட நீதிபதி மிஸ்டர் A.T ஹரி நீதிமன்றத்தில் மவ்லவி கரம்தீன் சாஹிப் இந்த தீர்ப்பிற்குப் பிறகு மேல்முறையீடு செய்தார். அந்த விசாரணையில் அல்லாஹ்வின் அருளால் நீதிபதி இந்த மேல்முறையீட்டை ரத்து செய்ததோடு மட்டுமின்றி ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பின் அபராதத்தையும் ரத்து செய்து கட்டிய அபராதத்தை மீண்டும் திருப்பிக் கொடுக்க உத்தரவிட்டார். 24 ஜனவரி அன்று அரசாங்க கருவூலத்திலிருந்து அந்த தொகை திருப்பி செலுத்தப்பட்டது.

(அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 2 பக்கம் 277)

ஆக எதிரிகள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தொடுக்கப்பட்ட இந்த ஏழு வழக்குகளிலும் அன்னாரின் உண்மைத்துவம் சூரியனைப் போன்று பிரகாசமானது. எதிரிகள் இழிவைச் சந்தித்தனர்.

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வளர்ச்சி குறித்த முன்னறிவிப்பு

இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் செய்தி தெரிவித்திருக்கின்றான். அவன் எனக்கு மகத்துவத்தை வழங்குவான். மேலும் என்னைப் பற்றிய அன்பை உள்ளங்களில் உருவாக்குவான். எனது ஜமாஅத்தை முழு உலகிலும் பரப்புவான். மேலும் எல்லா பிரிவுகளின் மீதும் எனது பிரிவுக்கு வெற்றியை வழங்குவான்.

எனது பிரிவைச் சேர்ந்த மக்கள் அறிவிலும், ஞானத்திலும் எந்த அளவு மேன்மையடையவார்கள் என்றால் அவர்கள் தமது உண்மையின் ஒளியின் மூலமாக அனைவரின் வாயையும் அடைத்து விடுவார்கள்.

மேலும் ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்தும். மேலும் இந்த ஜமாஅத் வலுவாக வளரும்; மலரும். ஏதுவரை என்றால் பூமியில் பரவி விடும்.

பல தடைகள் உருவாகும். சோதனைகள் வரும். ஆனால் இறைவன் அனைத்தையும் இடையிலிருந்து அகற்றி விடுவான். மேலும் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான். மேலும் இறைவன் என்னை நோக்கி, நான் உமக்கு அருளுக்கு மேல் அருளை வழங்குவேன். ஏதுவரையென்றால் மன்னர்கள் உமது ஆடையிலிருந்து அருள்களைப் பெறுவார்கள். எனவே கேட்பவர்களே ! கேளுங்கள். இந்த விஷயங்களை நினைவில் வையுங்கள். மேலும் இந்த முன்னறிவிப்புகளை உங்கள் பெட்டிகளில் பாதுகாத்து வையுங்கள். இது இறைவனின் சொல்லாகும். ஒருநாள் அது நிறைவேறும்.

(தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 21. ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 409)

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன்

எந்த இறைவன் என்னை அனுப்பினானோ, எவன் மீது இட்டுக்கட்டிக் கூறுவது சாபத்திற்குரியவர்களின் வேலையோ அந்த இறைவன் மீது ஆணையாக ! அவனே என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக ஆக்கி அனுப்பி இருக்கின்றான். எனக்கு இறங்கும் தூய வஹி ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) ஆகியோர் மீது தனது கூற்றை இறக்கிய அந்த இறைவனின் கூற்றேயாகும் என நான் கஃபதுல்லாஹ்வில் நின்று ஆணையிட்டுக் கூற முடியும்.

(ஒரு தவறான எண்ணம் அகற்றப்படுகிறது பக்கம் 3 ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 210)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்களின் கூற்றிலிருந்து....

குழப்பங்கள் நிறைந்த இக்காலத்தில் திருக்குர்ஆனின் மேன்மைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்காகவும்.... இறைவன் என்னை இந்த 14–ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தன் புறமிருந்து நியமித்து உறுதிமிக்க மார்க்கமான இஸ்லாத்தைப் புதுப்பிப்பதற்காகவும், ஆதரவளிப்பதற்காகவும் அனுப்பியுள்ளான்.

(பரகாத்துத்துஆ, ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 34)

**ஷம்சுல் ஆலம்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எதிரிகளின் எச்சரிக்கையான முடிவு

மவ்லவி ஹிதாயத்துல்லாஹ் மன்டாஷ் – நஸாரத் நஷ்ரோ இஷாஅத், காதியான்.
தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

உலகம் தோன்றிய முதல் இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கத்தில் இறை சீர்திருத்தவாதி தோன்றும் போதெல்லாம் அவர்களை எதிர்ப்பதற்காக உலகம் ஒன்று கூடுவது நடைமுறையாக இருந்து வருகிறது. அல்லாஹ் அவர்களின் உதவி வெற்றிக்கான வழிவகைகளை உருவாக்கும் அதே நேரத்தில் எதிரிகளை படிப்பினைக்கான அடையாளமாக்கி தனது இருப்பு, வல்லமை, கம்பீரத்திற்கான சான்றை வழங்குகிறான். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

وَلَقَدِ اسْتُهْزِئَ بِرُسُلٍ مِّنْ قَبْلِكَ فَحَاقَ بِالَّذِيْنَ سَخِرُوْا مِنْهُمْ مَّا كَانُوْا بِهٖ
يَسْتَهْزِءُوْنَ۝ قُلْ سِيْرُوْا فِى الْاَرْضِ ثُمَّ انْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ۝

உமக்கு முன்னர் தோன்றிய தூதர்களும் ஏளனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் எதனை குறித்து ஏளனம் செய்தனரோ அந்த ஆக்கினையே அவர்களுள் ஏளனம் செய்தவர்களைச் சூழ்ந்து கொண்டது. நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து (தூதர்களை) பொய்யாக்கியோருக்கு என்ன முடிவு ஏற்பட்டதென்பதைப் பாருங்கள் என்று நீர் அவர்களிடம் கூறுவீராக. (6:11,12)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இறைவனால் நியமிக்கப்பட்டவர்களின் தொடரில் வந்தவர்களில் ஒரு மணியாக இருந்தார்கள். இவரும் முன்னோர்களைப் போன்றே இரு வகையான சிறப்புப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டவராக இருந்தார்கள். முதலாவதாக, அல்லாஹ்வுடன் இறை வணக்கத்திற்கான நெருங்கிய தொடர்பு இருந்தது. இரண்டாவது, மனித குலத்தின் மீது கருணையையும் அன்பையும் வெளிப்படுத்தினார்கள். மனித குலத்தின் மீது எந்த அளவிற்கு அனுதாபமும் நேசமும் இருந்தது!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மிகவும் பணிவுடனும் தாழ்மையுடனும் முஸ்லிம் ஆலிம்கள், கிறிஸ்தவ ஆலிம்கள், பண்டிதர்கள், இந்து தத்துவவாதிகள் மற்றும் ஆரியர்கள் முன்னிலையில் இந்த பிரசுரத்தின் மூலம் இதை அறிவிக்கிறேன். நல்லொழுக்கம், அடிப்படைக் கொள்கை, ஈமானிய பலவீனங்கள் மற்றும் தவறுகளின் சீர்திருத்தத்திற்காகவே உலகில் நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

எனது ஒவ்வொரு அடியும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எடுத்து வைத்த அடியைப் போன்றதே ஆகும். அதே பொருளில் தான் நானும் மஸீஹ் மவ்வூது (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) என அழைக்கப்படுகிறேன். ஏனென்றால் வழக்கத்திற்கு மாற்றமான அடையாளங்கள் மற்றும் தூய போதனைகளைக் கொண்டு உண்மையை உலகத்தில் எட்ட வைக்க வேண்டும் என எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

மார்க்கத்திற்காக வாளை ஏந்தவும் இறை அடியார்களின் இரத்தத்தை சிந்தச் செய்வதும் ஆகிய செயல்களுக்கு நான் எதிரானவன். நான் இறைவனால் நியமிக்கப்பட்டவன் ஆவேன். என்னால் இயன்றவரை முஸ்லிம்களிடம் காணப்படுகின்ற அனைத்து தவறுகளையும் அகற்றி நன்னடத்தை, பொறுமை, இணக்கம், நீதி மற்றும் நேர்மையாளர்களின் வழியில் அவர்களை அழைப்பதற்கே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். நான் அனைத்து முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும், ஆரியர்களுக்கும் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகிறேன். அதாவது இவ்வுலகில் எனக்கு யாரும் எதிரி இல்லை. ஒரு கருணையுள்ள தாய் தன் குழந்தையிடம் எந்த அளவிற்கு அன்போடு நடந்து கொள்வாரோ அதை விட அதிகமாக நான் மனித குலத்தை நேசிக்கிறேன். எந்த பொய்யான கொள்கையின் மூலம் உண்மை கொலை செய்யப்படுகிறதோ அதற்கு மட்டும்தான் விரோதி ஆவேன். மனிதனுடன் அனுதாபம் காட்டுவதே என்னுடைய கடமையாகும். மேலும் பொய், இணை வைத்தல், கொடுமை மற்றும் ஒவ்வொரு தீய செயல் அநீதி, தீய நடத்தை ஆகியவற்றின் மீது வெறுப்பு கொள்வதே என்னுடைய கொள்கையாகும்.

(அர்பயீன் எண்.1, ரூஹானி கஸாயீன் தொகுதி 17 பக்கம் 343)

மேலும் ஓர் எச்சரிப்பாளர் என்ற அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளிப்படையான வார்த்தைகளில் கூறுகின்றார்கள்:

நான் உம்முடன் இருக்கின்றேன். மேலும் எம்முடைய விண்ணின் படைகள் உம்முடன் இருக்கின்றது என்று கூறப்படாத இரவு என் மீது மிகக் குறைவாகவே கழிந்துள்ளது. எவர்கள் உள்ளத்தால் தூயவராக இருக்கிறாரோ அவர்கள் மரணத்திற்குப் பிறகு இறைவனை காண்பார்கள். நான் அவர்கள் மீது சத்தியமாக கூறுகிறேன். நான் இப்போதும் அவனை காண்கின்றேன். உலகம் என்னை அறிந்து கொள்ளாது. ஆனால் என்னை அனுப்பியவன் என்னை நன்கறிவான்.

இது என்னுடைய அழிவை விரும்பக் கூடியவர்களின் தவறும் துரதிர்ஷ்டமும் ஆகும். நான் உண்மையான எஜமானன் தன் கையால் நாட்டப்பட்ட மரமாவேன். எவர் என்னை வெட்ட நினைப்பாரோ அவருடைய விளைவு காரூன், யூதாஸ், காரியோத்து மற்றும் அபூஜஹில் போன்றவர்களின் முடிவைப் போன்றே அமையும்.

(ஸமீமா துஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானி கஸாயீன் தொகுதி 17 பக்கம் 41)

எத்தனை இறை தூதர்களும் இறைவனால் நியமிக்கப்பட்டவர்களும் தோன்றினார்களோ அவர்களை எதிர்ப்பவர்கள் மற்றும் ஏளனம் செய்பவர்களின் முடிவு படிப்பினைக்குரியதாக அமைந்துள்ளது. இது நினைவில் கொள்ள வேண்டிய விஷயம். ஆக, எந்த மார்க்கத்தின் வரலாற்றை ஆய்வு செய்தாலும் உங்களுக்கு இதற்கான உதாரணத்தைக் காண முடியும். இராமாயணத்தைப் பாருங்கள்.

ஹஸ்ரத் ராம் அவர்களுக்கு எதிராக இராவணன் இருந்தான். அரசாங்கமும், சக்தியும் இருந்தும் கூட சீரழிவையும் மரணத்தையும் தவிர அவன் வேறெதையும் பெறவில்லை. மேலும் அவன் படிப்பினைக்குரிய முடிவை எய்தினான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக ஃபிர்அவ்னும் அவனுடைய படையும் இருந்தது. ஆனால் இறை நியதி அவர்களையும் அழித்து விட்டது.

நாம் இந்த இறை நடைமுறைக்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வை பார்த்தோம் என்றால் அன்னாருக்கு கிடைக்கின்ற வெற்றிகளுடன் அன்னாரின் எதிரிகளின் வாழ்வில் எண்ணற்ற படிப்பினைக்குரிய அடையாளங்களை காண முடிகிறது. அன்னாரின் முதல் எதிரி

அஹ்லே ஹதீஸின் தலைவர் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே அறிந்தவராக இருந்தார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பராஹீனே அஹ்மதிய்யா வெளிப்பட்டபோது ஒரு சிறப்பான கண்ணோட்டத்தை எழுதினார்.

ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதித்தபோது அவர் உங்களுடைய இயக்கத்தை அழிப்பதற்கும் வேருடன் பிடுங்கி எறிவதற்கும் முயற்சி செய்தார். மேலும் நானே அவரை உயர்த்தினேன்; நானே அவரை வீழ்த்துவேன் என்று கூறினார். அதன் பிறகு அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா கொடுத்து அதில் ஒரு பெயர் தாங்கி ஆலிம் மவ்லவி நஸீர் ஹுஸைன் தஹ்லவியின் ஒப்புதல் கையொப்பத்தைப் பெற்று மேலும் இந்தியாவிலுள்ள இருநூறு ஆலிம்களின் சாட்சியையும் பெற்று அதை பத்திரிகையில் வெளியிட்டார். அதன் விளைவாக நாடு முழுவதும் இந்த இயக்கத்தின் ஸ்தாபகருக்கு எதிராக எதிர்ப்பின் தீ பரவியது. இது ஒரு சாதாரண ஃபத்வா இல்லை. இதன் மூலம் அன்னாரின் எதிர்ப்பு தீவிரமடைந்து விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்தக் கொடுமையாளர் எப்படிப்பட்ட கிளர்ச்சியை ஏற்படுத்தினால் என்றால் இஸ்லாமிய வரலாற்றில் முந்தைய ஆலிம்களின் வாழ்வில் இப்படி ஒரு சான்றை காண முடியாது. நஸீர் ஹுஸைன் என்ற ஒரு பைத்தியக்காரனின் குஃப்ர் கடிதத்தில் முத்திரை இடப்பட்டது. நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை காஃபிர் மற்றும் நரகவாசிகள் என அறிவிக்கப்பட்டது. மிக வலுவான சாட்சிகளின் முத்திரையைப் பதித்துள்ளார்கள். இவர்கள் கிறிஸ்தவர்களை விட நிராகரிப்பதில் மிகவும் மோசமானவர்களாகி விட்டனர்.

அனைத்து உறவுகளும் முறிந்து விட்டன. சகோதரர்கள் சகோதரிகளையும், தந்தை மகன்களையும், மகன்கள் தந்தைகளையும் விட்டு விட்டனர். எப்படிப்பட்ட கிளர்ச்சியின் புயல் வீசியது என்றால் நிலநடுக்கமே வந்து விட்டது. அதில் ஆயிரக்கணக்கான இறைவனின் நல்லடியார்கள், இஸ்லாமிய மார்க்கத்தின் ஆலிம், சான்றோர் மற்றும் இறையச்சமுடையவர்கள் இன்று வரை காஃபிர் என்றும் நிரந்தர நரகவாசிகள் என்றும் கருதப்படுகின்றனர்.

(இஸ்திஃப்தா உருது, ரூஹானி கஸாயீன் தொகுதி 12 பக்கம் 128)

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் எதிர்ப்பின் உச்சகட்டம் எதுவரை சென்றது என்றால் தனது பத்திரிகையான இஷாஅத்துஸ் ஸுன்னாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக காஃபிர், இட்டுக்கட்டிக் கூறுபவன், தஜ்ஜால் என்று எழுதாதே நாளே இல்லை. அதோடு மட்டும் அவர் நின்று விடவில்லை.

மாறாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நஷ்டம் விளைவிப்பதில் ஒரு சிறிய சந்தர்ப்பத்தையும் தவற விட்டதில்லை. சில காலத்திற்குப் பிறகு ஒரு கிறித்தவ பாதிரி டாக்டர் ஹென்றி மார்டின் கிளார்க் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது பொய்யான கொலை வழக்கைத் தொடுத்தபோது அன்னாருக்கு எதிராக சாட்சி சொல்வதற்கு நீதிமன்றம் வந்து எப்படிப்பட்ட சாட்சியத்தைக் கூறினார் என்றால் அது கிறித்தவத்தின் பொய்யான வாதத்திற்கு நிரூபணமாக அமைந்தது. ஆனால் நீதிமன்றம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அவருக்கு இருந்த சொந்த பகைமையின் காரணமாக அதை துச்சமாகக் கருதி குப்பைக் கூடையில் எறிந்து விட்டது.

அதேபோன்று ஒரு போலீஸ் துணை காவல் ஆய்வாளர் முஹம்மது பக்ஷ் சார்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கின் போதும் அவர் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் நோக்கத்தில் அங்கே வந்தார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய எதிரிகளுக்கு எதிராக எழுதிய சில கடுமையான வாசகங்கள் அடங்கிய எழுத்துக் கட்டுகளைச் சமர்ப்பித்து எந்த நபருடைய எழுத்து இவ்வாறு கடுமையாக இருக்குமோ அவர் அமைதிக்கு எந்த அளவுக்கு தீங்கை ஏற்படுத்தக் கூடியவராக இருக்க முடியும் என்ற தாக்கத்தை நீதிமன்றத்தில் ஏற்படுத்த முயற்சி செய்தார் – நவூதுபில்லாஹ்.

இறைவனுடைய வல்லமையினால் அவர் அங்கும் தோல்வி அடைந்தார். நீதிமன்றம் அவருடைய இந்தக் குற்றச்சாட்டின் மீது கவனம் செலுத்துவதற்கு முன்னதாகவே அவர் சுயமாகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக தன் பத்திரிகையான இஷாஅத்துஸ் ஸுன்னாவில் பகைமையில் நாகரீகம் மற்றும் பண்புகளிலிருந்து விலகி மிகவும் கீழ்த்தரமாக எழுதிய காரணத்தால் பிடிக்கப்பட்டார். ஆக, அவர் நீதிமன்றத்திற்கு பார்வையாளராக வந்தார். அவரை அழைத்து இனி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாகவும் நாகரீகத்திற்கு எதிராகவும் எந்த விஷயத்தையும் எழுத மாட்டேன் என்று எழுதி வாங்கப்பட்டது

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த இறை ஆளுமை தொடர்பாக மிகவும் தெளிவான வார்த்தைகளில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எந்த நபர் உரிமையின்றி உணர்ச்சியில் வந்து என்னை காஃபிர் என்று கூறினாரோ, என் தொடர்பாக இவர் தஜ்ஜால், காஃபிர், கஸ்ஸாப் என ஃபத்வா செய்தாரோ அவர் இறைகட்டளைக்கு சிறிதளவும் அச்சம் கொள்ளவில்லை. அவர் கிப்லாவை சார்ந்தவர்கள் மற்றும் கலிமா கூறுபவர்களை ஏன் காஃபிராக ஆக்குகிறார் என்பதில் அச்சம் கொள்ளவில்லை. மேலும் அல்லாஹ்வின் வேதத்தைப் பின்பற்றி இஸ்லாத்தின் போதனையை வெளிப்படுத்தக் கூடிய ஆயிரக்கணக்கான இறை அடியார்களை ஏன் இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேற்றினார்.

ஆனால் மாவட்ட நீதிபதியின் ஒரு அச்சுறுத்தலினால் இனி ஒருபோதும் நான் அவரை காஃபிர், தஜ்ஜால் மற்றும் கஸ்ஸாப் என கூறமாட்டேன் என்று கூறினார். சுயமாக ஃபத்வா பிறப்பித்தார். அவனே அரசாங்கத்திற்குப் பயந்து அதை நீக்கி விட்டார்.

இந்த இறை ஆளுமையின் விளைவாக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கு நேர்ந்த அவமதிப்பு மற்றும் இழிவை அவருக்கான படிப்பினையாக கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஓர் அறிவுள்ள மனிதருக்கு இந்த இழிவு குறைவானதல்ல. அதாவது, அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் நாகரீகமற்ற வெட்கமற்ற மற்றும் இழிவான வழக்கங்களைக் கொண்ட காகிதங்களை சமர்ப்பிப்பது மற்றும் வாசிப்பது சிறிய இழிவல்ல. மேலும் ஒரு பொதுவான அவையில் அனைவரின் மீதும் இவ்விஷயம் வெளிப்படுதல், ஆயிரக்கணக்கான மக்களிடம் இவ்வாறு பிரசித்தி பெறுதல் அதாவது மவ்லவி என கூறிக் கொள்ளும் இவர்களின் நாகரீகம் மற்றும் நல்லொழுக்கத்தின் நிலை இவ்வாறாக உள்ளதே!

தற்போது நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இந்த அளவிற்கு ஒரு மனிதனுடைய தீய செயல்கள், தீய பழக்க வழக்கங்கள் மற்றும் தீய பண்புகள் அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் மீது வெளிப்படுதல்

என்பது கண்ணியத்திற்குரியதா? அல்லது இழிவிற்குரியதா? இப்படிப்பட்ட வெறுக்கத்தக்க மற்றும் தூய்மையற்ற நடைமுறையின் காரணமாக நீதிமன்றம் தரப்பில் விசாரனை நடத்துவது மிக உயர்ந்த அந்தஸ்தை பெற்றுத் தரக்கூடியதா? அல்லது மவ்லவியின் கண்ணியத்தின் மீது இழிவான களங்கத்தை விளைவிக்கக் கூடியதா?

(மஜ்மூஆ இஷ்திஹார் தொகுதி 3 பக்கம் 202–205)

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி பட்டாலாவில் ஒவ்வோர் இரயில் வண்டி வரும்போதும் இரயில் நிலைத்தில் வந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திப்பதற்காக காதியான் செல்கின்றவர்களை அங்கு போகாதீர்கள். அங்கு மார்க்கமின்மை மற்றும் பொய் தவிர ஒன்றுமில்லை (நவூதுபில்லாஹ்) எனக் கூறி மக்களைத் தூண்டி தடுக்க முயற்சி செய்தார். ஆனால் அவ்வாறு தடுத்தும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் நிலைநாட்டப்பட்ட இயக்கம் வழக்கம்போல் முன்னேறிக் கொண்டே செல்கிறது.

மேலும் அன்னாரின் பைஅத்தில் வரக் கூடியவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதற்கு நேர் மாற்றமாக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் முடிவு என்னவாயிற்று? என்பதை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த தீர்ப்பு பிறப்பித்து சிறிது காலமே கடந்திருந்தது. அல்லாஹ் அந்த மவ்லவியின் கண்ணியத்தை மக்களின் உள்ளத்திலிருந்து அழித்து விட்டான்.

இந்த தீர்ப்பு வெளியிடுவதற்கு முன் அவருக்கு எந்த அளவுக்கு கண்ணியம் இருந்தது என்றால் லாஹூர், தாருல் கிலாஃபா, பஞ்சாப் போன்ற நகரத்தில் அதுவும் கருத்து சுதந்திரம் பெற்ற மக்களின் நகரமாகக் கருதப்படும் நகரத்தின் கடைவீதிகளில் அவர் கடந்து சென்றால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மக்கள் அவருக்கு கண்ணியமளித்தவாறு எழுந்து நின்றனர். அவருக்கு மரியாதை செலுத்தினர். அவர் எங்கு சென்றாலும் மக்கள் அவரை கண்களில் வைத்தனர். அதிபர் ஜெனரல் போன்ற உயர் பதவி வகுத்த அரசாங்க அதிகாரிகள் அவரை கண்ணியத்துடன் சந்தித்தனர்.

ஆனால் இந்த தீர்ப்பு வெளியிட்ட பிறகு வெளிப்படையான எந்தவொரு காரணியும் இல்லாமல் அவரின் கண்ணியம் குறைய ஆரம்பித்து விட்டது. எதுவரையென்றால் எந்த அமைப்பின் தலைவராக அவர் கூறப்பட்டாரோ அந்த அமைப்பினரே அவரை விட்டு விட்டனர். நானே சுயமாக இதை பார்த்துள்ளேன். இரயில் நிலையத்தில் அவர் தனிமையில் தன்னுடைய அதிகமான சுமையைக் கொண்ட பொருள்களை தனியாக முதுகுகளிலும் கைகளிலும் சுமந்தவாறு நாலாபுறமும் தள்ளாடிக் கொண்டும் செல்கின்றார். யாரும் அவரிடம் எதுவும் கேட்கவில்லை.

மக்களிடம் அவநம்பிக்கை எந்த அளவுக்கு அதிகரித்து விட்டது என்றால் கடைக்காரர்கள் அவருக்கு பொருள்கள் கொடுப்பதையும் நிறுத்தி விட்டனர். வேறொருவர் மூலமாக பொருள்களை வாங்கலாம் என்றால் வீட்டில் உள்ளவர்கள் உறவை முறித்து விட்டனர். சில ஆண்கள் மனைவிகளைச் சந்திப்பதையும் நிறுத்தி விட்டனர். ஒருவர் இஸ்லாத்தை விட்டே வெளியேறி விட்டார். ஆக, எல்லா விதமான கௌரவத்தையும் கையிலிருந்து நழுவ விட்டு படிப்பினைக்கான முன்னோடியாகத் திகழ்ந்து இவ்வுலகிலிருந்து விடை பெற்றார். மேலும் தன் வாழ்நாளின் இறுதி நாட்களில் ஒவ்வொரு கனமும் ஏக்கத்துடன் கழித்தார்.

நீர் அவர்களிடம் கூறுவீராக. நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து (தூதர்களை) பொய்யாகியோருக்கு என்ன முடிவு ஏற்பட்டது என்பதை பாருங்கள். திருக்குர்ஆனுடைய (6:12) வசனத்தின் உண்மைத்துவத்திற்கு சான்றாகி விட்டார். (தஃவத்துல் அமீர், பக்கம் 233–234)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இப்படிப்பட்ட துரதிர்ஷ்டவாதி தொடர்பாக இந்த ஃபார்ஸி கவிதையில் கூறுகின்றார்கள்: துரதிர்ஷ்ட மனிதனே! என்னை காஃபிர் என பிரகடனப்படுத்துவதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டவனே! உன்னுடைய வீடு பாழடைந்து விட்டது. ஆனால் நீயோ பிறரை காஃபிர் ஆக்குவதில் துடிப்பாக உள்ளாய்.

இரண்டாவது உதாரணம், பண்டித லேக்ராமின் படிப்பினைக்குரிய அழிவாகும். பண்டித லேக்ராம் ஒரு கெட்ட சிந்தனை உடைய அறிவிலி மற்றும் அறிவின் குருடன் ஆவான். இஸ்லாத்தை ஏளனம் செய்வதிலும் எள்ளி நகையாடுவதிலும் எல்லையைக் கடந்து விட்டான். அவன் உண்மையில் இஸ்லாம் (நவூதுபில்லாஹ் – அல்லாஹ் காப்பானாக) ஒரு பொய்யான மார்க்கம் என்று உள்ளத்தால் உறுதியாக எண்ணியிருந்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப் பேசியும் வந்தான். மேலும் திருக்குர்ஆனை கேலி கிண்டல் செய்து வந்தான். இந்த நபர் காதியானுக்கு வந்துள்ளான். காதியானிலுள்ள தன் மார்க்கத்தைச் சார்ந்த ஆரியர்களுடன் தங்கியிருந்தான். காதியானில் தங்கியிருந்த நாட்களில் அவன் தனது தீய சிந்தனையை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் கேலி செய்வதும், தீய வார்த்தைகளால் ஏசவும் செய்தான். வாருங்கள்! என்னுடன் விவாதம் செய்யுங்கள் எனவும், எனக்கு ஏன் எந்தவோர் அடையாளத்தையும் காட்டவில்லை எனவும் கூறினான். எத்தனை நாட்கள் காதியானில் இருந்தானோ அந்த ஒவ்வொரு நாளும் இதே நடைமுறையைத்தான் கையாண்டான்.

காதியானிலிருந்து திரும்பிச் சென்றதும் லேக்ராம் தனது விஷமத்தனத்தை அதிகப்படுத்தி விட்டான். அவன் தனது புத்தகங்களில் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் இன்னும் கூறுவதென்றால், அனைத்து நபிமார்களின் தூய வாழ்க்கையின் மீதும் தாக்குதல் தொடுத்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இறை அறிவிப்புகளையும் கேலி செய்தான். அவனுடைய புத்தகமான கப்தே அஹ்மதிய்யா மற்றும் தக்ஸீபே பராஹீனே அஹ்மதிய்யா இதற்கான சான்றாகும். இந்த புத்தகங்களில் கண்ணியக் குறைவாகவும் அவனுக்கு தோன்றியதை மிகவும் கீழ்த்தரமாகவும் எழுதியதன் மூலம் சுயமாகவே அவன் இறை தண்டனை இறங்குவதற்கான வழியை ஏற்படுத்திக் கொண்டான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 1887 ஆம் ஆண்டு ஸுர்மே சஷ்மா ஆரியா என்ற தன்னுடைய புத்தகத்தை வெளியிட்டபோது அதில் ஆரிய சமயத்தைக் குறித்து திருக்குர்ஆனுக்கும் வேதத்திற்கும் இடையிலுள்ள தகுதி, அந்தஸ்தை குறித்து போட்டி நடத்துவது தொடர்பாக முபாஹிலா அறிக்கை விடுத்தார்கள். அப்போது லேக்ராம் உடனே முன் வந்து முபாஹிலா செய்து இறை பிடியின் கீழ் வந்து விட்டான்.

அவன் இவ்வாறு எழுதினான்: பரமேசுவரனே! இரு பிரிவினர்களில் உண்மையாளர் யார் என்பதை தீர்மானிப்பாயாக. ஏனென்றால் பொய்யன் உண்மையாளர் போன்று உன்னுடைய முன்னிலையில் கண்ணியம் பெற மாட்டான்.

(கப்தே அஹ்மதிய்யா பக்கம் 344–347, ஹகீகத்துல் வஹி பக்கம் 322)

லேக்ராம் அடையாளத்தை வேண்டியவாறு மிகவும் ஆணவத்துடன் இவ்வாறு எழுதினான்: விண்ணின்

அடையாளத்தை காட்டுங்கள். விவாதம் செய்ய விரும்பவில்லை என்றால் திட்டம் தீட்டுபவர்களில் சிறந்தவனான அரியணையின் இறைவனிடம் என் தொடர்பாக விண்ணின் அடையாளத்தைக் கேளுங்கள். இதன் மூலம் தீர்ப்பு வெளியாகி விடும்.

(இஸ்திஃப்தா பக்கம் 7)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 20 பிப்ரவரி 1886 அன்று வெளியிட்ட பிரசுரத்தில் லேக்ராம் தொடர்பான முன்னறிவிப்பில் அவனுக்கு வருத்தத்தை தரக்கூடிய ஏதாவது செய்தி இருந்தால் அதை வெளியிடலாமா? அல்லது வேண்டாமா? எனக் கேட்டதற்கு லேக்ராம் அதற்கு பதிலளித்தவாறு துணிவுடன் இவ்வாறு எழுதினான்: நான் உங்களுடைய முன்னறிவிப்பை வீணான ஒன்றாகக் கருதுகிறேன். என் உரிமை தொடர்பாக எதை வேண்டுமானாலும் வெளிடுங்கள். நான் அனுமதி வழங்குகிறேன். மேலும் நான் எதற்காகவும் அஞ்ச மாட்டேன்.

லேக்ராம் கால வரையறையைக் கொண்ட முன்னறிவிப்பை அறிவுக்குமாறு முரண்டு பிடித்துக் கொண்டிருந்தான். ஆதலால் 20 பிப்ரவரி 1893 அன்று மிகுந்த சிந்தனை, துஆ மற்றும் மன்றாடுதலுக்குப் பிறகு அறிய வந்தது என்னவென்றால் இன்றைய தேதியிலிருந்து அதாவது 20 பிப்ரவரி 1893 லிருந்து ஆறு ஆண்டுகளுக்குள் லேக்ராம் மீது கடுமையான தண்டனை இறக்கப்படும்; அதன் விளைவு மரணமாகும். அது இறக்கப்படும்.

மேலும் அத்துடன் இந்த அரபி இல்ஹாம் வந்தது. அதன் பொருள், இந்த கன்றுக்குட்டி உயிரற்ற உடலாக இருக்கிறது. அதிலிருந்து பொருளற்ற சப்தம் மட்டுமே வருகிறது. ஆக, அதற்கு துக்கத்திற்கான வடுவும் தண்டனையும் உள்ளது. அதே தேதியில் 20 பிப்ரவரி 1893 –ல் ஒரு பிரசுரத்தின் மூலம் லேக்ராம் தொடர்பான இந்த முன்னறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த பிரசுரத்தின் 2 மற்றும் 3 ஆம் பக்கத்தில் உள்ள மேற்கோள் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: தற்போது நான் இந்த முன்னறிவிப்பை அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் அனைத்து முஸ்லிம்கள், ஆரியர்கள், கிறித்தவர்கள் மற்றும் பிற பிரிவினர்களின் மீது இதை தெளிவுபடுத்துகிறேன். அதாவது இந்த நபர் (லேக்ராம்) மீது இன்றைய தேதியிலிருந்து ஆறு ஆண்டு காலத்திற்குள் ஒரு சாதாரண இன்னல்களை தவிர்த்து அற்புதமான முறையில் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட தனக்குள் இறைவனின் பேரச்சத்தை ஏற்படுத்தக்கூடிய கடுந்தண்டனை இறங்கவில்லையென்றால் நான் இறைவன் புறமிருந்து இல்லை என்றும் அவனுடைய ஆன்மாவுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் புரிந்து கொள்ளுங்கள்.

அன்னார் இதையும் எழுதியிருந்தார்கள். தற்போது ஆரியர்கள் அனைவரும் ஒன்று கூடி துஆ (பிரார்த்தனை) செய்ய வேண்டும். அதாவது இந்த கடுந்தண்டனை அவர்களின் இந்த பரிந்துரையின் மூலம் விலகி விட வேண்டும்.

(மஜ்மூது இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 372–373)

ஒரு சில ஆரிய பத்திரிகையாளர் தனது தீய இயல்பின் காரணமாக இந்த முன்னறிவிப்பின் வலிமையை பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் கருத்தை தெரிவிக்க ஆரம்பித்தபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் கம்பீரத்துடன் இவ்வாறு கூறினார்கள்: நான் மிகவும் நன்கு அறிவேன். இது காலத்திற்கு முன்னதாகவே நடந்த ஒன்றாகும். நான் சுயமாகவே அதை கூறினேன்.

மீண்டும் நான் கூறுகிறேன். எவ்வாறு ஆட்சேபனை செய்கிறவர்கள் எண்ணுகிறார்களோ அதாவது முன்னறிவிப்பின் விளைவாக இறுதியில் என்ன முடிவு வந்தது என்றால் சாதாரண காய்ச்சலோ, வேதனைகளோ வாந்தி பேதி போன்ற நோய் வந்து அதிலிருந்து மீண்டு நற்சுகத்திற்கு திரும்பி விட்டால் அவர்கள் எண்ணத்தின்படி முன்னறிவிப்பு இருக்காது. மேலும் நிச்சயமாக சந்தேகத்திற்கு இடமின்றி அவர்கள் தந்திரக்காரர்களும் வஞ்சகம் செய்பவர்களுமாவர். ஏனென்றால் அப்படிப்பட்ட நோய்களிலிருந்து யாரும் விடுபடுவதில்லை. நாம் அனைவரும் எப்போதாவது நோயுற்று விடுகிறோம்.

நான் கூறியதற்கிணங்க நடக்கவில்லை என்றால் நான் குற்றவாளி ஆவேன் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால் முன்னறிவிப்பின் வெளிப்பாடு எவ்வாறு வெளிப்பட்டது என்றால் இறை ஆக்கினையின் அடையாளம் எவ்வாறு மிகத் தெளிவான அடையாளமாக வெளிப்பட்டது என்றால் இறைவனின் புறமிருந்து வந்ததாக நான் அறிந்து கொள்வேன்.

(பரக்காத்துத் துஆ ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 2)

தற்போது உலகம் இந்த இயக்கத்தின் தோற்றுனருடைய முன்னறிவிப்பு எப்போது எவ்வாறு நடைபெறும் என காத்துக் கொண்டிருக்கின்ற வேளையில் இங்கு பண்டித லேக்ராம் தன் மீது இறங்கக் கூடிய ஆக்கினை தொடர்பாக எந்தவித கவலையுமில்லாமல் கேலி செய்வதிலும் தீய வார்த்தைகளை பேசுவதிலும் அதிகரித்துக் கொண்டே சென்றான்.

மறுபக்கம் இறைவனின் வானவர்கள், தூதருக்கு அவப்பெயரை ஏற்படுத்தக் கூடியவனையும், அவனின் தீய நாவையும் கேலி கிண்டல் செய்யக் கூடிய தன்மையினால் அவனுக்கு தண்டனை கொடுப்பதற்காக அவனை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். முன்னறிவிப்பின் ஐந்தாவது ஆண்டின் முதல் மாதம் அதாவது மார்ச் 1897 ஆம் ஆண்டு தொடங்கியதுன் (இறைவனின்) நீதி மற்றும் விதியின் கூர்மையான வாள் அவனின் பணியை முழுமை அடையச் செய்தது.

இந்த சம்பவத்தின் விவரம் இவ்வாறாக இருந்தது. லேக்ராம் அந்நாளில் லாஹூரின் விச்சுவாலி என்ற முஹல்லாவில் உள்ள ஒரு வீதியில் ஆரியர் வீட்டில் தங்கியிருந்தான். 6 மார்ச் 1897 சனிக்கிழமை அன்று இவ்வாறு நடந்ததாக கூறப்படுகிறது. பண்டித லேக்ராம் மேல் தளத்தில் அரை நிர்வாணத்தில் அமர்ந்து கொண்டு எழுதிக் கொண்டிருந்தான். எழுதி விட்டு களைப்பை போக்குவதற்காக சற்று பின்னால் சாய்ந்தான். அப்போது அவனுடைய வயிறு முன்னே வந்தது.

அங்கு ஓர் இளைஞன் சிறிது காலத்திற்கு முன்பு அவனிடம் தூய்மை அடைவதற்காக அதாவது இந்து ஆவதற்காக வந்தான். அவன் அந்த மாலை நேரத்தில் கம்பளி போர்த்தியவாறு அங்கு அமர்ந்திருந்தான். அவன் ஒரு கை நீளமுள்ள வாளை லேக்ராம் வயிற்றில் குத்தினான். அதனால் அவனுடைய குடல் வயிற்றிலிருந்தே வெளியே வந்து விட்டது. லேக்ராமின் வாயிலிருந்து காளை மாட்டைப் போன்று மிகவும் சத்தமான ஓசை வந்தது. அதை கேட்டு அவனுடைய மனைவியும், தாயாரும் அந்த அறைக்கு வந்தனர். ஆனால் அவன் ஓடி விட்டான்.

லேக்ராமை போலீஸ் லாஹூரிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு ஆங்கில அறுவை சிகிச்சையாளர் டாக்டர் பேரீ என்பவர் அவனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக முடிந்த அளவு முயற்சி செய்தார். ஆனால் இந்த நபியின் எதிரி முழு இரவும் மறுநாள் சில பகுதியையும் துடிதுடித்து கடந்த பிறகே இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றான். இவ்வாறாக தூதரின் முன்னறிவிப்பு இஸ்லாம் மற்றும் அவனுடைய திருத்தூதர் (ஸல்) அவர்களின் உண்மைக்கு சான்றாக ஆயிரம் சூரியன் ஒளி வீசியவாறு மகத்துவமான கம்பீரத்துடன் முழுமை பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவம் அன்னார்

அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டார் என்பதற்கு ஒரு வலுவான சான்றாக அமைந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லேக்ராமின் மரணத்தின் மீது மனிதநேயத்தின் அடிப்படையில் அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள். அங்கு மற்றொரு கோணத்தில் இறைவனுக்கு அதற்காக நன்றியும் செலுத்தினார்கள். இது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:

ஓர் ஆழ்ந்த துன்பம் மற்றும் பேரழிவில் சூழ்ந்து எதிர்பாராத வகையில் குறிப்பிட்ட இளமைப் பருவத்தில் அவன் மரணமடைந்து மனித குலத்தின் மீது கொண்ட கருணையின் அடிப்படையில் நமக்கு வருத்தமாக இருக்கின்றது. ஆனால் மற்றொரு கோணத்தில் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அவனுடைய வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் இன்று நிறைவேறியுள்ளன.

நம் உள்ளத்தை அறியக்கூடிய அந்த இறைவன் மீது ஆணையாக! அவன் அபாயகரமான மரணத்தின் பிடியில் சிக்கியோ அல்லது நம்முடைய கருணையினால் அவன் தப்பி இருந்தாலோ நாம் எந்த வேறுபாட்டையும் செய்திருக்க மாட்டோம். இது இறைவன் புறமிருந்து வெளிப்பட்ட ஒரு மகத்தான அடையாளமாகும். ஏனென்றால் அவன் (இறைவன்) தன்னுடைய அடியானை இழிவுபடுத்துபவரை எச்சரிக்கை செய்ய வேண்டும் என விரும்பினான்.

(இஷ்திஹாராத் தொகுதி 2 பக்கம் 336, 337)

மூன்றாவது உதாரணம், மாஜிஸ்ட்ரேட் பாலா சந்த்லாலின் முடிவு. மவ்லவி கரம்தீன் சாஹிப் என்பவரின் முதல் வழக்கில் அவன் தோல்வி அடைந்த பிறகு மீண்டும் 26 ஜனவரி 1903 ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் ஹக்கீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப் ஆகிய இருவருக்கும் எதிராக குற்றவியல் வழக்கை ஜெஹ்லத்தைச் சார்ந்த சந்த் சாஹிப் மாவட்ட நீதிபதியின் முன்னிலையில் வழக்கை தொடுத்தார். மவ்லவி சாஹிப் இந்த வழக்கை தொடர்வதற்கான அடிப்படை காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய புத்தகமான மாவாஹிபுர் ரஹ்மானில் கஸ்ஸாப், முஹீன் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி அவரை அவமதித்துள்ளார்.

ஏனென்றால் அவருடைய கூற்றின் அடிப்படையில் இப்படிப்பட்ட வார்த்தைகள் வலீத் பின் மகீரா போன்ற மிகவும் மோசமான காஃபிருக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே மிர்ஸா சாஹிப் அவர்கள் மவ்லவி கரம்தீன் சாஹிப் தொடர்பாக இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி அவரை காஃபிருடன் ஒப்புமைப் படுத்தியுள்ளார். மவ்லவி சாஹிபால் தொடரப்பட்ட வழக்கு இரண்டு ஆண்டுகளாக பல நீதிமன்றங்களில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தது. அதில் பல முக்கிய பிரமுகர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கண்ணியத்திற்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி செய்தனர்.

ஆனால் வேதனைக்குரிய முடிவையே அவர்கள் அடைந்தனர். இறுதியில் மவ்லவி கரம்தீன் சாஹிப் நீதிமன்றத்திலிருந்து கஸ்ஸாப் (பொய்யன்), லயீம் (இழிவானவன்) என்ற பட்டத்துடன் மட்டும் வெளியேற்றவில்லை. மாறாக, அன்னாருடைய முடிவும் மிகப்பெரிய வேதனைக்குரிய மரணமாக அமைந்தது.

இந்த வழக்கு 29 ஜூன் 1903 ஆம் ஆண்டில் குர்தாஸ்பூரில் உள்ள ஒரு முதல் தர ஆரிய நீதிபதி லாலா சந்த்லால் பி.ஏ. அவர்களின் நீதிமன்றத்தில் வந்தது. குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சார்ந்த இந்த லாலா சந்த்லால் என்ற நீதிபதியின் நடைமுறை ஆரம்பத்திலிருந்தே அளவிற்கு அதிகமான எதிர்ப்பையும் மதவெறியையும் தூண்டக் கூடியதாக இருந்தது. குர்தாஸ்பூரில் உள்ள ஆரியர்கள் லாலா சந்த்லாலுடன் இணைந்து ஓர் அறுவறுக்கத்தக்க திட்டத்தை தீட்டினர்.

அவர்கள் கூறினார்கள்: இந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நம்முடைய கடும் எதிரியும் நம்முடைய தலைவர் லேக்ராமின் கொலையாளியும் ஆவார். தற்போது தங்கள் கையில் அவர் வேட்டைப் பொருளாக உள்ளார். அனைத்து சமுதாய மக்களின் பார்வையும் உங்கள் மீதுதான் உள்ளது. ஆகவே நீங்கள் வேட்டையை செல்ல விட்டீர்கள் என்றால் நீங்கள் சமுதாயத்தின் எதிரி ஆகி விடுவீர்கள்.

நீதிபதி அவர்களுக்கு நான் இப்போது வாக்குறுதி அளிக்கிறேன். என்ன நேர்ந்தாலும் சரியே. நான் முதல் தவணையிலேயே நீதிமன்ற நடவடிக்கையை தொடங்கி விடுவேன் என பதில் கூறினார். நீதிமன்ற நடவடிக்கை என்றால் வழக்கின் ஆரம்பத்திலோ அல்லது வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதோ குற்றவாளியின் ஜாமீனை ஏற்றுக் கொள்ளாமல் அவரை கைது செய்து சிறையில் அடைக்கக்கூடிய அதிகாரம் நீதிபதிக்கு உண்டு என்பதாகும்.

இந்த தூய்மையற்ற திட்டத்தைப் பற்றிய செய்தி 14 மார்ச் 1904–ல் நடைபெறவிருந்த தவணைக்காக குர்தாஸ்பூர் வந்திருந்த ஹஸ்ரத் மவ்லவி சர்வர் ஷாஹ் சாஹிப் (ரலி) அவர்களுக்குக் கிடைத்தது. அன்னார் வரை இச்செய்தி எட்டியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த குறிப்பிட்ட தேதிக்கு ஒரு நாள் முன்னதாகத்தான் குர்தாஸ்பூர் வந்து சேர்ந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தவுடன் சய்யிது சர்வர் ஷாஹ் (ரலி) அவர்கள் தாம் கேட்ட அனைத்து விஷயங்களையும் அன்னாரிடம் கூறுவது அவசியம் எனக் கருதி கூறத் தொடங்கினார்கள். அனைத்து நிகழ்வையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வேட்டை என்ற சொல்லைக் கேட்ட ஒரு நொடியில் எழுந்து அமர்ந்து விட்டார்கள்.

மேலும் அன்னாரின் கண்கள் மின்னத் தொடங்கின. முகம் சிவந்து விட்ட நிலையில் அன்னார், நான் அவனுடைய வேட்டையா? நான் வேட்டைக் குரியவன் அல்லன். நான் சிங்கம் ஆவேன். அதுவும் இறைவனின் சிங்கம். அவன் இறைவனின் சிங்கத்தின் மீது எவ்வாறு கை வைக்க முடியும்? அவ்வாறு செய்துதான் பார்க்கட்டும் என்று கூறும்போது அந்நேரம், எப்போதும் தாழ்ந்திருக்கக் கூடிய கண்களும் பாதி கண்கள் மூடிய நிலையிலும் இருந்த அன்னாரின் கண்கள் உண்மையாகவே சிங்கத்தின் கண்களைப் போன்று நன்றாக திறந்த தீக்கதிர் போன்று ஒளி வீசியது. முகம் எந்த அளவுக்கு சிவப்பாக இருந்தது என்றால் அதை பார்க்க முடியவில்லை.

இறைவனின் முன்னிலையில் நான் உன்னுடைய மார்க்கத்திற்காக கையிலும் காலிலும் விலங்கை அணிந்து கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன் எனக் கூறியவாறு சமர்ப்பித்தேன். ஆனால் இறைவனோ இல்லை. மாறாக, நான் உம்மை இழிவடைவதிலிருந்து காப்பாற்றுவேன் எனக் கூறினான்.

இந்த எதிரிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக சதியையும், திட்டத்தையும் தீட்டுகின்றனர். அங்கு அல்லாஹ் தனது தூதரை இழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக இவ்வாறு திட்டம் தீட்டினான். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த சபையிலிருந்து வெளியேறியதும் அன்னாருக்கு அவ்வப்போது ரத்தத்துடன் கூடிய வாந்தி வந்தது.

உடனடியாக அங்கிருந்த உள்ளூர் ஆங்கில மருத்துவரான சிவில் சர்ஜியன் எஸ்.பி. மோர் என்பவர் அழைத்து வரப்பட்டார். அவர் ஆய்வு செய்த பிறகு இவ்வாறு கூறினார். தற்போது இவருக்கு ஒய்வு தேவைப்படுகிறது. மேலும் ஒரு மாதத்திற்கு இவர் நீதிமன்றம் வரக்கூடிய உடல் தகுதியில் இல்லை எனக் கருதுகிறேன் என்று சான்றிதழை வழங்கி விட்டார். அதன் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகமலேயே காதியான் சென்று விட்டார்கள்.

மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜராகக் கூடிய நேரம் வந்ததும் நீதிபதியின் முன் மருத்துவ சான்றிதழ் கொடுக்கப்பட்டதும் அவர் மிகவும் ஆவேசமடைந்து மருத்துவரை சாட்சிக்காக அழைத்தார். ஆனால் அந்த ஆங்கிலேயே மருத்துவர் என்னுடைய சான்றிதழ் முற்றிலும் சரியானதாகும். மேலும் இந்த சான்றிதழ் அனைத்து உயர்நீதி மன்றங்களிலும் செல்லுபடியகும் எனக் கூறினார்.

அந்த நீதிபதி முணுமுணுத்துக் கொண்டேயிருந்தார். எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் நீதிமன்றப் பணியை ஒத்தி வைக்க வேண்டிய சூழலிற்கு தள்ளப்பட்டார். ஆனால் அடுத்து ஆஜராகக்கூடிய அந்த நாளுக்கு முன்னதாகவே சிவில் சர்ஜியன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் காண்பதற்காக காதியான் வந்தார்கள். அன்னாரை ஆய்வு செய்த பிறகு மேலும் ஆறு வார காலம் ஒய்வு எடுக்குமாறு அறிவுரை கூறினார். மேலும் இந்த ஆறு வார காலம் அன்னாருக்கு பயணம் மேற்கொள்வதற்கான உடல் தகுதியில் இல்லை என்ற சான்றிதழையும் வழங்கி விட்டார்.

இங்கு இறைவன் தன்னுடைய நேசர் மற்றும் தூதரை அனைத்து இழிவிலிருந்தும் பாதுகாக்கப்படுவதற்கான நற்செய்தியை வழங்கி விட்டான். அவனும் தன்னுடைய மேன்மையான கரங்களை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டான். மேற்கூறப்பட்ட இறை திட்டத்தை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கு சான்றாக வெளிப்படுத்தியதோடு லாலா சந்த்வலாலையும் இறை கோபத்தின் கீழ் வரக்கூடிய காரணியாக அமைந்து விட்டது. இந்த அனைத்து இறை திட்டங்களையும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முன்னதாகவே அறிவித்து விட்டான்.

அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஜமாஅத்தைச் சாராத சில மதிப்பிற்குரிய அன்பர்கள் மனித நேயம் கருணையின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் காண வந்தார்கள். அப்போது அவர்கள் லாலா சந்த்வலால் உங்களை கைது செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார் போன்று தெரிகிறது எனக் கூறினார்கள். சிறிய ஜமுக்காளம் ஒன்றில் படுத்திருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுந்து அமர்ந்து விட்டு இவ்வாறு கூறினார்கள்: நான் லாலா சந்த்வலாலை நீதிமன்ற நாற்காலியில் பார்க்கவில்லை. (அல் ஹகம் 14 ஜூலை 1904)

இந்த நிகழ்வு இவ்வாறு நடந்தது. குர்தாஸ்பூர் சிறையில் ஒரு குற்றவாளிக்கு தூக்கு தண்டனை நிறைவேற்ற வேண்டியதிருந்தது. அதற்காக லாலா சந்த்வலால் அங்கு பணிக்கப்பட்டார். அவர் துணை ஆணையாளருக்கு நான் மிகவும் பலவீனமான இதயம் கொண்டவன். என்னால் குற்றவாளி தூக்கில் தொங்குவதைக் காண முடியாது. ஆகவே என்னை மன்னித்து விடுங்கள் எனக் கடிதம் எழுதினார். துணை ஆணையாளர் மற்றொரு நீதிபதியை நியமித்து அத்துடன் சந்த்லால் குற்றவியல் வழக்கை கையாள்வதற்கு தகுதியானவர் இல்லை என அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பினார். அந்த அறிக்கையின் அடிப்படையில் ராயே சந்த்லால் கூடுதல் துணை ஆணையாளர் என்ற பதவியிலிருந்து இறங்கி சாதாரண நீதிபதியாக ஆக்கப்பட்டார். அத்துடன் அவர் குர்தாஸ்பூர் மாவட்டத்திலிருந்து முல்தானிற்கு பணிமாற்றம் செய்யப்பட்டார். இவ்வாறாக இறை நேசர்களை இழிவுபடுத்த வேண்டும் எனவும் பல இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தீட்டிய திட்டங்கள் திட்டமாகவே நின்று விட்டது. லாலா சந்த்லால் என்பவன் அந்த துயரத்திலிருந்து மீள முடியாமல் பைத்தியக்காரனாகி விட்டான் என பின்பு தெரிய வந்தது. இறுதியில் அதே நிலையில் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டான்.

## இறைவனின் சாபத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்

என்னுடன் பைஅத் உடன்படிக்கையில் இணைந்து கொண்ட என் நண்பர்களே! அவன் திருப்தி கொள்ளும் செயல்களைச் செய்யும் பேற்றினை இறைவன் எங்களுக்கும் உங்களுக்கும் தந்தருள்வானாக!

இன்று, நீங்கள் சிறுபான்மையினர். ஏளனத்துடன் நீங்கள் பார்க்கப்படுகின்றீர்கள். தொன்றுதொட்டு இயங்கி வரும் அல்லாஹ்வின் செயல்முறைக்கேற்ப இன்னும் ஒரு சோதனைக் காலம் உங்களுக்கு வரவிருக்கிறது.

உங்களைத் தடுமாற வைக்க ஒவ்வொரு திசையில் இருந்தும் முயற்சிகள் நடைபெறும். எல்லா விதத்திலும் தொல்லைக்கு ஆளாவீர்கள். பல்வேறு வசை மாரிகளைக் கேட்க நேரும். நாவாலோ, கையாலோ உங்களுக்கு துன்பமிழைக்கின்ற ஒவ்வொருவரும் இஸ்லாமிய தொண்டாக அதனைக் கருதுவார். எல்லா வகையிலும் சோதிக்கப்பட விண்ணிலிருந்தும் சில சோதனைகள் உங்களுக்கு வரும்.

எனவே, இப்போது கேளுங்கள். உங்களின் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் உரிய வழி உங்களின் காய்ந்த வாதத் திறமையோ, கிண்டலுக்குப் பதிலாக கிண்டலோ, ஏச்சுக்கு எதிராக ஏசுவதோ அல்ல.

ஏனென்றால் நீங்களும் இவ்வழிகளைக் கைக் கொண்டால் உங்கள் உள்ளம் கடினமாகி விடும். உங்களுள் பேச்சு மட்டுமே எஞ்சியிருக்கும். அதனை இறைவன் விரும்பாமல் வெறுப்புடன் பார்க்கிறான்.

எனவே நீங்கள் இரண்டு விதமான சாபங்களையும் ஒன்றுசேர்க்கும் விதத்தில் அதாவது மக்களுடைய சாபத்திற்கும் இறைவனுடைய சாபத்திற்கும் ஆளாகும் வண்ணம் நடந்து கொள்ளாதீர்கள்.

(ரூஹானி கஸாயின் தொகுதி 3, பக்கம் 546–547 இஸாலயே அவ்ஹாம்)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

**தற்போதைய காலத்தின் தேவை வாள் இல்லை. மாறாக, எழுதுகோல்தான் என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள்.**

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 60; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)

**A.M. ஸாகிர் ஹுஸைன்**
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், கோயம்புத்தூர்

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை – இறைவன் மீதும், திருக்குர்ஆன் மீதும் இறைதூதர் மீதும் கொண்டிருந்த அன்பு என்ற ஒளியில்

மவ்லவி சய்யிது சயீதுத்தீன் அஹ்மது, பத்ர் வாரப் பத்திரிகை, காதியான்.
மொழியாக்கம்: மவ்லவி M.ஷாஜஹான்

உலகில் வழிகேடு மற்றும் இருளின் வேகம் அதிகரிக்கும்போது இறைவன் மனித குலத்தை சீர்திருந்துவற்காகவும், வழிகாட்டுவதற்காகவும் தமது பிரதிநிதியை தோன்றச் செய்கின்றான். அவர் அவர்களை சீர்திருத்தி தமது செயல் முன்மாதிரியினால் மக்களை மீண்டும் சரியான பாதைக்கு கொண்டு வருகின்றார். அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை தோன்றச் செய்தான். பிறகு இந்த இறுதி காலத்தில் அன்னாரது உண்மைப் பேரன்பர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும் அனுப்பினான்.

இறுதி கால சீர்திருத்தவாதியான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையை நாம் படிக்கும்போது அவர்களின் எண்ணிலடங்கா நல்லொழுக்கங்கள் தென்படுகின்றன. ஆயினும் அவ்வனைத்திலும் முக்கியமான மூன்று நல்லொழுக்கங்கள் உள்ளன. அது உண்மையான பொருளில் மனித குல சீர்திருத்தம் மற்றும் படைப்பின் நோக்கத்தை பெறுவதற்கான வழியாகும். அதாவது முதலில் உண்மை படைப்பாளனிடம் அன்பு. அதாவது இறைவன் மீதான அன்பு. இரண்டாவது இறை வேதத்தின் மீது அன்பு. அதாவது திருக்குர்ஆன் மீதான அன்பு. மூன்றாவது இறைவனின் ரஸூலின் மீது அன்பு. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையின் இந்த மூன்று மகத்தான நல்லொழுக்கங்களும் அவர்களின் ஒவ்வொரு சொற்பொழிவும், எழுத்தும், ஒவ்வொரு சொல்லும் செயலும், ஒவ்வொரு அசைவும், அசையாமையும் அன்பு, நேசம், உணர்வு ஆகியவற்றால் நிரம்பி காண்படுகின்றன. மேலும் இந்த நேசம் முழுமையின் உச்சத்தை எந்த அளவு அடைந்தது எனில் உலக வரலாற்றில் இதற்கு ஈடானது தென்படுவதில்லை. திருக்குர்ஆனில் அல்லாஹ் மனிதனின் படைப்பின் நோக்கம், இறைவணக்கம் என்று கூறியுள்ளான்.

எனவே மனிதன் தனது படைப்பின் நோக்கத்தை பெற உண்மையான உள்ளத்துடன் இறைவனை வணங்கினால் அவனின் வணக்கத்தில் ஓர் இன்பமும் சுவையும் கிடைக்கிறது. மேலும் இந்த வணக்கத்தின் காரணமாக படிப்படியாக படைத்தவன் மற்றும் படைப்பினங்களுக்கும் இடையில் உறுதியான தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலைக்கு வேறு சொற்களில் இறையன்பு என்று கூறப்படுகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையை நாம் பார்க்கும் போது முந்தைய நபிமார்களை போன்றே இறையன்பு எனும் பண்பு அன்னார் (அலை) அவர்களிடம் நிறைந்து இருப்பது தெரிய வருகிறது. சிறுவயதிலும், இளமைப் பருவம் மற்றும் முதுமையாக இருந்தாலும் வாழ்க்கையின் அனைத்து காலத்திலும் இந்த மகத்தான பண்பு தனியாக தென்படுகிறது. அவர்கள் நிற்பது, அமர்வது, உறங்குவது, விழிப்பது ஆக அனைத்து சொல்லும் செயலும் இறைவனின் திருப்தி மற்றும் அவனின் அன்பை பெறுவதாகவே இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

உண்மையான வாழ்க்கை இறைவனிடத்தில் மரணிப்பதிலேயே கிடைக்கிறது. மேலும் உண்மையான வாழ்க்கையே ஈடேற்றமாகும். மேலும் அது இறையன்பு மற்றும் கண்ணியத்திற்குரியவனிடம் மரணிக்காமல் பெற முடியாது.

(சஷ்மயே மஸீஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 366)

இதன் காரணமாகவே காண்பவர்கள் அன்னாரின் இறையன்பில் ஒரு வேதனை இருந்தது எனக் கூறுகிறார்கள். அன்னார் எப்போதும் திக்ரே இலாஹி மற்றும் திருக்குர்ஆனை படித்தல் மற்றும் நவாஃபில் தொழுகையில் மூழ்கியிருப்பார்கள். இறைத்தொடர்பின் நிலை எவ்வாறு இருந்ததென்றால் இளமைப் பருவதில் மனிதனின் உள்ளம் உலக முன்னேற்றம் மற்றும் சுகபோகத்தின் விருப்பம் தனது உச்சத்தை தொட்டதாக இருக்கும். ஆனால் அன்னார் அதற்காக தமது வேலையை விட்டுவிட்டார்கள்.

ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது: ஒரு முறை அன்னாரின் தந்தை ஒரு சீக்கியர் மூலம் தற்போது ஆட்சியில் உள்ள மிகப்பெரிய அதிகாரியுடன் எனக்கு நல்ல தொடர்பு இருக்கிறது. எனவே அரசு வேலையின் விருப்பம் உமக்கு இருந்தால் அந்த அதிகாரியிடம் கூறி நல்ல வேலையை வாங்கித் தர முடியும் என்று தகவல் அனுப்பினார்கள். அந்த சீக்கியரும் ஹுஸூர் அவர்களிடம் வந்து அன்னாரின் தந்தையின் தகவலை கூறினார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நான் அவர்களின் அன்பிற்கும் பரிவிற்கும் கடமைப்பட்டவனாக உள்ளேன். ஆனால் என் வேலை தொடர்பாக கவலை கொள்ள வேண்டாம். நான் எங்கு பணி செய்ய வேண்டுமோ அங்கு பணியில் இணைந்து விட்டேன் என்று பதில் கூறினார்கள்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பாகம் 1 பக்கம் 43)

அந்த சீக்கியர் வியப்படைந்தவாறும் கவலையடைந்தவாறும் திரும்பிச் சென்று அன்னாரின் தந்தையிடம் நடந்ததை கூறினார். தமது இயல்பில் விஷயத்தைப் புரியும் நுட்பமான திறன் இருந்த அன்னாரின் தந்தை, சிறிது நேரம் மவுனமாக இருந்து விட்டு கூறினார்கள்: நான் பணியாளாக ஆகி விட்டேன் என்று குலாம் அஹ்மது கூறினாரா? சரி! நல்லது! பிறகு அல்லாஹ் அவரை வீணாக்க மாட்டான்.

மேலும் அதன் பின் எப்போதாவது பெரும் ஏக்கத்துடன் உண்மையான வழி எதுவென்றால் குலாம் அஹ்மது மேற்கொள்ளும் வழியே ஆகும். நாமே உலக விவகாரங்களில் சிக்கி நமது வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டுள்ளோம் என்று கூறுவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A அவர்கள் எழுதிய சீரத்துல் தய்யிபா என்ற நூல், பக்கம் 3,4)

இவ்வாறே ஒரு முறை ஓர் உயர் அதிகாரி அன்னாரின் தந்தையிடம் உங்களுக்கு சிறிய மகன் உள்ளார் எனக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் ஒரு முறை கூட பார்த்ததில்லையே எனக் கேட்டார். அதற்கு அன்னாரின் தந்தை சிரித்த முகத்துடன், ஆம்! எனக்கு இரண்டாவது ஒரு பையன் இருக்கிறார். ஆனால் அவர் புதிதாக திருமணம் புரிந்த மணமகள்களைப் போன்று குறைவாகவே தென்படுவார். அவரை

காணவேண்டுமெனில் பள்ளிவாயிலின் ஏதாவதொரு ஓரத்தில் இருப்பார். சென்று பார்த்துக் கொள்ளுங்கள். அவருக்கு உலக காரியங்களில் ஆர்வம் இல்லை. மேலும் அவர் பெரும்பாலும் பள்ளிவாயிலிலேயே இருப்பார்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பாகம் 2 பக்கம் 367)

அன்னாரின் தந்தை பரிவு மற்றும் உலகின் வெளிப்படையான நிலைமையின் காரணமாக தனக்கு பின் இந்த பிள்ளையின் நிலை என்னவாகும்? என்று அன்னார் மீது கவலை கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் இஸ்லாத்தின் இறைவன் மிகவும் நம்பிக்கை உள்ளவன். மேலும் மதிப்பை நன்கு அறிந்தவன் ஆவான். ஆகவே அன்னார் (அலை) அவர்களின் தந்தையின் மரணத்திற்கு முன் தனது இளமையிலேயே அவனின் கரத்தை பிடித்த அந்த பணியாளருக்கு அல்லாஹ் أَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهُ அதாவது என்னுடைய அடியாரே! நீர் கவலையில் இருக்கிறீர்? இறைவன் தனது அடியாருக்கு போதுமானவனாக இல்லையா? என்ற மகத்தான இல்ஹாமின் மூலம் ஆதரவு வழங்கினான்.

(தத்கிரா பக்கம் 20)

இந்த இல்ஹாம் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெரும்பாலும் இவ்வாறு கூறி வந்தார்கள்: இந்த இல்ஹாம் எப்படிப்பட்ட மகத்தான மற்றும் கம்பீரத்துடன் இறங்கியது என்றால் எனது உள்ளத்தின் ஆழத்தில் பசுமரத்தில் அடித்த ஆணியைப் போல் அமர்ந்து விட்டது. மேலும் அதன் பின் அல்லாஹ் எவ்விதத்தில் பரிபாலித்தான் எனில் எந்த தந்தையும் அல்லது எந்த சொந்தமும் அல்லது எந்த நண்பரும் என்ன செய்ய முடியும்?

மேலும் கூறுகிறார்கள்: அதன் பின் என் மீது இறைவனின் தொடர் கருணை இருந்தது. அதனை கணக்கிடுவது முடியாத ஒன்றாகும். (கிதாப் அல்பரிய்யா பக்கம் 3)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உள்ளத்தின் அனுபவங்களின் வெளிப்பாட்டை இந்த ஒரு கவிதையில் தெரிந்து கொள்ளலாம். ''ஆரம்பத்திலிருந்தே உன்னுடைய நிழலில் எனது நாட்கள் கழிந்தன. உனது மடியில் பால்குடி குழந்தை போன்று நான் இருந்தேன்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது எந்த அளவுக்கு அன்பு இருந்ததென்றால் தூங்கும் போதும் உதட்டில் சுப்ஹானல்லாஹ் என்ற சொல் இருக்கும்.

(சீரத்துல் மஹ்தி, தொகுதி 1 முதல் பகுதி பக்கம் 287)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தின் நேரம் நெருங்கிய போதும் அவர்களின் தூய நாவிலிருந்து வெளிவந்த சொற்கள் எனது இறைவன் அன்பிற்குரிய இறைவன் என்ற சொற்கள் ஆகும்.

(சில்சிலா அஹ்மதிய்யா தொகுதி 1 பக்கம் 177)

மேலும் அன்னார் எந்த அளவு நிம்மதியாக இருந்தார்கள் என்றால் ஒரு பயணி நீண்ட பயணத்திற்குப் பிறகு தான் சேர வேண்டிய இடத்தை அடைந்து விட்டதைப் போல் இருந்தார்கள். ஆனால் இதை விட அதிகமாக அன்னாரின் இறை அன்பை யூகிக்க வேண்டும் எனில் அது அன்னார் தனிமையில் எழுதிய நோட்புக்கின் ஒரு பக்கத்தில் அன்னாரின் சொற்கள் இருக்கின்றன. அன்னாரின் மரணத்திற்குப் பின் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு அது கிடைத்தது. அந்த நோட்டின் ஒவ்வொரு சொல்லும் அவர்களின் உள்ளத்தில் இருந்த இறைவனின் அன்பை தெளிவாக எடுத்துரைக்கிறது.

இது தனிமையின் அந்த நொடிப்பொழுதியில் எழுதிய சொற்கள் ஆகும். ஓர் அடியார் தனது இறைவனிடம் தனிமையில் பேசுகிறார். அந்த நேரத்தில் தனக்கும் இறைவனுக்கும் இடையில் மூன்றாவது யாரும் இல்லை என்பது தெரியும்போது அவர் தனது உள்ளத்தின் ஆழத்தில் குடியிருக்கும் அன்பின் சொற்களை கூறும் ஆற்றலை தேடுகிறார். எனது உள்ளத்தின் நிலையை எனது இறைவனை விட நன்கு யார் அறிவார்? என்பதும் அவருக்குத் தெரியும்.

ஆயினும் அவர் இந்த அன்பிற்கு எவ்வாறாகிலும் சொற்களின் வடிவம் தர முயன்று தானும் அந்த நிலையை புரிய முயற்சிக்கிறார். இதைப் போன்ற சமயத்தில் எழுதப்பட்டட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த சொற்கள் அன்னாருக்கு இறைவன் மீது எந்த அளவுக்கு அன்பு இருந்தது என்பதை சப்தமிட்டு கூறுகிறது. ஆகவே அவர்கள் அந்த நோட்டில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

எனது நண்பனே! எனது அன்பிற்குரிய எஜமானனே! எனது அன்பே! எனது அன்பின் இறைவனே! நீ காஃபிர் ஆவாய் என உலகம் கூறுகிறது. ஆனால் உன்னை விட அதிக அன்பிற்குரியவன் வேறு யாராவது எனக்குக் கிடைக்க முடியுமா? அவ்வாறு கிடைக்க முடியுமென்றால் அவருக்காக நான் உன்னை விட்டு விட முடியும். ஆனால் மக்கள் உலகிலிருந்து மறைந்து விடும்போது, நான் எந்த நிலைமையில் இருக்கிறேன் என்பது பற்றி எனது நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் தெரியாதிருக்கும்போது நீ எனக்கு விழிப்பூட்டுகிறாய். மேலும் வருத்தப்படாதீர். நான் உம்முடன் இருக்கிறேன் என்று அன்புடன் கூறுகிறாய்.

பிறகு எனது அன்பிற்குரிய எஜமானனே! இந்த பேரருள் இருக்கும்போது நான் உன்னை விடுவது எவ்வாறு சாத்தியமாகும்? ஒருபோதும் ஒருபோதும் சாத்தியமல்ல.

(அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 375,376)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உள்ளத்தில் இறைவனின் அன்பு நிறைந்திருந்தது. மேலும் அது எந்த அளவுக்கு மேலோங்கி இருந்ததென்றால், அதற்கெதிரில் மற்றெல்லா அன்பும் ஒன்றுமற்றதாக இருந்தது. மேலும் அன்னார் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் இந்த கூற்றுக்கு முழுமையான உதாரணமாக இருந்தார்கள்.

اَلْحُبُّ فِي اللّٰهِ وَالْبُغْضُ فِي اللّٰهِ (அபூதாவூது, கிதாபுல் சுன்னா)

அதாவது உண்மையான நம்பிக்கையாளரின் ஒவ்வோர் அன்பும் ஒவ்வொரு கோபமும் இறைவனின் அன்பு, இறைவனின் கோபம் ஆகியவற்றிற்கு கீழ்ப்படிந்ததாகவும் அதற்காகவுமே இருக்கிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு ஃபார்ஸி கவிதையில் இறைவனின் உண்மையான அன்பின் அளவுகோலை இந்த சொற்களில் கூறுகிறார்கள்:

அதாவது இறைவன் இல்லாத எந்த விஷயம் உமது உள்ளத்தில் இருக்கிறதோ அது (சோம்பல் ஈமானை கொண்ட மனிதனே!) உமது உள்ளத்தின் ஒரு சிலை ஆகும். இந்த மறைவான சிலைகளிலிருந்து சுதாரிப்பாக நீர் இருக்க வேண்டும். மேலும் உமது உள்ளத்தை இந்த சிலைகளில் கரம்படாமல் பாதுகாத்துக் கொள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தனது உண்மையான படைப்பாளனுடன் அன்பும் தன்மானமும் கொண்டிருப்பதில் பெருமிதம் இருந்தது. ஒரு சம்பவம் ஒரு முறை **1904**–ஆம் ஆண்டு கரம் தீன் வழக்கில் இந்து நீதிபதியின் எண்ணம் சரியானதாக இல்லை. மேலும் அன்னாரை கைது செய்ய சூழ்ச்சி செய்கின்றார் என்ற தகவல் கிடைத்தது. அப்போது உடல்நலம் சரியில்லாததால் அன்னார் படுத்திருந்தார்கள். இந்த சொல்லைக் கேட்டதும் வேகமாக எழுந்து அமர்ந்து மிகக்

கம்பீரமாக, அவர் இறைவனின் சிங்கத்தின் மீது கை வைத்துப் பார்க்கட்டுமே! எனக் கூறினார்கள்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 முதல் பகுதி பக்கம் 86)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் கூறுகிறார்கள்:

எவர் இறைவனுக்கு உரியவரோ அவரை சீண்டுவது நல்லதல்ல. பலவீனமான கோழைகளே! சிங்கத்தின் மீது கையை வைக்காதீர்கள். எனது தலை முதல் பாதம் வரை என்னில் அந்த நண்பன் உள்ளான். எனக்கு தீமையை விரும்பக் கூடியவர்களே! சுய நினைவுடன் என் மீது தாக்குதல் தொடுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சிரமத்தில் ஆளாக்க மேலும் அன்னாரின் இயக்கப் பணியை தடுக்க பல்வேறு துன்பங்களை எதிரிகள் தந்தனர். அதில் சண்டை மற்றும் கொலை வழக்குகளும் அடங்கும். ஆனால் அன்னாருக்கு தனது அன்பிற்குரிய இறைவன் மீதிருந்த அன்பின் விளைவாக அவன் அனைத்து சிரமங்கள் மற்றும் கஷ்டங்களிலிருந்து வெளியே கொண்டு வருவான் என்ற நிச்சய உறுதி இருந்ததை பாருங்கள்.

1897–ல் நடந்த சம்பவம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது மார்ட்டின் கிளார்க்கை கொலை செய்ததாக பழியை போட்டு அன்னார் மீது இராணுவ வழக்கு தொடுத்தார். ஆனால் எப்போதும் போல் அல்லாஹ் இந்த முறையும் எதிரிகளின் திட்டங்களை வெற்றி பெற விடவில்லை. மேலும் இந்த வழக்கிலிருந்து விடுதலை கிடைக்கும் என்று முன்பே கூறியிருந்தான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ் நமக்கு முன்பே தகவல் கொடுத்து விட்டான். மேலும் நாம் அவனின் உதவியை எதிர்பார்த்து இருந்தோம். எனவே அல்லாஹ்வின் முன்னறிவிப்பின் முன் நாம் மகிழ்ச்சியில் உள்ளோம். மேலும் அதன் நல்ல முடிவின் மீது உறுதி கொண்டவர்களாக இருக்கிறோம். நமது நண்பர்கள் பதற்றப்பட வேண்டிய தேவை இல்லை.

(கிதாப் அல்பரிய்யா, தொகுதி 1 பக்கம் 237)

இதே வழக்கு தொடர்பாக வேறொரு இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நம்முடன் இறைவன் இருக்கிறான். அவன் அவர்களுடன் இல்லை. அல்லாஹ் நமக்கு தனது தீர்ப்பின் மூலம் தெரியப்படுத்தி விட்டான். மேலும் அதுவே நடக்கும். நாம் அதில் உறுதியாக இருக்கிறோம். ஒருவேளை முழு உலகமும் இந்த வழக்கில் நமக்கு எதிராக இருந்தாலும் எனக்கு ஓர் அணுவளவு கூட பாதிப்பில்லை. மேலும் இறைவனின் நற்செய்திக்கு பின்னர் அதில் கற்பனை செய்வதும் கூட பாவமாகக் கருதுகிறேன்.

(ஹயாத்தே அஹ்மது தொகுதி 4 பக்கம் 597,598)

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் மீது ஒரு முழுமையான மற்றும் உறுதியான தொடர்பு இருந்தது. இதன் காரணமாகவே வாழ்க்கையின் அனைத்து நிலையிலும் இறையுதவி அவர்களுடன் இருந்தது. எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் கூறுகிறார்கள்:

இறைவனின் தூய மக்களுக்கு இறைவனிடமிருந்து உதவி கிடைக்கிறது. அது வரும்போது பிறகு உலகிற்கு ஒரு உலகத்தை காண்பிக்கிறது. அது காற்றாகி சறுகுகளை பறக்கச் செய்கிறது. அது நெருப்பாகிறது. மேலும் ஒவ்வொரு எதிரியையும் எரித்து விடுகிறது. சில சமயம் மண்ணாகி எதிரிகளின் தலையில் விழுகிறது. சில சமயம் அது தண்ணீராகி அவர்கள் மீது புயலை கொண்டு வருகிறது. ஆக இறைவனின் வேலை ஒருபோதும் மனிதனால் தடைபடுவதில்லை. படைப்பாளன் முன்னால் படைப்பின் ஏதும் முன் இருக்க முடியுமா?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தனது உண்மை படைப்பாளன் மீது எந்த அளவுக்கு அன்பு இருந்ததோ அதே அளவுக்கு இறைவனும் அன்னார் (அலை) அவர்கள் மீது அருள்பாலித்தான். மேலும் அந்த அன்புக்கு மதிப்பு வழங்கினான். அன்னாருடன் அதிகமாக உரையாடினான். மேலும் மழையைப் போன்று இல்ஹாம்களை அன்னார் (அலை) அவர்கள் மீது பொழிந்து கொண்டே இருந்தான். அதில் முன்னறிவிப்பின் சாயலை கொண்டவை எண்ணிலடங்காதவை ஆகும். மேலும் அன்னார் (அலை) அவர்கள் அந்த இல்ஹாம்களை தமது உண்மைக்கு சான்றாக எடுத்து வைத்தள்ளார்கள். மேலும் இந்த இல்ஹாம்கள் தமது நேரத்தில் மகத்தான முறையில் நிறைவேறுவதை நாம் பார்த்து வருகிறோம்.

அல்லாஹ் அன்னாரை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தி ஆகவும் அனுப்பியுள்ளான் என்ற விஷயத்தில் அன்னாருக்கு முழுமையான உறுதி மற்றும் நம்பிக்கை இருந்தது. அன்னார் (அலை) அவர்களுக்கு இறைவனின் அனைத்து வாக்குறுதியின் மீதும் முழுமையான நம்பிக்கை இருந்தது. எது நடந்தாலும் இறைவனின் கூற்று பொய்யாகாது என்பதில் அன்னார் நம்பிக்கை வைத்திருந்தார்கள். இந்த விஷயத்தை நம்மவர்கள் மட்டுமல்ல. மற்றவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்தியாவிலுள்ள பயனீர் என்ற ஓர் ஆங்கில பத்திரிகை அன்னாரின் மரணத்தின்போது அன்னாரைப் பற்றி இவ்வாறு எழுதுகிறது:

மிர்ஸா சாஹிப் அவர்களுக்கு தமது வாதம் தொடர்பாக ஒருபோதும் சந்தேகம் எழுந்ததில்லை. மேலும் அவர்கள் மீது இறை கூற்றுகள் இறங்குகின்றன என்பதில் அன்னாருக்கு முழுமையான உண்மையும், தூய்மையின் உறுதியும் இருந்தது. அவர்களுக்கு வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஆற்றலை வழங்கியது.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 255)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உள்ளத்தில் இறைவன் மீது அளவற்ற அன்பும் நேசமும் இருந்தது. இந்த அன்பு மற்றும் நேசம் தனக்கு மட்டும் உரியதாக இருந்து விடக்கூடாது என்பதால் இந்த அன்பின் பொறியை மற்றவர்களின் உள்ளத்திலும் உருவாக்க விரும்பினார்கள். எனவே அவர்கள் தமது நூலான நூஹ் நபியின் கப்பல் என்பதில் இவ்வாறு கூறுகிறார்கள்:

எல்லாவற்றின் மீதும் வல்லமையுள்ள இறைவன் ஒருவன் நமக்கு இருக்கின்றான் என்பதை இதுவரை அறியாதவர் எத்தகைய துர்பாக்கியசாலியாக இருக்கிறார். நமது சுவர்க்கம் நமது இறைவனாவான். நமது மேலான இன்பங்கள் அனைத்தும் நமது இறைவனிடத்தில் இருக்கின்றன. ஏனெனில் நாம் அவனை கண்டிருக்கிறோம். அழகனைத்தும் அவனிடத்தில் அமைந்துள்ளன. ஆக இச்செல்வத்தை நாம் உயிரை தியாகம் செய்து பெற நேரிட்டாலும் கண்டிப்பாகப் பெறுவதற்குத் தகுதியுள்ளதாக இருக்கிறது. மேலும் நாம் நம்மை முற்றாய் அர்ப்பணித்தால்தான் பெற முடியும் என்றாலும் இவ்விலையுயர்ந்த மாணிக்கத்தை வாங்கத் தகுதியுள்ளதாக இருக்கிறது.

இழப்பிற்குரியோரே! உங்களுக்கு வளம் தரக்கூடிய இந்த ஊற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உயிரோட்டமுள்ள ஒரு நீர் ஊற்றாகும். இது உங்களை காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? இந்த நற்செய்தியை உங்கள் இதயங்களில் நான்

எவ்வாறு பதிய வைப்பேன். உங்களின் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதனை மக்களெல்லாரும் கேட்கும் பொருட்டு நான் எந்த முரசைக் கொட்டி வீதிகளில் அறிவிப்பு செய்வேன்? மக்கள் செவிகளெல்லாம் கேட்பதற்கான சிகிச்சையை நான் எம்மருந்தைக் கொண்டு செய்வேன்? நீங்கள் இறைவனுக்காக ஆகிவிட்டால் அவன் உங்களுடையவனாய் ஆகிவிடுவான் என்பதை நிச்சமயாக அறிந்து கொள்ளுங்கள்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 21,22)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உள்ளத்தில் இறைவனின் அன்பு எனும் நெருப்பின் கனல் எந்த அளவுக்கு இருந்ததென்றால் அதற்கு எதிரில் மற்ற அனைத்து அன்பும் சருகாய் இருந்தன. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உலகத்திலிருந்து தமது முகத்தை திருப்பியதும் இறைவன் ஈருலக அருள்களால் அன்னார் (அலை) அவர்களின் மடியை நிரப்பினான் என்பது ஒரு விநோதக் காட்சியாகும். ஆயினும் அன்னாரின் பார்வையில் இறைவனின் அன்பு மற்றும் அவனின் நெருக்கத்திற்கு எதிரில் மற்ற அனைத்து அருள்களும் மதிப்பற்றதாய் இருந்தன.

பிறகு அல்லாஹ்வின் அன்பிற்குரிய வேதம் திருக்குர்ஆன் ஆகும். இதற்கு அல்லாஹ்வின் காலம் என்ற அந்தஸ்து மற்றும் உயர்வு உள்ளது. மேலும் மனித குலம் சீர்திருந்த உலகிற்கு அருளப்பட்ட இறுதி வேதமாகும். இதன் மீதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அளப்பரிய அன்பு மற்றும் நேசம் இருந்தது. திருக்குர்ஆனோடு அன்பு, நேசம் மற்றும் கண்ணியத்தை அன்னார் கொண்டிருந்தார்கள். மேலும் மனித குலத்திற்கும் கற்றுக் கொடுத்தார்கள். திருக்குர்ஆன் மீது அன்னார் கொண்டிருந்த அன்பின் வழிமுறையின் உதாரணம் காணக்கிடைப்பதில்லை.

அன்னார் திருக்குர்ஆனை உள்ளத்தில் இறக்கினார்கள். மேலும் தம்மை பின்பற்றுபவர்களின் உள்ளத்தில் நுழையச் செய்தார்கள். அதன் மகத்துவம் மற்றும் கம்பீரத்தை மற்றவர்களிடத்தில் எவ்வாறு நிலைநாட்டினார்கள் என்றால் அவர்களிடத்தில் அச்சம் ஏற்பட்டது. மேலும் இந்த நூலின் உண்மைத்துவத்தை மேலும் அதன் மேன்மையை மற்ற அனைத்து வேத நூல்களுக்கு எதிரில் நிரூபித்தார்கள். அதற்காக எதிரிகளை போட்டிக்கு அழைத்தார்கள். திருக்குர்ஆன் மீது கொண்ட இந்த அன்பு, நேசத்தினால் அதனை பாதுகாக்கும் இந்த கோணத்தை வேறெங்கும் காண முடிவதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உனது நூலை முத்தமிட வேண்டும் என்பதே என் உள்ளத்தில் எப்போதும் உள்ளது. அதனை சுற்றியே வர வேண்டும். என்னுடைய கஃபா இதுவே ஆகும்.

அதாவது திருக்குர்ஆனின் மேன்மைகள் வெளிப்படையானவையாகும். ஆனால் அதனுடனான அசல் விஷயம் என்னவெனில், எனது வானத்தின் எஜமானனே! அது உன்னிடமிருந்து வந்த பரிசுத்த நூலாகும். அதை மீண்டும் முத்தமிடுவதற்காகவும், அதைச் சுற்றி வலம் வருவதற்காகவும் எனது உள்ளம் நிம்மதியிழந்தவாறு இருக்கிறது.

இதே போல் மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் அழகை குறிப்பிட்டவர்களாக ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் அனைத்து முஸ்லிம்களின் உயிரின் ஒளியாகும். சந்திரன் மக்களுக்கு நிலவாகும். நமது நிலவு திருக்குர்ஆன் ஆகும். திருக்குர்ஆன் எவ்வாறான வேதம் எனில் அது தனது மகத்துவங்களை, தனது நுட்பங்களை, தனது உண்மைத்துவத்தை, தனது கூற்றில் உச்சத்தை எட்டுதல், தனது மதிநுட்பத்திலும், தனது ஆன்மீக ஒளிகளிலும் அதற்கு ஈடு வேறு எதுவும் இல்லை என தானே வாதம் செய்கிறது. முஸ்லிம்கள் தமது எண்ணத்தின் காரணமாக அதனை மேன்மைக்குரியதாக ஆக்கி விட்டனர் என்பதில் எந்த உண்மையும் இல்லை.

மாறாக, அது தனது மேன்மைகளை தமது சிறப்புகளை தாமே எடுத்துரைக்கிறது. மேலும் தாம் ஒப்பற்றதாய் இருப்பதை முழு படைப்பினங்களுக்கு எதிரில் எடுத்து வைக்கிறது. மேலும் ஹல்மின் முஆரிள் ஆட்சேபனை செய்பவர் யாரும் இருக்கிறாரா? என உரத்த குரலில் எடுத்துரைக்கிறது.

மேலும் தனது உண்மைத்துவத்தை, மதிநுட்பத்தைப் பற்றி அறிவற்றவரே சந்தேகிப்பார். மாறாக, அதன் மதிநுட்பம் கடல் அலையைப் போன்று வேகத்துடன் அடித்துக் கொண்டே இருக்கிறது. மேலும் வானத்தின் நட்சத்திரங்களைப் போன்று எங்கு பார்த்தாலும் ஒளிருவது தெரிகிறது.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 4 ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 662,663 அடிக்குறிப்பு 11)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆன் மீது கொண்டிருந்த அன்பின் காட்சிகள் நமக்கு அவர்களின் பல நூல்களிலிருந்து மட்டுமல்லாமல் கவிதைகளிலும் காண முடிகிறது. இந்த அழகினை நாம் அவர்களின் கூற்றுகளிலும் பார்க்க முடியும். மேலும் அவர்களின் செயல்களிலும் காணலாம். ஆக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை திருக்குர்ஆன் மீதான அன்பு, புகழ், மகத்துவம் ஆகியவற்றால் நிறம்பியுள்ளதை காண முடிகின்றது. அது பற்றி அன்னார் ஓர் இடத்தில் கூறுகிறார்கள்:

நான் இளைஞனாக இருந்தேன். இப்போது முதுமையை அடைந்து விட்டேன். நான் உலகியல் விவகாரங்களில் வீழ்ந்து கிடக்கவில்லை; மார்க்க ஈடுபாட்டிலேயே எனது ஆர்வம் எப்போதும் இருந்தது என்பதை மக்கள் விரும்பினால் சாட்சி கூற முடியும். திருக்குர்ஆன் எனும் பெயரைக் கொண்ட இறைவார்த்தையை நான் மிகவும் உயர்தரமான தூய்மையைக் கொண்டதாகவும், ஆன்மீக ஞானத்தால் நிரம்பியதாகவும் கண்டேன்.

(சனாதன் தர்ம், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 474)

திருக்குர்ஆனை ஆழ்ந்து படிப்பதன் பழக்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இயல்பின் மறு பகுதியாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த நிலையைப் பற்றி ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி இர்ஃபானீ சாஹிப் (ரலி) கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நேரங்கள் இறைவணக்கம், இறைவனை திக்ர் செய்தல் மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதில் கழியுமே தவிர வேறு வழியில் அல்ல. பொதுவாக அன்னார் உலாவிக் கொண்டே படித்துக் கொண்டிருப்பது அன்னாரின் வழக்கமாக இருந்தது. உண்மையை அறியாத மற்ற மக்கள் இந்த செயலை பார்த்து நகைப்பார்கள். திருக்குர்ஆன் மற்றும் அதனை ஆழ்ந்து சிந்திப்பது வழக்கமாக இருந்தது.

கான் பகாதுர் மிர்ஸா சுல்தான் சாஹிப் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒரு திருக்குர்ஆன் இருந்தது. அதனை படித்தவர்களாக அதில் அடையாளமிடுவார்கள். மேலும் நான் சந்தேகத்திற்கு இடமின்றி ஏறக்குறைய பத்தாயிரம் முறை படித்துள்ளேன் எனக் கூறுவார்கள். அன்னாருக்கு இந்த அளவுக்கு ஆர்வமும் துடிப்பும் இருந்தது. அன்னாருக்கு இறைவனின் இந்த கண்ணியத்திற்குரிய

வேதத்தின் மீது எந்த அளவுக்கு அன்பும், தொடர்பும் இருந்தது என்பதை தெரிவிக்கின்றது. அன்னாருக்கு இறைவாக்குடன் எந்த அளவுக்கு தொடர்பும் ஆர்வமும் இருந்தது என்பதை தெரிவிக்கிறது. திருக்குர்ஆனை ஓதுவது மற்றும் அதை ஆழ்ந்து சிந்திப்பதுதான் அன்னாரிடம் திருக்குர்ஆனின் உண்மைத்துவம் மற்றும் மகத்துவத்தை வெளிக் கொண்டு வர ஒரு துடிப்பை பிறக்கச் செய்தது. மேலும் திருக்குர்ஆனின் எல்லையில்லா ஞானத்தின் கடலாக அல்லாஹ் அவரை ஆக்கி விட்டான்.

(ஹயாதே அஹ்மது தொகுதி 1 பகுதி 2 பக்கம் 172,173)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்லாக்கில் அமர்ந்து காதியானிலிருந்து பட்டாலா சென்று கொண்டிருந்தார்கள். மேலும் இந்தப்பயணம் பல்லாக்கில் குறைந்தது ஐந்து மணி நேரத்திற்குரியது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியானிலிருந்து புறப்பட்டதும் தம்முடைய குர்ஆனைத் திறந்து சூரா ஃபாத்திஹாவைப் படிக்கத் தொடங்கினார்கள். மேலும் தொடர்ச்சியாக ஐந்து மணி நேரம் வரை இந்த சூராவைப் படித்ததவர்களாக மூழ்கி இருந்தார்கள். ஒரு பரந்து விரிந்த கடலில் அதன் ஆழத்தில் அவர்கள் தமது ஆதியற்ற அன்பனின் அன்பு மற்றும் கருணையின் முத்துக்களைத் தேடுவதில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள்.

(சீரத்தே தய்யிபா பக்கம் 11,12 சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பகுதி 2 பக்கம் 395)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் கருணை பற்றி தமது கவிதையில் கூறுகிறார்கள்:

ஃபுர்கான் என்பது ஒளியாகும். அது அனைத்து ஒளிகளுக்கும் மேலானதாக வெளிப்பட்டது. எவனிடமிருந்து இந்த ஒளியின் கடல் வெளிப்பட்டதோ அவன் தூய்மையானவன் ஆவான். தவ்ஹீது எனும் உண்மை வாடிய பூவைப் போல் ஆகிவிட்டிருந்தது. எங்கோ மறைந்திருந்த இந்த முடிவில்லா நீர் ஊற்று வெளிப்பட்டது. இறைவனே! உன்னுடைய ஃபுர்கான் ஓர் உலகமாகும். எது அவசியமோ அவை அனைத்தும் இதனுள் வெளிப்பட்டது. எல்லா கடைகளையும் முழு உலகையும் அலசிப் பார்த்தோம். ஞான பானத்தின் கண்ணாடி குவளையாக இது ஒன்றே வெளிப்பட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த அளவுக்கு திருக்குர்ஆனின் மீது அன்பு மற்றும் நேசம் இருந்து எனில் தலைவலிக்கு திருக்குர்ஆன் ஓதக் கேட்பதால் அன்னாருக்கு சுகம் கிடைக்கும்.

சீரத்துல் மஹ்தியில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் என்னிடம் கூறுகிறார்கள்: ரோம் நாட்டின் தூதுவர் ஹுஸைன் காமீ காதியான் வந்த இரவு இஷாவின் போது மஃரிப் தொழுகைக்குப் பின்னர் ஹஸ்ரத் சாஹிப் முபாரக் பள்ளிவாசலில் மக்களுடன் அமர்ந்திருந்தார்கள். ஷாஹ் நஷீன் (தாம் அமரும் இருக்கை)–ல் சகோதரர்களுடன் அமர்ந்திருந்தார்கள்; அவர்களுக்கு தலைச்சுற்று ஆரம்பமானது. அவர்கள் ஷாஹ் நஷீன் (தாம் அமரும் இருக்கை)–லிருந்து கீழே இறங்கி தரையில் படுத்து விட்டார்கள். சிலர் அன்னாரை அமுக்கி விட்டனர். ஆனால் ஹுஸூர் அனைவரையும் தடுத்து விட்டார்கள். பெரும்பாலான நண்பர்கள் அங்கிருந்து சென்றதும் அன்னார் மர்ஹூம் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களிடம் திருக்குர்ஆனை ஓதுமாறு கூறினார்கள். மவ்லவி சாஹிப் மிகவும் இனிமையாக மிக நீண்ட நேரம் திருக்குர்ஆனை ஓதிக்கொண்டே இருந்தார்கள். அதனால் அன்னாரின் தலைவலி தீர்ந்து விட்டது.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 439)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் திலாவத்தை இனிமையான குரலில் கேட்டும் போதெல்லாம் அன்னாரின் கண்களில் கண்ணீர் வழிந்தோடத் தொடங்கி விடும். அன்னாரின் நெருங்கிய சீடரும் மகத்தான நண்பரும் ஆகிய முன்னாள் பத்ர் ஆசிரியர் முஃப்தி முஹம்மது சாதிக் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு திருக்குர்ஆனின் மீது இருந்த அன்பை எடுத்துக் கூறியவாறு கண்கண்ட சாட்சியாக கூறுகின்றார்கள்:

யாரோ ஒருவர் ஹஸ்ரத் சாஹிபிடம் ஹுஸூர்! இவர் திருக்குர்ஆன் நன்றாக ஓதுவார் எனக் கூறினார். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் பாதையின் ஓரத்தில் அமர்ந்து கொண்டார்கள். மேலும் சிறிது ஓதிக் காண்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். எனவே அவர் திருக்குர்ஆனை ஓதியபோது, அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி எழுவதை நான் கண்டேன். மேலும் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபின் மரணத்தின் போது நான் மிகவும் உன்னிப்பாக பார்த்தேன். ஆனால் நான் அன்னாரை அழக் கண்டதில்லை. ஆயினும் அன்னாருக்கு மவ்லவி சாஹிபின் மரணம் மிகப் பெரிய கவலையை ஏற்படுத்தியிருந்தது. நான் கூறுகிறேன். இது முற்றிலும் உண்மையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகக் குறைவாக அழுது வந்தார்கள் என்பது மிகச் சரியானதாகும் என நான் கூறுகிறேன். மேலும் அவர்களுக்கு சுய கட்டுப்பாடு அதிகம் இருந்தது. மேலும் சில நேரம் அவர்கள் அழுதாலும் அவர்களின் கண்கள் நிறைந்து விடும் அளவுக்குள் இருக்கும். இதை விட அதிகமாக அன்னார் அழுததில்லை.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 393,394)

திருக்குர்ஆன் மீது மட்டுமல்ல. அதற்கான தொண்டாற்றுவதற்கான ஆர்வம் மற்றும் விருப்பமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடத்தில் அசாதாரணமானதாக இருந்தது. அன்னார் ஒருபுறம் திருக்குர்ஆன் மீதான அன்பை வாழ்நாள் முழுவதும் வெளிப்படுத்தி தனது செயலால் செய்தும் காட்டினார்கள்.

மறுபுறம் அன்னார் திருக்குர்ஆனுக்கு தொண்டாற்றுவதில் முழு வீச்சுடன் ஈடுபட்டார்கள். இதன் காரணமாகவே அன்னார் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அதிகமாக திருக்குர்ஆனுக்கு தொண்டு செய்வதற்கு அறிவுரை வழங்குகிறார்கள். மேலும் அந்த மக்களிடத்தில் ஆர்வத்தை உருவாக்க அன்னாரிடம் ஒரு துடிப்பு இருந்தது.

இதனை அன்னார் தமது ஒரு ஃபார்ஸி கவிதையில் குறிப்பிடுகிறார்கள்:

செய்தி அறியாதவர்களே! இன்ன மனிதர் உலகில் இப்போது இல்லை என்ற ஓசை கேட்பதற்கு முன்னர் திருக்குர்ஆனுக்கு தொண்டு செய்வதில் முழு வீச்சுடன் ஈடுபடுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உள்ளத்தின் விருப்பம் அன்னார் ஏற்றுக் கொண்டவர்கள் திருக்குர்ஆனுக்கு தொண்டு செய்வதில் ஈடுபட வேண்டும். மேலும் திருக்குர்ஆன் மீது அன்பு மற்றும் நேசம் கொள்ள வேண்டும். மேலும் மற்றவர்கள் வெளிப்படுத்தியிராத அன்பு மற்றும் நேசத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னால் திருக்குர்ஆன் மீது அன்பு கொண்டவர்கள்,

திருக்குர்ஆனுக்கு விளக்கம் எழுதுகின்றவர்கள் எண்ணற்றவர்கள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் போன்று திருக்குர்ஆன் மீது அன்பு கொண்டவர் வேறு யாரும் இருக்க முடியாது. ஏனெனில் திருக்குர்ஆனின் அழகு, பேரருள் ஆகியவற்றின் ஒளியை அல்லாஹ் தனது ரஹ்மானிய்யத்தின் கீழ் அன்னாருக்கு வெளிப்படுத்தினான். மேலும் மறைவான உண்மைகளின் ஞானத்தின் அறிவை வழங்கினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பலமுறை தமது எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளில் தமக்கு இறைவனால் வழங்கப்பட்ட திருக்குர்ஆனின் ஞானத்தை தமது உண்மைக்கு சான்றாக இஸ்லாமிய ஆலிம்களுக்கு முன் எடுத்து வைத்தார்கள். ஓரிடத்தில் இறைவனால் வழங்கப்பட்ட நான்கு அடையாளங்களை எடுத்துரைத்தவர்களாக ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

(1) திருக்குர்ஆனின் அற்புதத்தின் நிழலாக எனக்கு அரபி மொழியின் சொற்செறிவு, பொருள்செறிவின் அடையாளம் வழங்கப்பட்டடுள்ளது.

(2) எனக்கு திருக்குர்ஆனின் உண்மைகளையும் ஞானங்களையும் எடுத்துரைக்கும் அடையாளம் வழங்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து யாரும் போட்டி போட முடியாது.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 496)

சூரா ஃபாத்திஹாவிற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்ன விளக்கவுரையை வழங்கியுள்ளார்களோ – அதன் உள்ளத்தை தொடும் உண்மைகளையும், ஞானங்களையும் வழங்கியுள்ளார்களோ அதற்கு நிகரானதை கடந்த 14 நூற்றாண்டுகளில் எங்கேயும் காண முயாது. இது தொடர்பாக ஹுஸூர் (அலை) அவர்கள் பீர் மஹர் அலி ஷா சாஹிப் கோல்டவி அவர்களுக்கு ஜூலை 1900–ஆம் ஆண்டு வழங்கிய இந்த அறைகூவலை கூறுவது பொருத்தமானதாக இருக்கும்.

லாஹூரில் ஒரு மாநாட்டிற்கான ஏற்பாட்டைச் செய்து குலுக்கல் முறையில் திருக்குர்ஆனின் நாற்பது வசனங்களை எடுத்து அதன் உண்மைத்துவத்தின் ஞானத்தை அழகிய இலக்கிய அரபியில் ஏழு மணி நேரத்திற்குள் எழுத ஆயத்தமாகி விடுவது. இந்த போட்டியின் அழைப்பை ஏற்க அவர் ஆயத்தமாகவில்லை. இருப்பினும் தகவல் கொடுக்காமலேயே லாஹூர் வந்து விவாதத்தின் நிபந்தனையை வைத்து விட்டு திரும்பிச் சென்று அழைத்தவர் தாமே லாஹூர் வராமல் ஓடி விட்டார் என்று கூச்சல் இட்டார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர் ஏமாற்றியது பற்றியும், களத்தை விட்டு ஓடியது பற்றியும் விளக்கியதுடன் வீட்டில் அமர்ந்தவர்களாக விளக்கவுரை எழுத போட்டிக்கு அழைத்தார்கள். 15 டிசம்பர் 1900 முதல் எழுபது நாற்களுக்குள் இலக்கண அரபியில் சூரா ஃபாத்திஹாவிற்கு தஃப்ஸீர் எழுத வேண்டும். அரபி மற்றும் அரபி அல்லாத ஆலிம்களையும் சந்தேகமின்றி அழைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இவ்வாறு எதிரெதிர் விளக்கவுரை எழுதிய பின்னர் மூன்று பிரபல அரபு இலக்கிய அறிஞர்கள் இந்த விளக்கவுரையை ஒன்று சேர்ந்து ஆழ்ந்த கருத்துச் செறிவுள்ளதாகவும் உறுதி கொண்டால்; ஆழிய ஞானம் உள்ளதாகவும் கருதினால் நான் ஐநூறு ரூபாய் ரொக்க பரிசு வழங்குவேன். மேலும் எனது அனைத்து நூல்களையும் எரித்து விடுவேன். மேலும் அவர்களின் கையில் பைஅத்தும் செய்து விடுவேன். ஒருவேளை விதி எதிராக அமைந்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது 70 நாட்களுக்குள் அவர் ஒன்றும் எழுதவில்லை எனில் அவ்வாறான மக்களின் பைஅத் வாங்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. மேலும் பணத்தின் ஆசையும் இல்லை. பீர் எனக் கூறிக்கொண்டு அவர் வெட்கத்திற்குரிய பொய்யை கூறியுள்ளார் என்பதை வெளிப்படுத்துவதே போதுமானதாகும்.

பிறகு இந்த அறிவிப்பிற்கேற்ப இறைவனின் அருள் மற்றும் சிறப்பான உதவியின் மூலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிடப்பட்ட கால அவகாசத்திற்குள் 23 பிப்ரவரி 1901–ஆம் ஆண்டு இஃஜாஸுல் மஸீஹ் என்ற பெயரில் ஆழிய அரபி மொழியில் சூரா ஃபாத்திஹாவின் விளக்கவுரையை வெளியிட்டார்கள். அப்போது வரை பீர் மஹர் அலி ஷா சாஹிப் அவர்கள் வீட்டில் இருந்தவாறே போட்டியில் விளக்கவுரை எழுத முடியவில்லை.

மேலும் தமது மரணத்தின் மூலம் தோல்வியை ஒப்பிக் கொண்டு தமது அறிவீனம் மற்றும் பொய்யின் மீது முத்திரை பதித்துக் கொண்டார். மேலும் அன்னார் தமது இறைவனால் வழங்கப்பட்ட திருக்குர்ஆனின் ஞானத்தை இஸ்லாமிய ஆலிம்கள் முன் தமது சான்றாக எடுத்து வைத்தார்கள். இதை போன்ற ஒன்று அன்னாரின் அன்ஜாமே ஆத்தம் என்ற நூலிலும் இருக்கிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னுடைய எதிரிகள் திருக்குர்ஆனின் ஏதாவது சூராவிற்கு எனக்கு போட்டியாக தஃப்ஸீர் எழுதுங்கள். அதாவது எதிரும் புதிருமாக ஓரிடத்தில் அமர்ந்து திருக்குர்ஆனை திறக்க வேண்டும். முதலில் எந்த 7 வசனங்கள் வருகின்றனவோ அவற்றின் தஃப்ஸீரை நானும் அரபியில் எழுதுவேன். மேலும் எனது எதிரியும் எழுதட்டும். பிறகு உண்மையான ஞானத்தை வெளிப்படுத்துவதில் நான் வெற்றி பெறவில்லை எனில் பிறகு நான் பொய்யன் ஆவேன்.

(ஸமீமா அன்ஜாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 304)

சுருக்கமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அல்லாஹ் திருக்குர்ஆனின் உண்மைத்துவம் மற்றும் ஞானத்தின் கருவூலங்களை திறந்திருந்தான். இதன் காரணமாகவே அன்னார் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் விளக்கத்தை எந்த ரீதியில் உலகிற்கு முன் எடுத்து வைத்தார்களோ அதன் மகத்துவத்தைக் கையாண்டார்களோ அது உண்மையில் புகழப்படத் தகுதியானதாக இருக்கிறது.

நம்மவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் அன்னாரின் சேவையை அதிகமாக வெளிப்படுத்தியுள்ளார்கள். உண்மை என்னவெனில், ஹதீஸில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தொடர்பாக வந்துள்ளதைப் போல் அவர் திருக்குர்ஆனை (ஈமானை) கார்த்திகையிலிருந்து கொண்டு வருவார் என்பதன் கண்கூடான காட்சியை உலகம் அன்னாரிடம் கண்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மனித குலம் அதன் போதனைகளின்படி செயல்பட வேண்டும். மேலும் அதனை நேசிக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அன்னார் நூஹ் நபியின் கப்பல் என்ற தமது நூலில் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஆதலால் மிகக் கவனமாய் இருங்கள். இறைவனது போதனைக்கும் குர்ஆனின் நேர்வழிக்கும் மாறாக ஓர் அடி கூட எடுத்து வைக்க முற்படாதீர்கள்.

எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையாவது மீறுவாரோ அவர் தனது இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களால் தன் மீதே அடைத்துக் கொள்கிறார் என்பதனை நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உண்மையானதும் முழுமையானதுமான இரட்சிப்புக்குரிய வழிகளை திருக்குர்ஆனே நமக்குத் திறந்து தந்திருக்கிறது. எஞ்சியிருப்பவை அனைத்தும் அதன் நிழல்களாகும். ஆகவே நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றிப் படியுங்கள். அதனை மிகவும் மேலாக நேசியுங்கள். வேறெதனோடும் வைக்காத பற்றை அதனோடு வையுங்கள். ஏனெனில் இறைவன் என்னை நோக்கி اَلْخَيْرُ كُلُّهٗ فِى الْقُرْاٰنِ என்று கூறியுள்ளான். அதாவது எல்லாவிதமான நலன்களும் திருக்குர்ஆனில் உள்ளன.

உண்மையும் இதுவேயாகும். திருக்குர்ஆனைக் காட்டிலும் மற்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மக்களைக் குறித்து நான் பரிதாபம் கொள்கின்றேன். உங்களின் எல்லா விதமான வெற்றிக்கும் இரட்சிப்பிற்கும் ஆன ஊற்றின் உறைவிடம் திருக்குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப்படாத உங்களது எந்த மார்க்கத் தேவையுமில்லை. இறுதி நாளில் உங்களது நம்பிக்கை பொய்யானதா? உண்மையானதா? எனப் பிரித்துக் காட்டக்கூடிய நூல் திருக்குர்ஆனேயாகும். குர்ஆன் மூலமாக அல்லாமல் உங்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய நூல் வானத்தின் கீழ் வேறொன்றும் இல்லை. திருக்குர்ஆனை உங்களுக்கு அருளியிருப்பதன் மூலம் மாபெரும் அருட்கொடையை இறைவன் உங்களுக்காக அளித்திருக்கின்றான்.

உங்களுக்காக அருளப்பட்டிருக்கின்ற இவ்வேதம் கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் நிச்சயமாக அவர்கள் வழிதவறியிருக்க மாட்டார்கள். உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடையும், நேர்வழியும் தவ்ராத்திற்கு பதிலாக யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் இறுதி நாளை மறுத்திருக்கவே மாட்டார்கள் என்று நான் உண்மையாக கூறுகிறேன். எனவே உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள்.

இது மிகவும் அன்பார்ந்த அருட்கொடையும் கிடைப்பதற்கரிய செல்வமும் ஆகும். திருக்குர்ஆன் அருளப்படாதிருந்தால் முழு உலகமும் அசுத்தமான இழிந்த பொருளாக ஆகியிருக்கும். திருக்குர்ஆன் எவ்வாறான சிறந்த நூல் என்றால் அதன் முன் ஏனைய எல்லா வழிகாட்டல்களும் பொருளற்றவையாகும்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 26,27)

இது தவிர ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையின் மற்றொரு ஒப்பற்ற மற்றும் காண முடியாத பண்பு ரஸூலின் மீது கொண்டிருந்த அன்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு அன்னாரின் ஆன்மாவின் உணர்வு ஆகும். இதன் மூலமே அன்னாரின் படைப்பின் இயல்பு எழுந்துள்ளது. மேலும் அதிலேயே முழுவதுமாக அழிந்தவர்களாக அன்னாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் கழிந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு எனும் களத்தில் அன்னாரின் அந்தஸ்து ஈடற்றதாகும். அன்னார் ஒரு கவிதையில் கூறுகிறார்கள்:

நான் இறைவனுக்குப் பிறகு முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களின் அன்பில் மூழ்கியுள்ளேன். எவரின் பார்வையிலாவது எனது இந்த அன்பு குஃப்ர் என்றால் இறைவன் மீது ஆணையாக! நான் ஒரு கடும் காஃபிராவேன்.

ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அன்னாரின் அன்பின் உதாரணம் எவ்வாறானது எனில் உலகில் எந்த மனிதரும் மற்ற மனிதருடன் இவ்வாறான அன்பை இந்த ரஸூலின் மீது செலுத்தியது போன்று செய்தது கிடையாது. இதற்கான ஒரே காரணம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உள்ளத்தால் இந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களை நேசிக்காமல் உண்மையான இறைவனை காணும் எண்ணம் வீணான எண்ணமாகும் என்பது அன்னாருக்கு காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏக இறைவனின் வெளிப்பாடு என்பதையும், அனைத்து மேன்மைகளையும் உடைய மனிதர் என்பதையும் அன்னார் அனுபவத்தால் அறிந்திருந்தார்கள். அழகிலும், பேருதவியிலும், மேன்மையிலும் நேசத்திற்குரியவராக இருப்பதிலும், உள்ளத்தை ஈர்ப்பதிலும், பெருமிதத்திலும், படைப்பினங்களில் அந்த இறையன்பருக்கு நிகரானவர், இணையானவர் வேறு யாரும் இல்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நபி (ஸல்) அவர்கள் அழகில் அனைத்து மனித படைப்புகளை விடவும் மேலானவர் ஆவார்கள். நீரிலும் நிலத்திலும் ஒளிர்வதில், மின்னுவதில் அனைத்து முத்தையும் விட மேலானவர் ஆவார்கள். மனித குலத்திற்கு எந்த அளவுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருணை செய்தார்களோ அந்த அளவுக்கு மற்ற நபிமார்கள் செய்யவில்லை என்பதை அன்னார் (அலை) அவர்கள் உறுதியாக நம்பினார்கள்.

உண்மை நேசரின் ஓர் அடையாளம் நேசிப்பவர் தமது நேசத்திற்குரியவரின் நினைவுகளை கூறிக்கொண்டே இருப்பதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவம் மற்றும் மேன்மை மீதான எத்தகைய ஞானத்தை வழங்கியிருந்தான் என்றால் அவன் அன்னாரின் தூய உள்ளத்தை நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பின் அடையாள சின்னமாக்கி இருந்தான். நபி (ஸல்) அவர்களின் நினைவில் அன்னார் இரவும் பகலும் கழிந்தது.

மேலும் அந்த நேசரின் மீது தரூதும் ஸலாமும் அனுப்புவது அவர்களின் பகலிரவு வேலையாக இருந்தது. ஒருமுறை தரூது ஷரீஃப் எவ்வளவு படிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது.ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நாவு வரண்டு விடும் வரை ஓத வேண்டும் என்று பதில் கூறினார்கள்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 4 பக்கம் 156)

மேலும் தரூது ஷரீஃப் தொடர்பான தமது அனுபவத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இச்சொல்லில் கூறுகிறார்கள்:

ஓர் இரவு இந்த எளியவன் தரூது ஷரீஃப் எந்த அளவுக்கு அதிகமாக படித்தேன் எனில் உள்ளமும் உயிரும் அதனால் மனம் கமழ்ந்தது. அதே இரவு கனவில் நான் பார்க்கிறேன். அன்னார் தூய நீரின் வடிவில் ஒளியின் குவளையை இந்த எளியவன் வீட்டுக்கு கொண்டு வருகிறார்கள். அவர்களில் ஒருவர் நீர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அனுப்பிய அதே பரகத்து தான் இது எனக் கூறினார்.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 598)

ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வீட்டினுடன் இணைந்துள்ள சிறிய பள்ளியில் அதை முபாரக் பள்ளிவாசல் என்பார்கள். தனிமையில் நடந்து கொண்டிருந்தார்கள். மேலும் ஏதோ முனங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும் அதனுடன் அன்னார் (அலை)

அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அப்போது ஒரு தூய நண்பர் வெளியிலிருந்து வந்து கேட்டபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியான ஹஸ்ஸாம் பின் சாபித் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) மரணமடைந்தபோது கூறிய ஒரு கவிதையை படித்துக் கொண்டிருந்தார்கள்.

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِيْ فَعَمِيَ عَلَيْكَ النَّاظِرُ

مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ فَعَلَيْكَ كُنْتُ أُحَاذِرُ

(தீவான் ஹஸ்ஸாம் பின் சாபித்)

அதாவது இறைவனின் அன்பிற்குரிய இறைதூதர் அவர்களே! நீர் எனது கண்ணின் கருவிழியாய் இருந்தீர். அது இன்று உமது மரணத்தினால் குருடாகி விட்டது. உமக்குப் பின் இப்போது யார் வேண்டுமானாலும் மரணிக்கட்டும். எனக்கு உமது மரணத்தின் அச்சமே இருந்தது. அது நிகழ்ந்து விட்டது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இவ்வாறு அழுவதைப் பார்த்தேன். அப்போது அவர்கள் பள்ளிவாசலில் தனிமையில் உலாவிக் கொண்டிருந்தார்கள். நான் பதற்றத்துடன், ஹஸ்ரத்! இதுவென்ன துயரம் உங்களுக்கு வந்தது? எனக் கேட்டேன். அதற்கு ஹுஸூர் அவர்கள், இப்போது நான் ஹஸ்ஸாம் பின் சாபித் (ரலி) அவர்களின் இந்த கவிதையை படித்துக் கொண்டிருந்தேன். மேலும் எனது உள்ளத்தில் இந்த கவிதை எனது நாவிலிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டுமே என்ற விருப்பம் உருவானது என்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது மிகக் கடுமையான காலங்களும் வந்தன. எல்லா வித வறுமையையும் அன்னார் கண்டார்கள் என்பதை உலகம் அறிந்துள்ளது. சிரமங்களை சகித்துக் கொண்டார்கள். விபத்துகளின் புயல் தலை மேல் விழுந்தது. எதிரிகள் சார்பாக இழிவுகள் மற்றும் பழிகளை எதிர்கொள்வது, எந்த அளவுக்கு இருந்ததென்றால் கொலை செய்யத் தூண்டியதற்கான பொய்யான வழக்கும் அன்னாருக்கு எதிராக தொடரப்பட்டது. குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் தமக்காக அர்ப்பணமானவர்களின் மரணக் காட்சியை கண்டார்கள்.

ஆயினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கண்கள் உள்ளத்தின் கவலையின் உணர்வை ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. ஆனால் தனிமையில் தனது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் பற்றி இந்த அன்பின் கவிதையை நினைத்து அன்னார் (அலை) அவர்களின் கண்களில் கண்ணீர் வெள்ளப்பெருக்கு போன்று வெளியேரியது; மேலும் இந்த கவிதை எனது நாவிலிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டுமே என்ற அவர்களின் உள்ளத்தின் விருப்பம் மிகைத்திருந்தது.

(சீரத் தய்யிபா பக்கம் 22,23)

இந்த சம்பவத்தின் மூலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதிருந்த உண்மையான அன்பு மற்றும் நேசத்தை நன்றாக தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த விஷயம் உண்மையான ஒன்றாகும். அன்பு மற்றும் நேசத்தின் உயரிய அந்தஸ்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த அளவு பெற்றிருந்தார்கள் என்றால் அது ஈடேற்றத்திற்குரிய வழியாகும் என்பதை எவ்வித அச்சமும் இன்றி பல முறை கூற முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களிலும் முஹம்மதிய்ய அன்பின் நறுமணம் வருகிறது. அவர்களின் ஒவ்வொரு சைகையிலும் முஹம்மது (ஸல்) என்ற அழகின் பிம்பம் தெரிகிறது. அன்பு மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டின் எவ்வாறான ஈர்ப்பு அன்னாரின் வாழ்க்கையில் தென்படுகின்றதென்றால், மனிதன் ஆச்சரியத்தில் மூழ்கி விடுகிறான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பில் திழைத்தவர்களாக, பெருமானார் (ஸல்) அவர்களின் மேன்மையை கூறுகிறார்கள்:

جسمی یطیر الیك من شوقٍ علا

یالیت کانت قوۃ الطیران

அதாவது எனது அன்பானவரே! எனது ஆன்மா எப்போதோ உமக்குரியதாக ஆகி விட்டது. இப்போது எனது உடலும் உம்மை நோக்கி பறப்பதற்கான ஆர்வத்தில் உள்ளது. என்னிடம் பறப்பதற்கான ஆற்றல் இருந்திருக்க வேண்டுமே!

அன்பின் விளைவு தியாகம் மற்றும் அர்ப்பணித்தல் மற்றும் தன்மானத்தை வெளிப்படுத்துதல் ஆகிய வடிவில் வெளிப்படுவது கட்டாயமானதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இந்த ஆர்வத்தின் உணர்வு அதிகமாக இருந்தது. ஓர் இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பு மற்றும் குணங்கள் மீது கிருத்தவ பாதிரிகளின் பொய்யான மற்றும் அசுத்தமான ஆட்சேபனைகளை நினைவு கூர்ந்தவாறு கூறுகிறார்கள்:

"கிறிஸ்தவ பிரச்சாரகர்கள் நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக எண்ணற்ற பழித்துரைகளை இட்டுக்கட்டிக் கூறியுள்ளனர். தமது இந்த ஏமாற்று வேலை மூலமாக அதிகமான மக்களை வழிகெடுத்து விட்டனர். இந்த மக்கள் தூய ரஸூல் (ஸல்) அவர்களது மகிமைக்கு எதிராக செய்கின்ற பரிகாசமும் எள்ளி நகையாடுதலும் எந்த அளவு எனது உள்ளத்தில் துக்கத்தை ஏற்படுத்தியதோ அது போன்று வேறெந்த பொருளும் ஒருபோதும் எனக்கு துக்கத்தை ஏற்படுத்தியதில்லை. படைப்பினங்களில் சிறந்தவரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய நற்பண்புகளுக்கு எதிராக அவர்கள் பேசுகின்ற உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய இழிசொற்களும் பழித்துரைகளும் எனது உள்ளத்தை கடுமையாகக் காயப்படுத்தி இருக்கின்றன.

இறைவன் மீது ஆணையாக! எனது சந்ததிகளையும் எனது சந்ததிகளின் சந்ததிகளையும் எனது எல்லா நண்பர்களையும் என்னுடன் ஒத்துழைக்கின்ற எனக்கு உதவி செய்கின்ற அனைவரையும் எனது கண்களுக்கு முன்னால் கொலை செய்தாலும் எனது கைகளையும் கால்களையும் வெட்டிப் போட்டாலும் எனது கண்களின் மணியைத் தோண்டி எடுத்து வெளியில் எறிந்தாலும் எனது எல்லா ஆசைகளும் நிறைவேறாமல் அவற்றிலிருந்து நான் விலக்கி வைக்கப்பட்டாலும், எனது எல்லா மகிழ்ச்சியையும் செழிப்பான நிலையையும் நான் இழந்து விட்டாலும் மிகவும் கண்ணியத்திற்குரிய ரஸூல் (ஸல்) அவர்கள் மீது இத்தகைய அசுத்தமான தாக்குதல்கள் நடத்தப்படும்போது எனக்கு ஏற்படும் இந்த துக்கம் இந்த எல்லா விஷயங்களுக்கும் எதிரில் எனக்கு மிகவும் பாரமானதாக இருக்கின்றது.

எனவே, எனது விண்ணின் எஜமானனே! (இறைவனே!) நீ எங்கள் மீது உனது கருணை மற்றும் உதவியின் பார்வையை செலுத்துவாயாக! மேலும் எங்களுக்கு இந்த மகத்தான சோதனையிலிருந்து இரட்சிப்பை வழங்குவாயாக!."

**(சீரத் தய்யிபா பக்கம் 35,36)**

பிறிதோரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

அவரே நமது தலைவர். அவரின் மூலமே அனைத்து ஒளிகளும் உள்ளன. அவரின் பெயர் முஹம்மது (ஸல்) ஆகும். எனது உள்ளம் நிரம்பியவர் அவரே. அனைத்தும் அவரே. நாம் ஒரு பொருட்டே அல்ல. இதுவே தீர்ப்பாகும்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதனுக்கு அருளப் பெற்ற – அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப் பெற்ற உயர் தகுதி உடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியின் கடல், ஆறு ஆகியவற்றிலும் இல்லை. அது மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து, பவளம் ஆகியவற்றுள்ளும் இருந்ததில்லை.

அதாவது, பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது, முழுமையான மனிதனிடம் – அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவர்.

(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 160)

பிறிதோரிடத்தில் நபி (ஸல்) அவர்களை தூய உள்ளத்துடன் பின்பற்றினால் மனிதன் இறைவனுக்கு பிரியமானவனாக ஆக முடியும் என்பதைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் தான் யாரிடமாவது அன்பு செலுத்த வேண்டும் எனில் அவ்வாறான மனிதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை பின்பற்றுவதை அவசியமாக்கியுள்ளான். ஆகவே எனது சுய அனுபவம் என்னவென்றால், நபி (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவது மேலும் அன்னாரின் மீது நேசம் கொள்வது இறுதியில் மனிதனை இறைவனுக்கு அன்பிற்குரியவரக்கி விடுகிறது. இவ்வாறு தானே அவரின் உள்ளத்தில் இறை நேசத்தின் ஒரு பிடிப்பை உருவாக்கி விடுகிறான். அப்போது அந்த மனிதர் அனைத்து பொருளிலிருந்தும் உள்ளத்தை விடுவித்தவராக இறைவனிடத்தில் குனிந்து விடுகிறார்.

மேலும் அவரின் வெப்பமும் ஆர்வமும் இறைவனுக்காகவே எஞ்சி இருக்கிறது. அப்போது இறையன்பின் ஒரு சிறப்பான வெளிப்பாடு அவர் மீது விழுகிறது. மேலும் அவருக்கு ஒரு முழுமையான அன்பு மற்றும் நேசத்தின் வடிவம் தந்து ஆர்வத்தில் ஆற்றலுடன் தமது பக்கம் இழுத்துக் கொள்கிறது. அப்போது மனதின் ஆர்வத்தின் மீது அவர் வெற்றி பெறுகிறார். மேலும் அவரின் உதவி மற்றும் ஒத்துழைப்புக்கு அனைத்து ரீதியிலும் இறைவனின் பழமையான வழக்கத்திற்கேற்ப செயல் ரீதியான அடையாளங்களின் வடிவில் வெளிப்படுகிறது.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹாஹீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 67)

உண்மையான அன்பு என்பது தண்ணீர் குடுவையைப் போன்றது. அதை மறைத்தாலும் மறைவதில்லை. ஒவ்வொருவரும் அதனை பார்க்கிறார் மற்றும் உணர்கின்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது கொண்ட உண்மையான அன்பைப் பற்றி ஒரு உலகே சாட்சி பகர்கின்றது. வானவர்களும் இதற்கு சாட்சி பகர்கின்றனர். நம்மவரும் சான்று பகர்ந்துள்ளனர். மேலும் மற்றவர்களும் இதனை ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை இல்ஹாம் வந்தது. அதன் பொருள் இவ்வாறாகும். விண்ணில் மக்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றனர். அதாவது இறைதிட்டம் மற்றும் மார்க்க உயிரோட்டத்திற்கான உத்வேத்தில் இருக்கின்றனர். ஆனால் இப்போது வரை வானவர்களின் கூட்டத்தில் உயிர் தரக்கூடிய மனிதரின் குறிப்பு வெளியிடப்படவில்லை. ஆகவே அவர்கள் கருத்து வேறுபாட்டில் உள்ளனர். அதே தருணத்தில் கனவில் நான் காண்கின்றேன். மக்கள் ஒரு உயர்ப்பிப்பவரை தேடித்திரிகின்றனர். மேலும் ஒரு மனிதர் இந்த எளியவனின் முன் வந்து சுட்டிக் காட்டியவராக கூறுகிறார்.

هٰذَا رَجُلٌ يُّحِبُّ رَسُوْلَ اللهِ

அதாவது இவர் ரஸூலுல்லாஹ்வின் மீது அதிக அன்பு கொண்ட மனிதராவார். மேலும் இந்த கூற்றின் பொருள் என்னவென்றால், இந்த பொறுப்புக்கு மகத்தான நிபந்தனை, ரஸூலின் மீதான அன்பாகும். ஆக அது இந்த மனிதரிடம் அதிகம் உள்ளது.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 4 ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 598)

மற்றவர்களின் சாட்சியம் தொடர்பாக நான் பாபு முஹம்மது உஸ்மான் சாஹிப் லக்னவி கூற்றை வைக்கிறேன். அவர் 1918–ல் காதியான் சென்றார். மேலும் ஓர் இந்து லாலா படாமில் அல்லது லாலா மாலாவாமில் அவர்களை சந்தித்தார். இவரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலில் அதிகமாக வருகிறது. மேலும் அவரிடம் நீங்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இளமைப் பருவத்தில் பார்த்துள்ளீர்கள். தாங்கள் அன்னாரை எவ்வாறு அறிகிறீர்கள் என கேட்டார். அதற்கு அவர், நான் இன்று வரை முஸ்லிம்களில் இவரைப் போன்று தமது நபியின் மீது அன்பு வைத்திருக்கக்கூடிய ஒருவரை பார்த்ததில்லை என்று கூறினார்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 3 பக்கம் 19)

இவ்வாறே பிரபல எழுத்தாளர் அல்லாமா நியாஸ் அஹ்மது கான் நியாஸ் ஃபதஹ் பூரி அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நபியின் மீது கொண்டிருந்த நேசம் பற்றி இவ்வாறு கூறுகிறார்: அவர் உண்மையான ரீதியில் ரஸூலின் அன்பராக இருந்தார். (நிஹார் ஜூலை 1960)

துணைக் கண்டத்தின் ஒழுக்கவியலில் புகழ்பெற்ற மிர்ஸா ஃபர்ஹதுல்லாஹ் பேக் சாஹிப் அவர்களின் சாட்சியமும் நினைவுகூற தகுதியுள்ளதாகும். அவர்கள் எழுதுகிறார்கள்:

அவரின் சிறிய தந்தை மிர்ஸா இனாயத்துல்லாஹ் சாஹிப் இவரிடம் ஒரு முறை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிபை சந்திக்க சென்றால் அவரின் கண்களை நன்றாக பார்த்து விட்டு வர வேண்டும் என வலியுறுத்தி கூறியிருந்தார்கள்.

அவர் எழுதுகிறார்: நான் காதியான் சென்றேன். கண்களை கூர்ந்து கவனித்தேன். அதில் பச்சை நிற தண்ணீர் சுழல்வது தெரிய வந்தது. நான் திரும்பி வந்ததும் எனது சிறிய தந்தையிடம் அதனைப் பற்றி கூறினேன்.

அவர்கள் கூறினார்கள். ஃபர்ஹத்! அம்மனிதரை ஒருபோதும் தவறாக பேச வேண்டாம். அவர் ஃபக்கீர் ஆவார். மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேசர் ஆவார்.

அவர் எழுதுகிறார்: நான் சிறிய தந்தையிடம் தாங்கள் இதனை எவ்வாறு அறிந்தீர்கள்? எனக் கேட்டேன். அதற்கு அவர்கள், ரஸூலின் அன்பர் தமது நேசரின் எண்ணத்தில் அனைத்து நேரமும் மூழ்கியிருக்கிறார். அவரின் கண்களில் பசுமை வந்து விடுகிறது. மேலும் பச்சை நிற அலையொன்று ஓடிக்கொண்டே இருக்கும் என்று கூறினார்கள்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 3 பக்கம் 579,580)

நான் இந்த கட்டுரையை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளுடன் நிறைவு செய்கிறேன். இதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மனித குலத்தை இறைவன் பக்கம் அழைத்துள்ளார்கள். மேலும் அவர்களுக்கு உண்மையான மார்க்கத்தின் அடையாளத்தை குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அவர்களுக்கு ஈடேற்றத்தின் வழியை காண்பித்துள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பூமியில் வாழுகின்ற மக்களே! கிழக்கிலும் மேற்கிலும் குடிபுகுந்துள்ள மனித ஆன்மாக்களே! நான் முழுமையான வலுவுடன் உங்களுக்கு இதன் பக்கம் அழைப்பு விடுகின்றேன்.

அதாவது பூமியின் மீது இப்போது உண்மையான மார்க்கம் இஸ்லாம் மட்டுமேயாகும். திருக்குர்ஆன் கூறியுள்ள அந்த இறைவன் தான் உண்மையான இறைவன் ஆவான். எப்போதும் ஆன்மீகமான வாழ்வைப் பெற்றுள்ள நபி, கம்பீரம் மற்றும் தூய்மையின் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்.

அவர்களது ஆன்மீக வாழ்வு மற்றும் தூய கம்பீரத்திற்கு நமக்கு இந்த ஆதாரம் கிடைத்துள்ளது. அதாவது, அன்னாரைப் பின்பற்றிச் சென்று அவர்கள் மீது அன்பு கொள்வதன் காரணமாக பரிசுத்த ஆவியுடன் உள்ள தொடர்பு, இறைவனிடம் உரையாடுதல் மற்றும் விண்ணின் அடையாளங்கள் ஆகியவற்றின் அருட்கொடைகளை நாம் பெற்றுள்ளோம்.

(திரியாகுல் குலூப், ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் பக்கம் 141)

இறைவனின் இந்த உண்மை அன்பரின் வாழ்க்கையின் எண்ணற்ற பகுதிகளில் இந்த மூன்று முக்கிய மற்றும் மகத்தான பகுதிகளை ஆழ்ந்து கவனியுங்கள். மேலும் அவர்களின் வாழ்க்கையில் இருக்கும் இந்த அன்பு மற்றும் துடிப்பின் ஆழத்தை அறிய முயற்சி செய்யுங்கள். நாம் நிச்சயமாக அதனை சரியாக யூகிக்க முடியாது. ஆயினும் நாம் நமது முயற்சியில் எவ்வளவு முடியுமோ அதன் விளைவாக நமது ஆன்மீகம் நிச்சயமாக உயரிய படித்தரங்களை அசாதாரணமான மேன்மைகளையும், அசாதாரணமான முன்னேற்றத்தையும், மேலும் அசாதாரணமான வெளிச்சத்தையும் உண்டாக்கும்.

மேலும் நாம் நமது பிறப்பின் நோக்கத்தை பெறக் கூடியவர்கள் ஆகிவிடுவோம். அல்லாஹ் இதன் அடிப்படையில் செயல்படுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் நாமும் நமது சந்ததிகளும் அன்னார் (அலை) அவர்களின் பசுமையான மரத்தின் பசும் கிளைகளாக எப்போதும் இருப்பவர்களாக இறைவன் நம்மை ஆக்குவானாக. ஆமீன்.

## மகத்தான முன்னறிவிப்பு

“இறைவன் மீது ஆணையாக ! இப்போதும் நான் அவனைக் காண்கின்றேன். உலகம் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனால் என்னை அனுப்பியவன் என்னை அறிகிறான். என்னுடைய அழிவை நாடுவது இவர்களின் தவறும், முற்றிலும் பேறிழந்த நிலையுமாகும்.

நான், உண்மையான எஜமானன் தனது கையால் நட்டிய மரமாவேன். எவர் என்னை வெட்ட நினைக்கிறாரோ அவருடைய முடிவு காரூன், யூதாஸ், அபூஜஹ்ல் ஆகியோரிடமிருந்து கொஞ்சம் பங்கை வாங்கிக் கொள்ள விரும்புகிறார் என்பதைத் தவிர வேறெந்த விளைவும் ஏற்படப் போவதில்லை.

மக்களே ! இறுதி காலம் வரை என்னுடன் நன்றியுடன் நடந்து கொள்ளும் ஒரு கை என்னுடன் இருக்கிறது என்பதை உறுதியாக புரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய ஆண்கள், உங்களுடைய பெண்கள், உங்களுடைய இளைஞர்கள், உங்களுடைய முதியவர்கள், உங்களில் சிறியவர்கள், உங்களில் பெரியவர்கள் அனைவரும் சேர்ந்து என்னை நாசமாக்குவதற்காக துஆக்களைச் செய்தாலும், சஜ்தா செய்து செய்து மூக்கு தேய்ந்து போனாலும், கை செயலிழந்து போனாலும் இறைவன் உங்களின் துஆவை ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டான்.

மேலும் அவன் தனது வேலையை முழுமை செய்யாதவரை நிற்க மாட்டான். மேலும் மனிதர்களில் ஒருவர் கூட என்னுடன் இல்லாவிட்டாலும் இறைவனின் மலக்குகள் என்னுடன் இருப்பார்கள். நீங்கள் சாட்சியை மறைப்பீர்கள் என்றால் கற்கள் எனக்காக சாட்சி பகரக் கூடும்.

எனவே உங்கள் உயிர்களின் மீது அநீதியிழைத்துக் கொள்ளாதீர்கள். பொய்யர்களின் முகம் வேறொன்றாக இருக்கிறது; உண்மையாளர்களின் முகம் வேறொன்றாக இருக்கிறது. இறைவன் எந்த விஷயத்தையும் தீர்ப்பளிக்காமல் விட்டு விடுவதில்லை.”

(ஆர்பயீன் எண் 3 பக்கம் 14,15. ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 399,400)

## முஸ்லிம்களே! இஸ்லாத்திற்காக வழித்தொழுங்கள்

இறுதியாக நான் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அறிவுரையாகக் கூறுகிறேன். இஸ்லாத்திற்காக விழித்தெழுங்கள். இஸ்லாம் கடுமையான சோதனையில் ஆழ்ந்திருக்கிறது..... நான் இதற்காகவே வந்துள்ளேன். எனக்கு இறைவன் திருக்குர்ஆனின் ஞானத்தை வழங்கியுள்ளான். தனது வேதத்தின் உண்மைகளையும் தத்துவங்களையும் எனக்குத் திறந்து தந்துள்ளான்....எனவே நீங்களும் இந்த அருட்கொடையிலிருந்து பங்கு பெறும் பொருட்டு என் பக்கம் வாருங்கள். எவன் கையின் என் உயிர் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக ! நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன்.

(பரகாத்துத் துஆ பக்கம் 31 ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 36)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

மவ்லவி ஃபலாஹுத்தீன் கமர், நஸாரத் உலியா தென் இந்தியா, காதியான்.
மொழியாக்கம்: மவ்லவி P.M. வஸீம் அஹ்மது

மதிப்பிற்குரிய வாசகர்களே! இஸ்லாத்தின் மீது ஒரு காலம் வரும். அப்போது ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விடும். அதாவது இந்த உலகத்தில் ஈமான் இருக்காது என்று சய்யிதுர் ருஸுல் வ கைருல் பஷர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். இந்த உம்மத் 72 பிரிவுகளாகப் பிரிந்து விடும். எல்லா விதத்திலும் உள்ள தீமைகள் இதில் உருவாகி விடும். ஆலிம்களின் நிலைமை எந்த அளவுக்கு கீழ்த்தரமாக இருக்கும் என்றால் அவர்கள் மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்குப் பதிலாக மக்களை வழிதவற வைப்பவர்களாகவும் குழப்பங்களை உருவாக்கக் கூடியவர்களாகவும் இருப்பர்.

மேலும் மக்களுக்கிடையில் கொலை கொள்ளைகளுக்கும் இவர்கள் காரணிகளாகி விடுவர். ஆனால் இத்துடன் அன்னார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வசந்த காலமும் திரும்பி வரும் என்று உம்மத்தினருக்கு ஒரு நற்செய்தியையும் வழங்கி இருக்கின்றார்கள். அந்தக் காலம் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும் என்றும் அந்தக் காலத்தில் ஈமான் மீண்டும் உலகில் நிலைநாட்டப்படும் என்றும் அன்னார் கூறியிருக்கின்றார்கள்.

كَيْفَ أَنْتُمْ إِذَا نَزَلَ ابْنُ مَرْيَمَ فِيكُمْ وَإِمَامُكُمْ مِنْكُمْ

(புகாரி, கிதாபுல் அன்பியா, பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம்ஈ முஸ்லிம்ஈ முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 336)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களில் இப்னு மர்யம் இறங்கும்போது அவர் உங்களிலிருந்து உங்களுக்கு இமாம் ஆகும்போது உங்களது நிலைமை என்னவாக இருக்கும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு முழுமையடையவில்லை என்று எல்லாப் பிரிவுகளும் கூறுகின்றன. ஆனால் மஹ்தி மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் மூலமாக இந்த முன்னறிவிப்பு முழுமை பெற்று விட்டது என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுதியான முழுமையான நம்பிக்கை ஆகும்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை அல்லாஹ் இந்தக் காலத்தின் இமாமாகவும் மஸீஹாகவும் மஹ்தியாகவும் அனுப்பி இருக்கிறான். நூற்றுக்கணக்கான வருடங்களின் நீண்ட கால வறட்சிக்குப் பிறகு ஒரு நபி தமது முகத்தைக் காட்டியிருக்கிறார். ஆனால் அந்தோ பரிதாபம்! எப்போதெல்லாம் மக்களுக்குள் ஒரு நபி தோன்றினார்களோ அப்போதெல்லாம் மக்கள் அவர்களை ஏளனம் செய்திருக்கின்றார்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும், நற்பேறு வழங்கப்பட்ட மஹ்தியாகவும் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை நமது எதிரிகள் பொய்யர் என நிரூபிப்பதற்காக இந்த உலக எதிர்ப்பினையும், ஏளனத்தையும் ஆதாரமாக வைக்கின்றனர். ஆனால் இறைவன் இது அன்னாரின் உண்மைத்துவத்திற்கான சான்றாக எடுத்துக் காட்டுகின்றான். உண்மையான நபி தமது மிஷனில் நிச்சயமாக வெற்றி பெறுவார். முழு உலகத்தின் எதிர்ப்பினாலும் அவர்களுக்கு எந்த பிரச்சனையும் வருவதில்லை என்பதும் இறைவன் உண்மை நபிக்கான ஓர் அடையாளமாக எடுத்துக் காட்டுகின்றான். எனவே அல்லாஹ் கூறுகின்றான்:

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِيْ ۚ اِنَّ اللّٰهَ قَوِيٌّ عَزِيْزٌ

அதாவது அல்லாஹ்வும் அவனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவர் என்று அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் மிக்கவனும் வெற்றிக்குரியவனுமாவான்.

இந்த விஷயத்தில் இரண்டு புத்தகங்கள் ஒன்று, சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் ஆ.ஹ எழுதிய ஸில்ஸிலா அஹ்மதிய்யா மற்றும் ஜமாஅத்தின் வரலாற்றாசிரியர் மவ்லானா தோஸ்து முஹம்மது ஷாஹிது அவர்கள் எழுதிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக எடுத்துரைக்கின்றோம்.

**குடும்பம்:** ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புகழ்பெற்ற ஈரானிய குடும்பமாகிய பர்லாஸ் என்ற குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார். அன்னாரின் குடும்பம் ஒரு அரச குடும்பமாக இருந்தது. அதன் கொள்ளுப் பாட்டனார் மிர்ஸா ஹாதி பேக் ஆக இருந்தார். அன்னாரின் குடும்பம் ஓர் அரசக் குடும்பமாக இருந்தது. இவர்கள் 1530–ஆம் ஆண்டு கஷ் என்ற இடத்திலிருந்து தமது குடும்பத்துடன் பஞ்சாபில் நுழைந்தார்கள். மேலும் காதியானின் முன்னுதாரணமாகத் திகழும் அரசாங்கத்தின் அடிப்படையை நிலைநாட்டினார்கள்.

இந்த அரசாங்கம் 1802 வரை நிலைபெற்றது. அன்னாரின் பாட்டனார் மிர்ஸா அத்தா முஹம்மது அவர்களின் காலத்தில் இந்த அரசை சீக்கியர்கள் கைப்பற்றினர். ஆக, அன்னாரின் குடும்பத்திற்கு கபூர்தலாவில் அடைக்கலம் தேட வேண்டியதாயிற்று. மேலும் மகாராஜா ரஞ்சித் சிங்கின் காலத்தில் திரும்ப காதியானுக்கு வந்தார்கள். பிறகு அன்னாரின் தந்தை மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்களுக்கு தமது நாட்டின் தமது ஆளுமையில் இருந்தவற்றில் ஐந்து கிராமங்கள் திரும்பக் கிடைத்தன.

**பிறப்பு:** ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் சிராக் பீபீ அவர்களின் அருளுக்குரிய வயிற்றிலிருந்து 14 ஷவ்வால் 1250–ஆம் ஆண்டு ஹிஜ்ரி 13 பிப்ரவரி 1835 –ல் பிறந்தார்கள். ஃபஜ்ர் வேளையில் வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் பிறப்பு நடைபெற்றது. ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களைப் போன்று இவர்களது பிறப்பிலும் அற்புதத்தன்மை காணப்பட்டது. ஏனென்றால் முஹ்யுத்தீன் இப்னு அரபியின் முன்னறிவிப்பிற்கேற்ப அன்னார் இரட்டையர்களாகப் பிறந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஆரம்பத்திலிருந்தே கஅபத்துல்லாஹ் எனது வீடாகவும், நல்லவர்கள் எனது சகோதரர்களாகவும், இறைதியானம் எனது செல்வமாகவும், இறைபடைப்பினங்கள் எனது குடும்பமாகவும் இருந்தன.

ஒரு சாஹிபே கராமத் வலியுல்லாஹ் மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் அவர்கள் அன்னாரை குழந்தைப் பருவத்தில் பார்த்தபோது இவ்வாறு கூறினார்: இந்தக் காலத்தில் ஒரு நபி இருந்தால் இந்த பையன் அத்தகு தகுதியானவனாக இருக்கின்றான். 6–7 வயதில் அன்னார் காதியானில் ஒரு ஹனஃபி ஆலிம் ஃபஸ்லே இலாஹி அவர்களிடம் குர்ஆன் கற்றுக் கொண்டார்கள். மேலும் ஒரு சில ஃபார்ஸி புத்தகங்களும் படித்தார்கள். கிட்டத்தட்ட பத்து வயதாகும்போது அஹ்லே ஹதீஸ் ஆலிம் மவ்லவி ஃபஸ்ல் அஹ்மது சாஹிபிடம் மிகக் கவனத்துடனும் முயற்சியுடனும் அரபி இலக்கணமும் கற்றுக் கொண்டார்கள். 17–18 வயதாகும்போது பட்டாலாவின் ஒரு ஷியா ஆலிம் மவ்லவி குல் அலி ஷாஹ்

அவர்களிடம் அன்னார் அரபி இலக்கணம், தர்க்கம், ஹிக்மத் மற்றும் அந்தக் காலத்தில் இருந்த வேறு ஒரு சில விஷயங்களையும் கற்றுக் கொண்டார்கள்.

மேலும் மருத்துவத்தின் ஒரு சில புத்தகங்கள் தமது தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். கல்வியின் காலக்கட்டத்தில் அன்னார் முதல் முறையாக கனவின் நிலைமையில் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் நாற்காலியில் உட்கார்ந்து மேற்கூரையின் பக்கம் போய் விட்டதாகவும் அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் சூரிய சந்திர கதிர்களைப் போன்று பிரகாசிப்பதாகவும் அன்னார் கனவில் கண்டார்கள்.

**ஸியால்கோட்டில் இஸ்லாத்தின் தப்லீக் :**

1864 முதல் 1867 வரை அன்னார் வேலைக்காக ஸியால்கோட்டில் இருந்தார்கள். அன்னார் திருக்குர்ஆன் ஓதுவதிலும் இறை வணக்கத்திலும் படைப்பினங்களுக்கு தொண்டாற்றுவதிலும், கிறித்தவர்கள் பஞ்சாபை – பஞ்சாபிலும் சியால்கோட்டை – கிறித்தவத்தைப் பரப்புவதற்கான மையமாகக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அங்கு இஸ்லாத்தைப் பரப்புவதற்கும், கிறித்தவத்தை மறுப்பதற்குமான எழுச்சியான எதிர்ப்பின் வாசலை திறந்தார்கள். குறிப்பாக ஸ்காச் மிஷனைச் சேர்ந்த புகழ்பெற்ற பாதிரியான பட்லர் என்பவருடன் அவர்கள் மாபெரும் விவாதங்கள் செய்தார்கள்.

**விவாதங்களிலிருந்து பின்வாங்குதல் மற்றும் நற்செய்தி:**

அன்னார் சியால்கோட்டிலிருந்து திரும்ப காதியானுக்கு வந்தார்கள். மேலும் மார்க்க மற்றும் சமுதாயத் தொண்டில் மூழ்கிக் கொண்டிருந்தார்கள். 1868 –ல் அன்னார் இறை நோக்கத்திற்காக மட்டும் முஹம்மது ஹுஸைன் பட்டாலாவியுடன் விவாதம் செய்வதிலிருந்து விலகினார்கள். மேலும் ஹனஃபிகள் பிரச்சனை கிளப்பியும் அன்னார் ஹதீஸ்களை விட திருக்குர்ஆனுக்கு முக்கியத்துவம் இருக்கின்றது என்று வெளிப்படையாக கூறியபோதும் இறைவன் இந்த நற்செய்தியை வழங்கினான். அன்னாரிடம் இறைவன் இவ்வாறு கூறினான்: உமது இறைவன் உம்முடைய இந்தச் செயலின் காரணமாக திருப்தி அடைந்து விட்டான். அவன் உனக்கு எந்த அளவுக்கு அருளை வழங்குவான் என்றால் அரசர்கள் உமது ஆடைகளிலிருந்து அருளைப் பெறுவர்.

**பேனாவின் ஜிஹாது ஆரம்பம்:**

1872 –ல் அன்னார் இஸ்லாத்தின் ஆதரவிற்காக பேனாவுடன் ஜிஹாதை ஆரம்பித்தார்கள். பிரபல்யமான பத்திரிகை மன்ஷூர் முஹம்மதி ஆஃப் பங்களூருவிலும் மற்ற சில பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார்கள். கிட்டத்தட்ட 1873 –ல் அன்னார் கவிதைகள் மூலமாக இஸ்லாத்தின் உண்மையை வெளியிட ஆரம்பித்தார்கள்.

**நோன்புகளுக்கான மகத்தான முயற்சி:**

1875 –ல் அன்னார் ஒன்பது மாதங்கள் நோன்பு வைத்துக் கொண்டு மகத்தான ஆன்மீக முயற்சியை மேற்கொண்டார்கள். அதில் அன்னாருக்கு ஆன்மீக உலகு சுற்றிக்காட்டப்பட்டது. மேலும் சென்ற காலத்தின் இறை தூதர்கள், ஸாலிஹீன்கள், ஹஸ்ரத் அலி மற்றும் ஃபாத்திமா, ஹஸன், ஹுஸைன் ஆகியோரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அன்னார் விழித்திருக்கின்ற நிலையிலேயே தரிசித்தார்கள்.

**மதிப்பிற்குரிய தந்தையின் மரணத்திற்குப் பிறகு அதிகமான இல்ஹாம்களின் ஆரம்பம்**

2 ஜூன் 1872 –ல் அன்னாரின் தந்தை மதிப்பிற்குரிய மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபின் மரணம் நிகழ்ந்தது. இத்துடன் அன்னாருக்கு மிக அதிகமாக இல்ஹாம் இறங்க ஆரம்பித்தது.

இதற்குப் பிறகு அன்னார் முழு நேரமும் மார்க்கத் தொண்டு செய்வதில் மூழ்கி விட்டார்கள். மேலும் ஆரிய சமாஜத்தின் மீது முழு ஆற்றலுடன் தாக்குதல் செய்ய ஆரம்பித்தார்கள். இதில் இஸ்லாத்திற்கே வெற்றி கிடைத்தது.

**பராஹீனே அஹ்மதிய்யாவின் வெளியீடு:**

1880 முதல் 1884 வரை அன்னாரின் அருளுக்குரிய பேனாவிலிருந்து புரட்சிகரமான புத்தமான பராஹீனே அஹ்மதிய்யா வெளியிடப்பட்டது. இதன் காரணமாக இந்தியாவில் ஒரு புரட்சி ஏற்பட்டது.

அன்னாரின் பரிசுத்தமான எழுதுகோலினால் பராஹீனே அஹ்மதிய்யா போன்ற கருத்துச் செறிவுள்ள நூல் வெளியானது. அதன் மூலமாக இந்தியா, பாகிஸ்தான் துணைக்கண்டத்தில் ஒரு பேரோசை எழுந்தது. மாற்று மதத்தினர்களின் தாக்குதல்களினால் உயிரை விட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் பராஹீனே அஹ்மதிய்யா போன்ற நூலின் மூலம் ஏற்பட்ட இஸ்லாத்தின் தற்காப்பினால் ஒரு புது வாழ்வையும், புது ஆற்றலையும் உணரத் தொடங்கினர். மேலும் அபூ ஸயீது முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அட்வகேட் அஹ்லே ஹதீஸ் ஹஸ்ரத் சூஃபி அஹ்மது ஜான் லூதியானவி, மவ்லானா முஹம்மது ஷரீஃப் பன்க்லூரி போன்றவர் இந்த புத்தகத்தை நிகரற்ற சாதனையாக ஒப்புக் கொண்டார்கள்.

**இறைவன் புறமிருந்து வந்ததாக வாதம் செய்வதும் அடையாளத்தை கண்டு கொள்ள உலகளாவிய அழைப்பும்:**

1882 மார்ச் மாதம் அன்னாருக்கு இறைவனால் நியமிக்கப்படுதல் என்னும் ஆடை அணிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகு 1884 மற்றும் 1885 –ல் உலகத்தில் உள்ள முஸ்லிம் அல்லாத தலைவர்களுக்கு அடையாளம் காட்டுவதற்காக உலகளாவிய அளவில் அழைப்பு விடுத்தார்கள். இதற்காக அன்னார் உருதுவிலும் ஆங்கிலத்திலும் 20 ஆயிரம் பிரசுரங்களை பதிவுத் தபாலில் அனுப்பினார்கள். ஒவ்வொரு எதிரியையும் நாம் போட்டிக்கு அழைத்தோம். ஆயினும் எவரும் போட்டிக்கு முன்வரவில்லை.

**அருளுக்குரிய குடும்பத்தின் அடிக்கல் மற்றும் முஸ்லிஹ் மவ்வூது தொடர்பான முன்னறிவிப்பு:**

நவம்பர் 1884 –ல் ஹஸ்ரத் ஹாஜா மீர் தர்து (ரஹ்) சாஹிபின் பேரன் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்களின் மகள் ஹஸ்ரத் ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அன்னாரின் திருமண உறவில் வந்து விட்டார்கள். இவ்வாறு இறைவன் முழு உலகத்திற்கும் உதவிக்காக ஓர் அருளுக்குரிய குடும்பத்தினருக்கான அடிக்கல் நாட்டினார்கள். 1886 –ல் அன்னார் இறை கட்டளைக்கேற்ப ஹோஷியார்பூரில் நாற்பது நாட்கள் இறைதியானத்தில் இருந்தார்கள். அதன் விளைவாக அன்னாருக்கு கலப்பற்ற தன்மை உள்ளவரைக் குறித்தும் தமது குடும்பத்தைக் குறித்தும் பல்வேறு நற்செய்திகள் கிடைத்தன. மேலும் முஸ்லிஹ் மவ்வூது என்ற அருளுக்குரிய மகனைக் குறித்தும் செய்தி கிடைத்தது. எனவே 12 ஜனவரி 1889–ல் முஸ்லிஹ் மவ்வூதின் பிரகாசமான பிறப்பு நடைபெற்றது.

**நட்சத்திரங்கள் வீழ்தல் பற்றிய முன்னறிவிப்பு:**

1885 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு சிறப்பான அடையாளத்தை காட்டினான். அதாவது 27, 28 நவம்பர் 1885 –ன் இடையிலுள்ள இரவில் நட்சத்திரங்கள் உடைந்துபோகும் ஒரு காட்சி காட்டப்பட்டது. இந்த இரவில் எந்த அளவுக்கு அதிகமாக நட்சத்திரங்கள் உடைந்தன என்றால் அன்று கதிர்களின் மழை பெய்வதுபோன்று இருந்தது. இந்த அளவுக்கு நட்சத்திரங்கள் உடைவதன் பொருள் இனி இந்த உலகில் இராணுவம் அசாதாரண முறையில் செயல்படும் என்று உவமையாகக் கூறப்படுவதாகும்.

**லூதியானாவில் பைஅத் நிகழ்ச்சி:**

23 மார்ச் என்ற அருளுக்குரிய நாள் அஹ்மதிய்யா வரலாற்றில் மிகவும் சிறந்த நாளாகத் திகழ்கிறது. ஏனென்றால் இதே நாளில் ஹஸ்ரத் சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் லூதியானாவின் மொஹல்ல ஜதீதில் உள்ள வீட்டில் முதன் முறையாக பைஅத் நிகழ்ச்சி நடைபெற்றது. 40 நபர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். மேலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவதாக வாக்குறுதி செய்தார்கள். முதன் முதலாக பைஅத் செய்யக் கூடிய நல்வாய்ப்பு முதல் கலீஃபத்துல் மஸீஹ் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் பேரவி பெற்றுக் கொண்டார்கள்.

**மஸீஹ் வாதம்:**

1890 –ன் இறுதியில் இறை தூதர் மஸீஹ் இப்னு மர்யம் வஃபாத்தாகி விட்டார்கள். மேலும் அவர்களின் ஆடையில் வாக்குறுதிக்கேற்ப நீர் வந்திருக்கின்றீர் என்று அன்னாருக்கு சொல்லப்பட்டது. ஆகஸ்டு 1891 –ல் அன்னார் (அலை) அவர்கள் ஃபத்ஹே இஸ்லாம், தவ்ஸீஹே மராம், இஸாலே அவ்ஹாம் ஆகிய புத்தகங்கள் எழுதி அக்கால ஆலிம்களின் மீது அத்தாட்சியை நிறைவேற்றினார்கள். அது மட்டுமல்லாமல் லூதியானாவில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியுடனும் தில்லியில் மவ்லவி பஷீர் அஹ்மது சாஹிப் போப்பாலியுடனும் ஈடு இணையில்லாத விவாதம் செய்தார்கள்.

**மஹ்தி வாதம்:**

இஸ்லாத்தின் மஸீஹின் காலக்கட்டத்தில் எந்த மஹ்தியை குறித்து வாக்குறுதி செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த மஹ்தியும் நானே ஆவேன் என்று அன்னார் வாதம் செய்தார்கள். ஆனால் நான் எந்தப் போர் மற்றும் யுத்தத்திற்காகவும் அனுப்பப்படவில்லை. மாறாக, எனது பணி அமைதி மற்றும் சமாதானத்தின் வழியிலேயே நடைபெறும் என்று கூறினார்கள். இரத்தம் சிந்தக்கூடிய மஹ்தி வருவார் என்ற முஸ்லிம்களின் நம்பிக்கை தவறானதாகும் என்று அன்னார் நிரூபித்தார்கள்.

மஹ்தியும் மஸீஹும் இரண்டு நபர்கள் இல்லை. மாறாக இது ஒரு நபரின் இரண்டு பெயர் ஆகும் என்று கூறினார்கள். அதாவது மஸீஹிற்கு ஒப்பானவராக இருப்பதன் காரணத்தால் வரக்கூடிய வாக்களிக்கப்பட்டவர்களின் பெயர் மஸீஹ் ஆகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிழல் ஆனதால் மஹ்தி என்ற பெயர் வைக்கப்பட்டது. வாக்களிக்கப்பட்ட மஸீஹைத் தவிர வேறு மஹ்தி இல்லை என்று ஒரு ஹதீஸிலும் வருகின்றது.

**முதல் ஆண்டு மாநாடு:**

27 டிசம்பர் 1891 –ல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் ஆண்டு மாநாடு ளுஹர் தொழுகைக்குப் பிறகு மஸ்ஜிது அக்ஸா காதியானில் நடைபெற்றது. இதில் ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சியால்கோட்டி அவர்கள் ஹுஸூர் அவர்களின் ஆஸ்மானீ ஃபைஸலா என்ற நூலை வாசித்தார்கள். மேலும் மாநாடு நிறைவு பெற்றது. இந்த முதல் ஜல்ஸாவில் 75 நபர்கள் பங்கேற்றார்கள்.

**விக்டோரியா ராணிக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு**

1893 –ல் அன்னார் ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் என்ற பெயரில் ஓர் அறிவுப்பூர்வமான புத்தகம் எழுதினார்கள். இந்த புத்தகத்தில் விக்டோரியா ராணிக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி அழைப்பு விடுத்தார்கள். இதற்காக ஹஸ்ரத் ஹாஜா குலாம் ஃபரீது சாச்சட் ஷரீஃப் சாஹிப் போன்ற இறைவனை சார்ந்தவர் அன்னாருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள். 1897ல் ராணியின் ஜூபிலி நடைபெற்றது. அத்தருணத்தில் அன்னார் விக்டோரியா ராணிக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு மட்டும் தரவில்லை. மாறாக, இங்கிலாந்தில் ஓர் சர்வ சமய மாநாடு ஏற்பாடு செய்வதற்கான யோசனையும் முன் வைத்தார்கள்.

**மூன்று முக்கிய அறிவிப்புகள்:**

1895 என்ற வருடத்தின் சிறப்பு என்னவென்றால் இந்த வருடத்தில் அன்னார் இறைவனின் ஆதரவுடனும் உதவியுடனும் மூன்று அறிவுப்பூர்வமான வாதம் செய்தார்கள். இதன் மூலமாக இஸ்லாத்தின் வெற்றியின் ஒலி உயர்ந்தது. வலுவான சான்றுகளால் கீழ்வரும் விஷயங்களை நிரூபித்தார்கள்.

(1) அரபி மொழி அனைத்து மொழிகளுக்கும் தாய் ஆகும்.

(2) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கபர் காஷ்மீரிலுள்ள கான்யார் வீதியில் உள்ளது.

(3) சீக்கியர்களின் குரு குருநானக் முஸ்லிம் ஆவார்கள்.

அரபியில் போட்டியிடுவதற்கான அறைகூவல்

இறைவன் அன்னாரை இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக அனுப்பினான். மேலும் அன்னாருக்கு திருக்குர்ஆனின் அளவற்ற ஞானத்தையும் வழங்கினான். அன்னார் 1893 –ல் ஆலிம்களை அரபி மொழியில் தன்னிடம் மொழிச்செறிவு மற்றும் பொருட்செறிவுடன் திருக்குர்ஆனின் விளக்கவுரை எழுதுவதில் போட்டிக்கு அழைத்தார்கள். எனக்கு இறைவன் புறமிருந்து ஒரே இரவில் அரபியின் 40000 மூலச் சொற்கள் கற்றுத் தரப்பட்டன.

மேலும் எவராலும் அன்னாருடன் போட்டியிட இயலாத அளவிற்கு அல்லாஹ் அன்னாருக்கு அரபி மொழியில் முழு ஆற்றலை வழங்கினான். அன்னார் தமது இறுதிக் காலம் வரையும் இந்த சவாலை கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் யாருக்குமே அன்னாருடன் அரபி எழுத்துக்களுடன் போட்டியிட தைரியம் இருந்ததில்லை. அன்னார் எழுதிய மொத்த அரபி நூல்களின் எண்ணிக்கை 21 ஆகும்.

**சூரிய சந்திர கிரகணங்கள்**

1894 –ல் அல்லாஹ் அன்னாரின் ஆதரவில் ஒரு மகத்தான அடையாளத்தைக் காட்டினான். இது ஏற்கெனவே கூறப்பட்ட மஹ்தி தொடர்பான பழைய முன்னறிவிப்பிற்கேற்ப நடைபெற்றது. 1894 –ல் 1311 ஹிஜ்ரியில் ரமலான் மாதத்தில் சூரிய சந்திர கிரகணம் ஏற்பட்டது. இந்த கிரகணங்களுக்கு என்ன சிறப்பு இருக்கின்றது என்றால் இந்த கிரகணங்களின் தேதிகள் ஏற்கெனவே கூறப்பட்டிருந்தன. அதாவது ரமலான் மாதத்தில் இன்ன நாளில் கிரகணம் நடைபெறும் என்றும் அந்த சமயத்தில் ஒரு நபர் மஹ்தி வாதம் செய்திருப்பார். 1894 –ல் ஏற்கெனவே கூறப்பட்ட அனைத்து நிபந்தனைகளுக்கேற்ப கிரகணம் நடைபெற்றது. இதற்கு முன்னர் ஒருபோதும் இந்த அடையாளம் வெளிப்படவில்லை.

**ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்தைக் காப்பாற்றுவது தொடர்பான திட்டம்:**

1895 –ல் இந்திய அரசிலமைப்புத் திட்டம் 298 ஆம் பிரிவை சீராய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைத்துக் கொண்டு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார்கள். இந்த முயற்சியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

**ஜுமுஆ நாளில் விடுமுறைக்கான திட்டம்**

1 ஜூன் 1886 –ல் அன்னார் முஸ்லிம் பணியாளர்களுக்கு ஜுமுஆ நாளில் விடுமுறை கொடுக்க வேண்டும் என்று வைஸ்ராயிற்கு கடிதம் எழுதினார்கள்.

**சர்வ சமய மாநாடு:**

டிசம்பர் 1896 –ன் இறுதி வாரத்தில் லாஹூரில் ஒரு சர்வ சமய மாநாடு நடைபெற்றது. இதில் அன்னார் இஸ்லாத்தின்

உண்மையை வெளிப்படுத்தக் கூடிய உரிமையை அன்னார் செலுத்தினார்கள். அன்னார் 'இஸ்லாத்தின் போதனைகளின் தத்துவ ஞானம்' என்ற தலைப்பில் அறிவுப்பூர்வமான ஒரு கட்டுரையை எழுதினார்கள். அதை ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி சாஹிப் சிறந்த முறையில் வாசித்தார்கள். இந்த மாநாட்டிற்கு முன் இந்த கட்டுரை மற்ற கட்டுரைகளை விட மிகைத்து நிற்கும் என்றும் அன்னார் விளம்பரத்தின் மூலமாக முன்னறிவித்திருந்தார்கள். ஆக, இவ்வாறே நடைபெற்றது. மேலும் அன்னாரின் மூலமாக இஸ்லாத்திற்கு மகத்தான வெற்றி கிடைத்தது. இதை ஏற்றுக் கொண்டு உருது, ஆங்கில செய்தித்தாள்களிலும் செய்திகள் வெளிவந்தன.

**முன்னறிவிப்பிற்கேற்ப லேக்ராமின் மரணம்:**

பண்டிட் லேக்ராமின் தொடர்பு ஆரிய சமாஜத்துடன் இருந்தது. இஸ்லாத்தை, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப் பேசி வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லேக்ராமிடம் இந்த விஷயத்தைக் குறித்து கேள்வி எழுப்பியபோது நீங்கள் என்னை குறித்து என்ன வேண்டுமானாலும் முன்னறிவிப்பு செய்யுங்கள் என்று அகங்காரத்துடன் கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆறு வருடங்களுக்குள் லேக்ராம் மரணமடைவார் என்று முன்னறிவிப்பு செய்தார்கள். 2 மார்ச் 1897–ல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏசக்கூடிய இந்தக் கொடியவன் லேக்ராம் கொலை செய்யப்பட்டான்.

**அஹ்மதி அல்லாதவர்களின் பின்னால் தொழாமல் இருப்பது மற்றும் அவர்களுடன் திருமண உறவு வைக்காமல் இருப்பது குறித்த கட்டளைகள்:**

1898 –ல் அன்னார் இறை கட்டளைக்கேற்ப இரண்டு கட்டளைகளை அறிவித்தார்கள். முதலாவது, இனிமேல் எந்த அஹ்மதியும் அஹ்மதி அல்லாதவர்கள் தொழ வைக்கும்போது அவர்களுக்குப் பின்னால் தொழக் கூடாது. இந்தக் கட்டளையை அன்னார் 1900 –ல் எழுத்துப் பூர்வமாகவும் வெளியிட்டார்கள். இரண்டாவது, இனிமேல் எந்தவோர் அஹ்மதி பெண்ணையும் அஹ்மதி அல்லாதவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கக் கூடாது.

**பஞ்சாபில் பிளேக் நோய் பரவலும் ஜமாஅத்தின் அதாசாரண வளர்ச்சியும்**

பிளேக் பரவக் கூடிய ஒரு நோயாகும். அதன் கிருமிகள் எலிகள் மூலமாக பரவுகிறது. இந்த நோய் இயற்கையாகவே வருகின்றது. எனவே ஆரம்பத்தில் இந்த நோய் மும்பையில் பரவ ஆரம்பித்தபோது அது பஞ்சாபில் இன்னும் பரவவில்லை. 1898 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். கனவில் அன்னார் பார்த்தது என்னவென்றால், பஞ்சாபில் ஒரு சில நபர்கள் கருப்பு நிறத்திலுள்ள வெறுப்பை உருவாக்கும் தாவரங்களை நடுகின்றனர். அப்போது அன்னார் அவர்களிடம் இது என்ன தாவரங்கள் என்று கேட்டபோது அது பிளேக் நோயின் தாவரங்கள் என்றும் இது இனி பஞ்சாபில் பரவ ஆரம்பிக்கும் என்றும் பதில் கூறினர்.

மேலும் மக்கள் ஆன்மீகத்திலிருந்து தொலைவில் சென்று விட்டதனாலும் அவர்களின் நிலைமை மோசமாகி விட்டதன் காரணமாகவும் இந்த நோய் பரவும் என்றும் அன்னாருக்கு கூறப்பட்டது. இந்த பிளேக்கின் காரணமாக இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கும் அன்னாரை நிராகரித்தவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை உருவாக்கினான். பிற மக்களுக்கு அடையாளம் காட்டுவதற்காக அவன் அன்னார் (அலை) அவர்களின் அத்–தார் என்னும் வீட்டில் இருந்தவர்களை காப்பாற்றினான்.

**இஃஜாஸுல் மஸீஹ் மற்றும் துஃபா கோல்டவிய்யாவின் வெளியீடு:**

28 ஆகஸ்டு 1900 –ல் கோல்டவிய்யா என்ற ஊரைச் சார்ந்த புகழ்பெற்ற ஆலிம் மெஹர் அலி ஷாஹ் என்பவரை தஃப்ஸீர் எழுதும் போட்டிக்கு அழைப்பு விடுத்தார்கள். பீர் சாஹிப் இந்த சவாலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஹுஸூர் அவர்கள் அவர் மீது இரண்டு முறையாக அத்தாட்சியை முழுமை செய்தார்கள். எனவே ஒன்று, இஃஜாஸுல் மஸீஹ் என்ற பெயரில் சூரா ஃபாத்திஹாவின் விளக்கத்தை இலவசமாக அச்சடித்து வெளியிட்டார்கள். அரபு நாடுகளிலும் பிற நாடுகளிலும் இந்த புத்தகம் அதிக அளவில் வெளியிடப்பட்டது. இந்த புத்தகத்தில் அன்னாரின் உண்மைத்துவத்தின் ஆதாரங்கள் மறுக்க முடியாத அளவில் எழுதினார்கள். பீர் மெஹர் அலி இதற்கு பிறகு பதில் கூறுவதற்கு ஆற்றல் இல்லாமல் போய் விட்டது.

**குத்பா இல்ஹாமிய்யா:**

1900 –ன் ஆரம்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நுட்பமான அறிவுப்பூர்வமான ஓர் அற்புதம் நிகழ்ந்தது. ஈதுல் அழ்ஹாவின் நாளில் அல்லாஹ், நீர் அரபியில் குத்பா கொடுக்க வேண்டும். நான் உனக்கு உதவி செய்வேன் என்று கட்டளையிட்டான். ஆனால் இதற்கு முன்னர் அன்னார் ஒருபோதும் அரபியில் குத்பா கொடுத்ததில்லை என்றாலும் அன்னார் குத்பா கொடுப்பதற்காக நின்று கொண்டு குர்பானியின் தத்துவத்தைக் குறித்து ஒரு நீண்ட குத்பாவை வழங்கினார்கள். இது குத்பா இல்ஹாமிய்யா என்ற பெயரில் வெளியிடப்பட்டிருந்தது.

**அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெயர்:**

1901 –ல் அரசு சார்பாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறுவதாக இருந்தது. அன்னார் 4 நவம்பர் 1900 –ல் ஒரு பிரசுரம் மூலமாக கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜமாலி பெயர் அஹ்மது என்று இருந்தது. ஆக இந்த பெயரைக் கருத்தில் கொண்டு ஜமாஅத்தின் பெயர் ஃபிர்கா அஹ்மதிய்யா என்று வைக்கப்படுகின்றது. இந்தப் பெயரைக் கேட்ட உடனேயே அனைவரும் இந்த ஜமாஅத் உலகில் சமாதானத்திற்காக தோன்றியுள்ளது என்பதை புரிந்து கொண்டார்கள்.

**ரிவியூ ஆஃப் ரிலீஜியனின் ஆரம்பமும் வேறு சில பத்திரிகைகளும்:**

1902 –ல் அன்னாரின் கட்டளைக்கேற்ப உருது மொழியிலும் ஆங்கிலத்திலும் ரிவியூ ஆஃப் ரிலீஜியன் என்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் மேற்கத்திய நாடுகளில் தப்லீகின் புதிய அதிகாரம் தொடங்கியது. இந்த பத்திரிகை ஓர் ஆன்மீக சூழலை உருவாக்கியது.

**அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அற்புதகரமான வளர்ச்சி:**

இந்த நாடு பிளேக்கினால் பாதிக்கப்படும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தியைப் பெற்று முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். இந்த இக்கட்டான சூழலில் அன்னாரையும் அன்னாரின் ஜமாஅத்தைச் சார்ந்தவரையும் அற்புதமான முறையில் காப்பாற்றுவான் என்றும் முன்னறிவித்திருந்தார்கள். 1902 –ல் பிளேக் நோய் எல்லா இடத்திலும் மிகப்பெரிய நாசத்தை விளைவித்தது. ஆனால் கலப்பற்றவர்களையும் குறிப்பாக அன்னாரின் வீட்டில் இருந்தவர்களையும் அல்லாஹ் இந்த நோயிலிருந்து காப்பாற்றினான். இறைவனின் அந்த அற்புதத்தைப் பார்த்து பல்வேறு தூய ஆன்மாக்கள் அன்னாரின் ஜமாஅத்தில் இணைந்தனர். கிஷ்தி நூஹ், தாஃபிவுல் பலா அந்தக் காலத்தில் எழுதப்பட்ட நினைவு கூறத்தக்க புத்தமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூதின் போதனைகளின் சுருக்கம்:**

1902 –ல் பிளேக் நோய் பரவியபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கினார்கள். மேலும் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக கிஷ்தி நூஹ் என்ற பெயரில் அன்னார் ஒரு புத்தகம் எழுதினார்கள். அதாவது இந்த அழிவின் புயலின் தருணத்தில் இந்த புத்தகம் நூஹின் கப்பலைப் போன்று இருந்தது. இதில் அமர்ந்து மக்கள் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இந்தப் புத்தகத்தில் அன்னார் தமது போதனைகளின் சுருக்கம் எடுத்துக் கூறி அன்னார் தமது ஜமாஅத்திடமிருந்து என்னென்ன கொள்கைகளையும் செயல்களையும் எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**ஜமாஅத்தில் சந்தாக்களின் திட்டம்:**

ஒவ்வொருவரும் கட்டாயமாக ஒவ்வொரு மாதமும் தவறால் சந்தா கொடுக்க வேண்டும் என்ற எந்த திட்டமும் அன்னார் சார்பாக தீட்டப்படவில்லை. ஜமாஅத் உறுப்பினர்கள் தாமாகவே முன்வந்து அனுப்பி வைக்கின்றனர். அந்த சந்தாக்களின் மூலம் ஜமாஅத்தின் அனைத்து செலவுகளும் நிறைவேற்றப்பட்டு வந்தன. ஆனால் ஒரு சமயத்தில் ஜமாஅத்தின் செலவு அதிகமாகி விட்டது. குறிப்பாக விருந்தினர் இல்லத்திற்கான செலவு அதிகமாகி விட்டது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு விளம்பரம் மூலம் ஒவ்வொரு அஹ்மதியும் மாதாந்திர சந்தா கொடுக்க வேண்டும் என்ற வழிகாட்டல் வெளியிட்டார்கள். இதற்கு எந்த விகிதாச்சாரமும் அன்னார் குறிப்பிடவில்லை. தொகையை நிச்சயிப்பது ஒவ்வொருவருடைய விசுவாசம் மற்றும் பொருளாதார நிலைமைக்கு விடப்பட்டது. ஆனால் எவ்வளவு தொகை ஒவ்வொருவராலும் அனுப்ப இயலும் என்பதைக் குறித்து தகவல் தருவதைக் கட்டாயமாக்கினார்கள். இது நமது ஜமாஅத்தின் சந்தாக்களின் கட்டடத்திற்காக வைக்கப்பட்ட முதல் அடிக்கல் ஆகும்.

**இஃஜாஸே அஹ்மதியின் வெளியீடு:**

1902 ஆம் ஆண்டு நவம்பர் 8 முதல் 12 வரையுள்ள நான்கு நாட்களில் மட்டும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமிர்தசரஸ் விவாதத்தைக் குறித்து ஒரு புத்தகம் எழுதினார்கள். அதில் அன்னார் ஓர் அற்புதமான அரபிக் கவிதையும் எழுதினார்கள். அதை 15 நவம்பர் அன்று வெளியிட்டார்கள். அதன் பெயர் இஃஜாஸே அஹ்மதி என்று வைத்தார்கள். பிறகு இவ்வாறே இதே கட்டமைப்பில் ஓர் அரபிக் கவிதையை 5 நாட்களில் எழுதினால் அவர்களுக்கு எந்த தாமதமுமின்றி நான் 1000 ரூபாய் தருவேன் என்று ஸனாவுல்லாஹ் அமிர்தரசுக்கும் பிற ஆலிம்களுக்கும் அறைகூவல் விடுத்தார்கள். மேலும் அத்துடன் அவர்களால் ஒருபோதும் இவ்வாறு எழுத முடியாது என்றும் இறைவன் அவர்களுடைய பேனாக்களை உடைத்து விடுவான்; அவர்களின் உள்ளங்களை பைத்தியமாக்கி விடுவான் என்றும் முன்னறிவிப்பு செய்தார்கள்.

**வழங்குகளின் தொடர்:**

1903 முதல் 1905 வரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழக்குகளின் ஒரு புதிய தொடரை சந்திக்க வேண்டியது வந்தது. இதன் ஆரம்பத்தில் அன்னாருக்கு ஜெஹ்லம் பயணம் மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது. இதில் அன்னாருக்கு அல்லாஹ் மாபெரும் புகழை வழங்கினான். மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் அன்னாரின் ஜமாஅத்தில் இணைந்தனர். ஜெஹ்லம் வழக்கில் அன்னார் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டு விடுதலை கிடைத்தது. ஆனால் சிறிது காலத்திலேயே மவ்லவி கரம்தீன் என்பவரும் ஜெஹ்லம் நீதிமன்றத்தில் மீண்டும் ஒரு வழக்கை தொடர்ந்தார். அது அங்கிருந்து மாறி காழ்ப்புணர்ச்சி கொண்ட ஓர் ஆரியர் சந்து லால் என்பவரின் நீதிமன்றத்திற்கு வந்தது; லேக்ராம் கொலைக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இரத்தத்தைக் குடிக்கத் துடித்த ஆரியர்கள் இந்த சந்தர்ப்பத்தை நல்ல வாய்ப்பாகக் கருதினர். மேலும் சந்து லால் என்பவருடன் சேர்ந்து அன்னாரை சிறைப்பிடிக்க திட்டம் தீட்டினர். ஆனால் சந்துலால் இறைவனின் கோபத்திற்கு ஆளானான். மேலும் அன்னார் உயர்நீதி மன்றத்தில் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டார்கள். இது 7 ஜனவரி 1905 –ல் நடைபெற்றது.

**மினாரத்துல் மஸீஹ்:**

13 மார்ச் 1903 ஜுமுஆ நாள் அன்று ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை நிறைவேற்றுவதற்காக மினாரத்துல் மஸீஹிற்கு அடிக்கல் நாட்டினார்கள். இது இரண்டாவது கிலாஃபத்தின் ஆரம்பக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

**தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியின் திறப்பு விழா:**

18 மே 1903 அன்று காதியானில் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி திறக்கப்பட்டது. இந்த விழாவில் அன்னார் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் பைத்துத் துஆவில் இந்த கல்லூரிக்காக அதிகமாக துஆ செய்தார்கள். அதன் விளைவாக தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி ஓர் உயிருள்ள அத்தாட்சியாகத் திகழ்ந்தது.

**300 வருடங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வெற்றியைக் குறித்துள்ள முன்னறிவிப்பு:**

14 ஜூலை 1903 –ல் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் காபூலில் ஷஹீதாக்கப்பட்டார்கள். இந்த சம்பவத்திற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தஸ்கிரத்துஷ் ஷஹாததைன் என்ற நூலை எழுதினார்கள். இதில் மிக வேதனையுடன் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களுடைய ஷஹாதத்தைக் குறித்து விவரமாக எழுதினார்கள். அன்னார் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களை நோக்கி கூறினார்கள். அப்துல் லத்தீஃப் அவர்களே! உங்கள் மீது ஆயிரம் ரஹ்மத்துகள் இறங்கட்டுமாக. ஏனென்றால் நீர் என் வாழ்நாளிலேயே விசுவாசத்தின் முன்மாதிரியைக் காட்டினீர். மேலும் இன்னும் 300 வருடங்களில் ஜமாஅத் முழு உலகின் மீதும் வெற்றி அடையும் என்ற மகத்தான முன்னறிவிப்பையும் செய்தார்கள்.

ஆக, அன்னார் கூறுகின்றார்கள்: உலகத்தில் ஒரு மார்க்கம் மட்டும் இருக்கும்; ஒரு தூதர் மட்டும் இருப்பார். நான் ஒரு விதையை விதைக்க வந்திருக்கின்றேன். எனது கையால் அந்த விதை விதைக்கப்பட்டது. இனி அது வளர்ச்சி அடையும். அது கனி தரும். அதை யாராலும் தடுக்க முடியாது.

**நாட்டின் முக்கியமான பல ஊர்களிலும் ஈமானை வலுவூட்டும் சொற்பொழிவுகள்:**

ஹுஸூர் 3 செப்டம்பர் 1904 அன்று சியால்கோட்டில் பொதுக் கூட்டங்களில் ஈமானை வலுவூட்டும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதற்கு அடுத்த வருடம் அக்டோபர் 1905 –ல் இறுதியாக டில்லி பயணத்தை மேற்கொண்டார்கள். அங்கிருந்து திரும்புவதில் லூதியானாவில் 6 நவம்பர் அன்றும் அமிர்தரசஸில் 9 நவம்பர் அன்றும் சொற்பொழிகள் நிகழ்த்தினார்கள்.

**பேரழிவை ஏற்படுத்தக்கூடிய நிலநடுக்கமும் இறை முன்னறிவிப்பின் வெளிப்பாடும்:**

4 ஏப்ரல் 1905 –ல் ஓர் அபாயகரமான நிலநடுக்கம் ஏற்பட்டது. காங்கடா மாவட்டத்தில் உள்ள மிக அதிகமான அளவில் அழிவு

ஏற்பட்ட ஒரு மலையை மையப் பகுதியாகக் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த அழிவு அமிர்தரசஸில் மட்டும் நடக்கவில்லை. மாறாக பஞ்சாபின் ஒரு மிகப்பெரிய நிலப்பகுதியிலும் இதனால் பாதிப்பு ஏற்பட்டது. இந்த துன்பம் நிறைந்த நிலநடுக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சில மாதங்களுக்கு முன் வெளியிடப்பட்ட முன்னறிவிப்பிக்கேற்ப நிகழ்ந்தது.

அதன் வார்த்தைகள் இதுவாகும். عفت الديار محلها ومقامها அதாவது மனிதன் தங்குவதற்காக பயன்படுத்தும் நிரந்தர இடங்களும் தற்காலிக இடங்களும் அழிக்கப்படும் அளவில் ஒரு பேரழிவு வரவிருக்கின்றது. மீண்டும் இன்னொரு இல்ஹாம் வந்தது. வேதனைக்குரிய மரணங்கள் காரணமாக கியாமத்தின் காட்சி தென்படும். இரண்டு முன்னறிவிப்பிக்கேற்ப இந்த உலகம் கியாமத் போன்ற ஒரு காட்சியை தமது கண்ணால் பார்த்தது. மேலும் மிகத் தெளிவான முறையில் இரண்டு முன்னறிவிப்புகளும் நிறைவேறி விட்டன.

**மரணத்தைக் குறித்த இல்ஹாம்கள்:**

அன்னாருக்கு அக்டோபர் அல்லது டிசம்பர் 1905 –ல் கனவுகள் மற்றும் இல்ஹாம் மூலமாக அன்னாரின் மரணம் நெருங்கி விட்டது என்று அறிவிக்கப்பட்டது. டிசம்பர் 1905 –ல் வஸிய்யத் என்ற நூலை எழுதி தமது ஜமாஅத்திற்கு முக்கியமான அறிவுரைகளை வழங்கினார்கள்.

**இரண்டாவது வல்லமையின் செய்தி:**

இந்தப் புத்தகத்தில் அன்னார் எனக்குப் பிறகு இரண்டாவது வல்லமை அதாவது கிலாஃபத் நிலைபெறும் என்று குறிப்பாக விவரித்தார்கள்.

**பெஹஷ்தி மக்பரா மற்றும் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா:**

அல் வஸிய்யத் நூலின் மூலமாக அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அன்னார் பெஹஸ்தி மக்பராவை நிலைநாட்டினார்கள். அதன் வருமானத்தை மார்க்கத்தைப் பரப்புவதற்காக பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக அன்னார் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவை நிலைநாட்டினார்கள். இந்த ஜமாஅத்தின் பொருளாதார மற்றும் நிர்வாகப் பணிகளை அதனிடம் ஒப்படைத்தார்கள்.

**பைகாமே சுலஹ் (சமாதானத் தூது):**

லாஹூரில் தங்கியிருந்தபோது அன்னார் இந்த பைகாமே சுலஹ் (சமாதானத் தூது) என்ற நூலை எழுதினார்கள். இந்நூலில் முஸ்லிம்களும் இந்துக்களும் ஒற்றுமையாக இருப்பதன் பக்கம் அன்னார் கவனமூட்டினார்கள்.

**அன்னாரது மரணம்:**

அன்னார் மே 25–ஆம் தேதி பைகாமே சுலஹ் என்ற நூலை எழுதி முடித்தார்கள். அடுத்த நாள் காலை 9 மணி அளவில் அன்னாரது ஆன்மா இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மரணமடைந்த சமயத்தின் அன்னாரது வயது 73 ஆகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

உலகில் எவரும் எனக்கு பகைவர் அல்ல. கருணைமிக்க தாய் தனது குழந்தைகளை நேசிப்பது போன்று மனித இனத்தை நான் நேசிக்கின்றேன். இன்னும் சொல்வதென்றால் அதை விட அதிகமாகவே நான் நேசிக்கின்றேன். உண்மையை கொலை செய்கின்ற அந்த பொய்யான கொள்கைகளுக்கு மட்டுமே நான் எதிரியாக இருக்கின்றேன். மனிதர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வது எனது கடமையாகும்.

(ஆர்பயீன், ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 344)

:.பஸல் ஹமீது இலாஹி

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், திட்டச்சேரி

**பத்ர் பத்திரிகையை நீங்களும் படித்து உங்களது நண்பர்களையும், சகோதரர்களையும் இந்த பத்திரிகையை படிப்பதற்காக கவனமூட்டவும்**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் டிசம்பர் 2014 ஆண்டு பத்ர் பத்திரிகையின் சிறப்பு வெளியீட்டின் போது தமது தூதுச் செய்தியை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள் :

இந்த பத்திரிகை ஜமாஅத்தின் ஆன்மீக சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டது. மேலும் நமது முன்னோர்கள் நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தும் கூட தமது உயிரை அர்ப்பணித்தவாறு இப்பத்திரிகையை தொடர்ந்து இயங்கி வரும்படி செய்துள்ளனர். மேலும் அவர்களுடைய துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளால் தான் இன்று வரை இது தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றது என்ற இவ்விஷயத்தை பத்ர் துறையும், பத்ர் பத்திரிகையின் வாசகர்களும் எப்போதும் இதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் அதிகம் அதிகமான அஹ்மதிகள் இதைப் படிக்க வேண்டும். மேலும் இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதை இவ்விஷயமானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் தனது அருளால் இந்திய அஹ்மதிகளுக்கு குறிப்பாகவும், மற்ற நாடுகளில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கு பொதுவாகவும் இதைப் படிப்பதற்கும், இதனோடு தொடர்புள்ள அருள்களை சேகரிப்பதற்குமான நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது மிகவும் முக்கியமான மற்றும் எழுச்சியூட்டக்கூடிய இந்த கூற்றுகளுக்கேற்ப, இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவர்களிடம் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால்,

ஒவ்வொரு வீட்டிலும் பத்ர் பத்திரிகை படிப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகும். இதில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கூற்றுகள் மட்டுமின்றி ஹுஸூர் அவர்களுடைய குத்பா ஜுமுஆ பேருரை மற்றும் சொற்பொழிவுகள் மற்றும் ஹுஸூர் அவர்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய அறிக்கைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது. இதைப் படிப்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் கட்டாயமாகும்.

அல்லாஹ்வின் அருளால் பத்ர் பத்திரிகை தற்போது ஹிந்தி, வங்காளம், தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் ஒடியா ஆகிய மொழிகளிலும் வெளி வந்து கொண்டிருக்கின்றது.

அஹ்மதிகளில் எவர்கள் தற்போது வரை பத்ர் பத்திரிகையை வாங்கவில்லையோ அவர்கள் பத்ர் பத்திரிகையை தாமும் வாங்கி படிக்க வேண்டும். மேலும் தம்முடைய குழந்தைகள் மற்றும் வீட்டிலுள்ள இதர உறுப்பினர்கள் அனைவரையும் இந்த பத்திரிகையை படிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். பத்ர் பத்திரிகை முறையாக கிடைக்கவில்லை என்பது தொடர்பான புகாராக இருந்தாலும் சரி; அல்லது சந்தா செலுத்துவது தொடர்பான விஷயமாக இருந்தாலும் சரி கீழ்க்கண்ட எனது தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

+91 1872 224757 +91 94170 20616

managerbadrqnd@gmail.com

நவாப் அஹ்மது

(பத்ர் பத்திரிகையின் மேனேஜர்)